பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

அப்பாஸ் நாடகம்.

இஃது

நாகூர் ஆயுள்வேதிய
பகீர்முஹியித்தீன் குமாரர்

வாஞ்சூர் பகீர் அவர்களால்

தற்காலம் நாகூர் நாகப்பட்டணம் பினங்கு-சிங்கப்பூர்
இவ்வூர்களில் வழங்கும் வர்ணமெட்டுப்
பாட்டிராகப்படிக்கு ஒருவாறு
சேகரஞ் செய்ததை.

திருநெல்வேலிப்பேட்டை
சேயிப்பு காசீம் ராவுத்தர் குமாரர்
காசிமுஹியித்தீன் ராவுத்தரவர்களால்
பார்வையிடப்பட்டு, அச்சிட்ட பிரதிக்கிணங்க

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
அவர்களால் தங்களது
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது

இதன் விலை] 1953. [ரூபா. 1-8-0

103644

O-,892, A
N53

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

அப்பாஸ் நாடகம்.

கடவுள் வணக்கம்.

மருக்கம ழுக்துமானை மகிமையோ டரசுசெய்த
திருவள ரகுமதுசா செல்வகன் மகனப்பாஸின்
பெருமைசேர் நாடகத்தைப் பிரபல்ய மாகப்பாடக்
கருவினிற் கருவாயுற்றக் கத்தனேகாப்பு நீயே

நபிகள்நாயகம் துதி.

திருவொளி நிறைந்துயெங்குஞ் சிறப்புடன்தழைத்துநாளும்
குருமணி நபியுல்லாவை குவலயக் தன்னிற்போற்றி
மருமலர் நாலியார்கள் வளர் அசஹுபைஞர்பாதங்
கருதிபொ னெஞ்சிற்றூங்கிக்கதியுடன் றுதிசெய்வேனே.

ஒலிகள் நாயகம் துதி

மாதவ முஹம்மதுல்லா மகவழிப் பேரரப்துல்
காதிரு முஹியித்தீனின் கமலமெல் லடியைநெஞ்சப்
போதினி லிருத்திநாகூர் புரந்திடுஞ் செய்யிதப்துல்
காதிறு சாகமீது கழலடி புகழுவாமே

சபை விருத்தம்.

கந்தமுங்கமழ்ந்தென்னூறுங் காசினிக்கரசாய்வந்த
சுந்தரமிலங்குமக்கா மானகர்தன்னைச்சூழ்ந்த
அந்துமாநகரையாண்ட வகுமதுசாகிபீன்ற
சிந்தைசேர்மகனப்பாசு விளங்குநாடகஞ்சொல்வேனே

தோடையம் கொச்சகம்

பொன்னுலகும்வானுலகும் பூவுலகெல்லாம்படைத்தோன்
முன்னொளிவால்வந்துதித்த முஹம்மதுற்றசூல்நபியே
மன்னர்மன்னர்தான்புகழு மாநகரகுமதுசா
வுன்னுமகனப்பாசு வாடைபெறுந்தோடையுமே

தோடையம்—தருவு

ஆதிபெரியோன் கிருபையனாகி யெங்குமேநிறைந்து
சோதிமகுமூதுநபி துணையடியைப்போற்றி

மகிமையுடன்பகுதாதில் மகிழ்பெறவேயரசியற்றும்
முஹியித்தீனாண்டவர்கள் பாதமதுபோற்றி

ஆகமுடன்காரணங்கள் அநுதினமேபெருகுஞ்
சாஹுல் ஹமீதொலிதன் சரணமதுபோற்றி

வல்லபெரியோன்கிருபை வான்புவியெலா நிறைந்து
நல்லபெரியோர்பாதம் நான்றுதிசெய்வேனே

துய்யபிர பல்யமொடு துலங்குமக்துமாநகராசு
செய்யு புகழப்பாசுகதை செழிக்கவுரைப்பேனே

மங்கள-விருத்தம்

தென்றல்மணம்வீசிநிற்குந் திருவாவியின்கரையில்
வண்டினந்தேனுண்டுமலர் வாகிசைகள்பாடிநிற்கும்
எண்டிசைபுகழுமக்து மாநக ரேந்தலவர்பெற்றெடுத்த
கண்டுமொழி யப்பாசு காவலன்மேல்மங்களமே

மங்களத் தரு.

மங்களம் ஜெயமங்களம்
மங்களம் ஜெயமங்களம்

ஆதிபெரியோன்றனக்கும் அஹமது றசூல்நபிக்கும்
நீதியபூபக்கருக்கு நேசருமற்கத்தாப்புக்கும் (மங்களம்)

வண்மைபுருகான் தன்னை வகையாய்த்தெரிந்தெழுதும்
கோன்மையுது மானவர்க்குங் கொற்றவரலிபுலிக்கும் (மங்களம்)

அண்ணலசனு சனுருக்கு மசுகாபிமார்களுக்கும்
வண்மையிமாம் நால்வருக்கும்வளரபூசாலிஹுக்கும் (மங்களம்)

மூவுலகமேபுகழு முஹியித்தீனாண்டகைக்கும்
மேன்மைஹசன்குத்தூசுக்கு மென்ஷாஹமீதொலிக்கும் (மங்களம்)

அந்துமாநகரையாளுஞ் அருமநாசாகிபுக்கும்
விற்றைதெதியப்பாசுக்கும்விளங்யெதினவர்க்கும் (மங்களம்)

கட்டியக்காரன் வருகிற விருத்தம்

அட்டதிக்கெவையும்போற்ற யடையலர்கடுன்விவாழ்த்தத்
துட்டனிக்கிரகஞ்செய்ய துரைமன்னர்கப்பங்கட்ட
வெட்டுவாளருதசிங்கம் வேந்தரகுமதுசாவாயத்
கட்டியக்காரன் வந்துக் களறியிற்றோன்றினானே

கட்டியன் வருகிற தரு.

கட்டியக்காரனும் வந்தானே ஒய்யாரம்-சிங்காரமாகக்
கட்டியக்காரனும்வந்தானே.

கட்டியக்காரனும்வந்தான் கனகசபைகள் மெய்க்க
அட்ட-திசைபுகழும் அருமது சாதன்வாசல் (கட்டிய)

மத்தாபுச் சட்டையணிந்து பளபளென மருங்கிற்சல்லடம் புனைந்து
தங்கப்பணியிமார்பிற்றரித்துச்சரப்பணியும் அங்கமலர்கள்பொன்னால்
அருமதுசாயபுவாசல் (கட்டிய)

துள்ளும்மீசைமுறுக்கி நெற்றியிற் குட்டி துலங்கசபையையுருக்கி
வெள்ளித் தடியும்பிடித்துக்கையிற்றங்கப்பிரம்புக்கொண்டு
அன்னித்தருமஞ்செய்யும் அருமதுசாயபுவாசல் (கட்டிய)

சிங்கம்போலே முழங்கசபைகள்மெய்க்க தினந்தினங்கட்டியமுழங்க
எங்குந்துலங்கத்திேனே ரிருந்துவாழ்க நிதம்
அங்கந்துடித்தராசன் அருமதுசாய்புவாசல் (கட்டிய)

மந்திரி வருகிற விருத்தம்.

கன்னியர்வாழ்த்திப்போற்ற கட்டியமுழங்கிவாழ்த்த
அன்னதானங்கள் தானும் அடைவுடன்கொடுத்துநிற்கப்
பொன்னின்மாமணிகள் பூண்டு பூவையர்கடனஞ்செய்ய
வன்னிதக்கொலுவைகாடி மந்திரிவருகின்றானே

மந்திரி கொலுத் தரு

மந்திரிமோகி ஒயிலுடன் வந்தானே அழகாய்
மந்திரிமோகிதந்திரமாகவே மன்னரகுமதுசாகிபு
கொலுவைகாடி (மந்திரி)

அந்துமாககரமெங்கு மலங்கிர்தஞ் செய்யவே
சுந்தரத்துடனேவாழும் துலங்கத்தராசிடவே

துலங்கவே யெங்குமுழங்கவே சபை
தோன்றலகுமதுசா நீண்டகொலுவைகாடி (மந்திரி)

கவரிகாலஸைசயயெங்கும் கவிசையும்விரிய
காகரிககொம்புகளுஞ்சின்ன நவுபத்துமுழங்க
முழங்கவே யெங்கும் துலங்கவே
மோகனகுமதுசா வாசல்கொலுவைகாடி (மந்திரி)

மந்திரி சொல் விருத்தம்.

மகிதலம்புகழுமந்து மானகர்க்கரசாய்வந்த
அருமதுபாதுஷாதா னணிகொலுவதனைகாடி
வகையுடன்வஜீருமார்கள் வகைபலபணியும்பூண்டு
மகிழுடன்மந்திரிமோகி மகிபனுங்கொலுவில்வந்தான்

மந்திரி கட்டியனுக்குச்சொல் விருத்தம்

கட்டியக்காராகேளும் கருத்துடன்சொல்லக்கேளாய்
அட்டலோகங்கள் போற்றும் அருமதுசாகிபண்ணல்
இட்டமாய்க்கொலுவின்மீது மினிதுடன்வருகின்றூர்கள்
திட்டமாய்நகரமெங்குஞ் சிறப்பிக் கச்சொல்லுவயே

வலங்காரஞ் செய்யும்தரு

ஆனைமேல்வருகின்ற மன்னரே—அந்த
மாநகர்க்கதிபதிவாரார்காண்
சேனைபடைகள் பந்திபந்தியாய் நீங்கள்
சிறப்புட னலங்காரஞ் செய்யுங்கள்

தேரின்மேல் வருகின்ற மன்னரே-ஐந்து
தேசத்திற் கதிபதி வாராற்காண்
வீரியத்துடன் பந்தற்காற்களே-நீங்கள்
விதம்விதமாகவே காட்டுங்கள்

சிவிகைமேல் வருகின்ற மன்னரே-ஐந்து
சீமையோர்க் கதிபதி வாரார்காண்
புவியுள்ளோர் மகிழ்பெற காட்டுங்கள்-நீங்கள்
புகழ்பெற பந்தல் விஸ்தரியுங்கள்

தேசாதி தேசாதி மன்னரே-பல
திக்குள்ளோர்க் கதிபதி வாரார்காண்

நேசமுடனே யுங்கள் சிந்தையில்-நீங்கள்
நினைத்த தெல்லாம் வந்து சேளுங்கள்

அன்னதானஞ் செய்யு மன்னரே-எங்கள்
அருமதுசா கொலுவில் வாரார்காண்
வின்ன மில்லாமலே வாருங்கள்-நீங்கள்
விரும்பியஞ் சொகுத்தையுந் தொழுகுங்கள்

அன்ன நடையுள்ள கன்னியே- அந்த
மாநகர்க் கதிபதி வாரார்காண்
மின்னற் பிரவைபோல நிறைகுடம்-நீங்கள்
நிரப்பியே யலங்காரஞ் செய்யுங்கள்

கொஞ்சுங் கிளிபோல் வருமங்கையே-எங்கள்
கோமான குமதுசா வாரார்காண்
அஞ்சி பயந்து சுபுகு வொகத்திலே-நீங்க
ளதபுடனே சுனைப்பாடுங்கள்

மந்திரி கட்டியக் காரனுக்குச் சொல்விருத்தம்

அய்யமொன்றணுகாகளு மரசருக் கரசாய்வந்த
செய்யரிதானயேவல் செய்யுங் கட்டியனே கேளாய்
துய்யதோர் மலர்களேந்தி தூவியவரம்பை மாதை
வையகஞ் சிறக்கயிங்கே வகையுடனழைத்திடாயே

இரம்பைகள் வருகிற விருத்தம்

அந்தமா நகரையாளும் அஹமது பாதுஷாவுஞ்
சிந்தையின் மகிழ்ந்து சிங்காசன மதிற்சேரும் போது
இந்தருள் வதனக்கற்பி னிலங்கிய கன்னிமாது
விந்தையாய் மலர்கள் தூவ விரைவுடன் வருகிறாளே

இரம்பையின் தருவு கண்ணிகள்

வாலைப் பருவகன்னி மோகத்துடனே மலரேந்தினளே இன்னம்
வங்கணத்துடன் நீனேர் யெங்கும் பெருகநிதம் வாழி வாழி
அன்னம்போ னடையுள்ள கன்னியருங் கொலுவை நாடினளே நல்ல
அகமகிழ்ச் சினிதுடன் சகலநீனேர்களும் வாழி வாழி

கொஞ்சுங் கிளியதுபோல் வஞ்சியரும் கொலுவை நாடினனே வெகு
குணமுடன் தீனோர்கள் மனமகிழவே நிதம் வாழி வாழி

மங்கைக் கரசிகள் மிங்கிதமாய்க் கொலுவை நாடினனே நல்ல
அரும்பு மலர்களேந்தி விருப்பிய சபைதனில் தூவினனே

ஜெகபதி யரசர்கள் மகிழ்பெறவே மலர் தூவினனே நாளும்
திருநாகூர் தனிலுள்ளோர் மங்களமா நிதம் வாழி வாழி

அஹமது சாஹிபு பொது விருத்தம்

அடையலர் நடுங்கி யேங்க வரசர்கள் பணிந்து போற்ற
குடைபல நிழற்றநாளுங் கொற்றவர்முடிகடாழ்த்த
கடகடென்ற திரமேளங் கலந்துமே நெருங்கி வாழ்த்த
அடைவுடன் கொலுவைநாடி அஹமது சாஹிபுவந்தார்

அஹமது சாஹிபு இருப்பு தரு

தம்பூரு வீணைமுழங்க சந்திர குடைபிடிக்க எங்கள்
மருகமன்னர் அஹமதுஸா கொலுவில் வந்தனரே

ஆனைலட்சங்குதிரைலட்ச அணியணியாய் வரவே எங்கள்
அரசர்புகழ் அஹமதுஸா கொலுவி லிருந்தனரே

மத்தளங் கைமணிமுழங்க மகரஜெண்டா பிடிக்க எங்கள்
மன்னர்புகழ் அஹமதுஸா கொலுவி லிருந்தனரே

அரிவையர்க ளிருபுறமு மரும்பு மலர்தூவ எந்தன்
அரசுபதி அஹமதுஸா கொலுவி லிருந்தனரே

விருதுவெண்சாமரைதுலங்க வேந்தரடிபணிய-எங்கள்
வேந்தர்புகழ அகுமதுசா கொலுவிலிருந்தனரே

மந்திரிமார்வணங்கிநிற்க மதிவல்லர்கள்சூழ-எங்கள்
மன்னர்புகழ் அகுமதுசாகொலுவிருந்தனரே

கட்டியங்கள்முழங்கிவர கவரிகுடைபிடிக்க எங்கள்
கணபதி அகுமதுசா கொலுவிலிருந்தனரே.

அகுமதுசா கொலுவிருத்தம்.

அரிவையர்கவரிவீச யரசர்கள்பணிந்துபோற்ற
குதிமணிவச்சிரநீல கோமேதகத்தின்ரெத்ன

பெருகிய அழகின்வெள்ளைப் பிரபல்யக்கொலுவின்மீது
அரசருக்கரசாய்காரு அஹமதுசாகிபுவந்தார்.

அஹமதுசாகிபு கொலுத்-தரு.

வேதவேதியர்கள்போற்ற வேந்தர்வேந்தர்கள்வாழ்த்த
ஆதிறகுமானருளால் அஹமதுசாகொலுவில்வந்தார்
சித்திரமாதிருடைகள்சூழ சிங்காசனங்கள்பொங்க
அத்திரவேல்விழியாளேக அஹமதுசாகொலுவில்வந்தார்
தங்கஆலவட்டம்பொங்க சரிகைக்கூந்தற்குடைபிடிக்க
அங்கமெங்குந்தகதகென்ன அஹமதுசாகொலுவில்வந்தார்
நவரத்தினகிரீடஞ்சூட்டி நவினவெற்றிமாலைமின்ன
அவதானசிங்காதனத்தில் அஹமதுசாகொலுவில்வந்தார்
வச்சிரகிச்சிரமணியணிந்து மரகதகுப்பாயமிட்டு
அச்சுரதமேலேறி அஹமதுசாகொலுவில்வந்தார்
கன்னியர்கள் கவரிவீசக் கருதலர்காளாஞ்சியேந்த
அன்னசொர்னதானஞ்செய்ய அஹமதுசாகொலுவில்வந்தார்
நகராநவுபத்தடிக்க நாககூரங்கொம்பொங்க
அகமகிழ்ந்துமாநகரில் அஹமதுசாகொலுவில்வந்தார்
மந்திரிமார்கள்வணங்கிநிற்க மகாராசர்கள் புகழ்ந்துபோற்ற
அந்தணர்கள்மலர்கள் தூவ அஹமதுசாகொலுவில்வந்தார்.

அஹமதுசாசொல்-விருத்தம்.

கொலுவினிலிருந்தபின்னர்க் குணமுடன்பாதுஷாவும்
வலுவுள்ளமந்திரியே வகையுடன்சொல்லக்கேளு
நலமுள்ளநாட்டியமாதை நவினசங்கீதஞ்செய்ய
சலுதியாய்க்கொலுவுக்கிப்போ தான்வரவழைப்பாய்மந்திரி

மந்திரி சொல் விருத்தம்.

சித்திரக்கொலுவின்மீது சிறந்தரசிருக்கும்போது
முத்திரைதரித்தவாகன் மோகமந்திரியுஞ்சொல்வான்
வெற்றிசேர்கட்டியக்காரா வெகுசீக்ரநாட்டியமாதை
இத்தருணத்திலிங்ங னியல்புடனழைத்துவாராய்.

நாட்டியமாதர் வருகிற விருத்தம்.

மந்திரிசொற்கேட்டவுடன் மகிழந்துகட்டியனுஞ்சென்று
சந்திரவதனமுகத்தாளை சமர்த்துடன்றானழைக்க

சுந்தரஞ்சேருங்குங்குமத் துயிலாடையும்புனைந்து
வந்தனள்காணிங்கிதமாய் வதனசங்கீதமின்னாள்

ஙாட்டியமாதர் வருகிற தரு.

சங்கீர் தயிங்கிர்தமின்வந்தாள்-டனஞ்செய்ய
சங்கிர் தயிங்கிர்த மின்வந்தாள்.
சங்கிர்த யிங்கிர்தமோடி-சரசசுரதம்பாடி
அங்கமெங்குந்தங்களுஞ்சூடி அஹமதுசாகிபைநாடி. (சங்கீத)

சந்தனஞ்சவ்வாதும்பூசியேகெவுளி-பந்துதாளமும்சுரத பேசியே
சுந்தரஞ்சேர்கையைவீசியே-தோகையர்தொழும்பிரகாசியே
விந்தைசோதிக்குவேசியே-வேந்தர்கள்மெய்த்திடும்தாசியே (சங்)

முல்லைமல்லிகையுஞ்சூட்டியே கழுத்தில்ரத்ன-மோகனமாலையும்பூட்
கல்விநயனமுங்காட்டியே காமவலையில்மாட்டியே [டியே
சல்லபகைகள்காட்டியே சபைகண்டுமெய்த்திடுஞ்சீமாட்டியே.

அந்துமாநகரிலங்க வவரும்ராஜேந்திரன் அஹமதுசாவென்னுஞ்சி
சந்திரவதனமும்பொங்கவே சபாசபாசென்றுந்துலங்கவே [ங்கமே
செந்திருநிகரிலங்கவே-சித்திரத்தாளமுழுழங்கவே. (சங்)

அஹமது சாகிபு விருத்தம்

விந்தைசேர்சபையில்வாழும் விவேகமந்திரியேகேளாய்
சிந்தையில்மகிழ்ந்தேனிந்தச் சிறப்புள்ளநாட்டியந்தன்னை
சுந்தரமிகுந்தயிந்தத் தோகையர்க்காகச் செம்பொன்
இந்தாற்க்ஷணமளித்து யியல்புடனனுப்புவாயே

இதுவுமது.

இந்துபோல்விளங்குகின்ற யெழின்மணிதவிசின்மீது
வந்துமேயிருந்துமோக மந்திரி தன்னைநோக்கி
விந்துசேர்மதுதேசம் விளந்தியநகரமற்றும்
அந்தமாய்ச்செய்திதன்னை யறிவிக்கவேண்டுமந்திரி.

அஹமதுசாகிபு தேசவிசாரணை தரு

சொல்லுமதுசெங் கோல்முறைநன்நகர்சீர்மைமுழுதினுஞ்செழிக்க
வெகு.வல்லவன்றனருளாலேமழைகள் வருஷிக்குதாசொல்லுமந்திரி

மந்திரிசொல்-தரு.

தேசாதிமன்னர் புகழ்ந்தடிபோற்றுஞ் சிரோமணிபாதுஷாவரசே
சீர்பெறவே மாதமும்மாரிகள் சிறந்துவருஷிக்குதரசே [காணும்

அஹமதுசா சொல்தரு.

ஆதியொருவனை நீதியுடனே யரிவைமுதலானபேரும் அவர்
அஞ்சியொடுங்கித்தொழுதுபுகழ்ந்து வலங்கிர்தமாய்சொல்லுமந்திரி

மந்திரிசொல்-தரு.

மன்னர்புகழ்ந்திடும்ராஜசிரோன்மணி மாதவரேயனைவோரும்-வெகு
கன்னயமாகவே யாதியைநாடி நயந்துவணங்கிராரரசே.

அஹமதுசாசொல்தரு.

தேசாதிமன்ன ரிடிந்திரைக்கற்பஞ்சிறந்த முதலானவஸ்தும்-வெகு
நேசமுடனே பொருளறைப் பொக்கிஷநிகழ்த்திவருகுதாமந்திரி.

மந்திரிசொல்-தரு.

நாடுநகர்முத லானபதியில் நடந்து திறைகட்டும் பொருளும்-நாம்
நாடுத்திரவிய அறைக்குள்ளடக்கம் நாகரிகபாதுஷாகிபே.

அஹமதுசாசொல்தரு,

நாடுநகரனையமற்றேய நயந்தவேளாண்மை களனைத்தும் வெகு
ஏட்டிலடங்கா விளைவிவளிப்போதேதுங்குறையுண்டோமந்திரி,

மந்திரி சொல் தரு,

நாடுநகரி யனயமற்றதேய நயந்த விளைவுளனைத்தும்வெகு
நலமுடனே நஞ்சை புஞ்சையனைத்தும் நயந்து விளைவு தென்னரசே

அஹமது ஸாஹிபு சொல்தரு.

அன்னதானமுடன் சொர்ன தானங்களு மாடை முதலான வஸ்தும்
வெகு- வின்னமில்லாமலே வேண்டின பேர்க்கு விளங்கிவருகுதா
மந்திரி

மந்திரி சொல்தரு

ஆரும் புகழ்பெற்று சீருடனே யரசாளு மரசருக்கரசே வெகு
சீர்பெறவேதான் தர்மங்களியாவுஞ் சிறந்து வருகு தென்னரசே.

அஹமது ஸாஹிபு சொல்தரு.

பந்தம்போல் வெண்கண் சிவந்தபுலியும் பனுகியமானுமோர் துறையில் வெகு- அந்தமுடனே இனமொத்துத் தண்ணீரருந்தி வருதா மந்திரி

மந்திரி சொல்தரு

மனமுடனே வெகுவேந்தரை ரெட்சிக்கும் மன்னவர் பூபதியரசே வெகு குணமுடன் புலிமா னொருதுறை தண்ணீர் குடித்து வருகு தென்னரசே

அஹமது ஸாஹிபு சொல்தரு

ஆலிமுலமாக்கள் மூமீன் முசலீன்க ளரியபெரிய திஞேர்கள்-அவர் அத்திரசம்பத்தும் புத்திர சம்பத்து மனுதினமா சொல்லு மந்திரி

மந்திரி சொல்தரு

ஆலிமுலமாக்கள் மூமீன்முசலீன்க ளரிவை முதலானபேரும்-அவர் அத்திர சம்பத்தும் புத்திரசம்பத்து மனுதினம் வாழ்கிருரரசே.

பொது கொச்சகம்,

உற்ற மதயானையைப் போலுயிர் புகழுகுமதுஸா
சுத்தமுடனே யரசுசெய்திருக்கு காலையிலே
அத்தமுடனே மகிழ்ந்து அன்ன மயில்போல் ஜுலேஹா
வெற்றியுடனே கொலுவில் மேவும் வரலாறு சொல்வோம்

ஜுலேஹா கொலுவிற்கு வருகிறவிருத்தம்.

தாதிபரிருமருங்குஞ் சங்கையாய் நடந்துமேவ
தீதிலர்மரபமாலை சிறக்கவே யலங்கரித்து
காதலராய் கவிகை வெண்சா மரைகளுங் கலந்துமேவ
நீதிசேர் ஜுலேஹாவென்று நேரிழை கொலுவில் வந்தான்

கொலுத்தருவு.

அன்னம் போலவே நடந்து வந்தாள்மலர்
அரிவையரிருபுரம் அருகில்வருகுஞ்ஜுலேஹா அன்னம்
கன்னியர்களுக் கலந்துடனே-வர
கவிகைகூடி கலந்து நெருங்கிவர
அன்ன தானமுங் கொடுத்துவர-மல
ரரிவைகளிருபுரஞ் சுப சோபனங்கள் கூற

மின்னலின் சுடர்களு மயங்க-வெகு
விருது வெண்சாமரைகள் அருகில் நெருங்கிவர
வன்னிதக் கொலுவைகாடி புகழ்
மன்னவரகுமது சாமனை வியெனுஞ்சுலைகா அன்னம்

தங்கத்தாவிடம் துலங்கிடவே இன்னம்
சாப்பளி யும்வரைப்பதக்கனுமே யணிந்து
பொங்கமாக வேகை மோதிரமும் இன்னம்
பொன்மணி ரத்தின மணிமின்னலும் போதவேதுலங்க
சங்கையாகவேசுப்பாப் புனைந்தே இன்னம்
தாதியரிருமருங்கு மேவியமொலிக்க
எங்குமேவொளிர் தகதகென்ன- அரசர்
அஹமதுலா அருமைமனைவி ஜுலைஹா அன்னம்

தம்பூருவீணை ராகிசை முளங்க இன்னம்
தரையும் கிடுகிடென்ன அதிருமேள வாத்தியம்
பம்புசின்னம் பேரிகைமுளங்க இன்னம்
பலபல விருதுக ளணியணியாய்வரவே
அம்புபோல் விழிமடந்தையர்கள் இன்னம்
அணியுமலரைக் கண்டு வொளிர்கா வனங்காவென்று
கம்பி வண்டு ராகம் பாடிடவே புகழ்
காயகரஹமது சாதாயகமனைவி ஜுலைஹா அன்னம்

ஜுலைஹா விருத்தம்

விருதலங் காரமாக மெல்லியர் கண்டாரிப்பால்
திருவளர் தருமராஜர் தேவியோர் மைந்தனில்லா
பெருகிய விசனமீறிப் பேர்ஜுலைஹா வென்றோதும்
அரிவையும் ராஜர் முன்வந் தடிபணிந் துரைக்கலுற்றாள்

ஜுலைஹா தருவு

சொல்லவொண்ணா என் வல்லவரே என்
றுயரமெல்லாந் தீர்க்கவந்தவரே
அல்லலில்லா என் காயகரே வெகு அரசர்பணியு மென்னரசே
நீருலகை யாண்டிருந்தீர் நாம் [நீர்
நெறியுடனே மிக வாழ்ந்திருந்தோம்
ஆறிவார்மநுநீதி தன்னை தப்பி

அனியாயங்க ளொன்றுஞ் செய்தறியோம்
செய்யவில்லையோ நாமொருகுற்றமும்-இப்போது
இறையோன் நமக்கொரு புத்ரன்றான்
இல்லை ஈதென்னபாவம் நாமிருப்பது பொய் இறப்பது மெய்
மெய்யெடுத்த நாள் முதலாய் சொல்லும்
மெய்யல்லது வொரு பொய்யுமில்லை
பொய்யுலகை யாண்டிருக்தோம் ஒரு புத்திரனில்லா திருப்பதென்ன
என்னால் வரும்பிழையோ அல்லால்
இறையவரே தாங்கள் செய்பிழையோ
இன்னபடி யென்றெனக்கே அதை எடுத்துரையுமென் மன்னவரே
மன்னவரே நலம நகைப்பாரிக்த
வாழுலகத்திலே தோஷியென்பார்
பிள்ளையில்லாப் பாவியென்றே நாம் பிறந்த ஜன்ம நாளையிலே
சக்தியுள்ள என் நாயகரே நாம் தவசிருக்க பக்கிர் வேஷங்கொண்டு
பக்கிரென வேஷங் கொண்டு பரதேசமா போகவே வேண்டுமென்று
மிக்கபுகழ்ராஜர் முன்னேநின்று மெல்லியரும் சொல்லியே யிருந்தார்

அஹமது ஸாஹிபு சொல் விருத்தம்

விக்தைசேர் சபையில் வாழும் வெழில் பெறும் மோகமந்திரி
சிந்தையில் விதனமீறி சிறந்ததோர் வார்த்தை கேளாய்
எந்தன்பின் னரசையாள யெனக்குமே மைந்தனில்லை
அந்தயென் றுயரந்தீர யமச்சனே மதி சொல்வாயே

மந்திரிசொல் விருத்தம்.

இப்படிபோகமந்திரி யியல்முகம்பார்த்து ராஜன்
மெய்ப்புடன் புலம்பி மந்திரி மெய்யது தளர்ந்துவாடி
நப்பனையன்றமக்கு நலங்கொள் புத்திரனையீவான்
தப்பில்லையரசேதான தருமங்கள் செய்குவீரே.

அஹமதுஸாஹிபு சொல் விருத்தம்

மந்திரிசொல்லக்கேட்டு மன்னவர் சபையைநீங்கி
சிந்தையுமன முமொன்றாய்த் தேகமும்பூரித்தோங்கி
சந்திரவதனமாதை சமுகத்திலிருக்கவைத்து
விந்தைசேர் மந்திரிசொற்ற விதமெலாஞ்சொல்லலுற்றார்

தருமஞ்செய்கிற தரு.

மந்திரிமோகி சொல்தந்திரம் ராஜர்
மன்னவரஹமது ஸாஹிபு
அந்தனல்மொழி கேட்டுமகிழ்ந்துமே நித்தம்
அலங்கியதனதக புகுந்தனர்
மனைபுகுந்தகமகிழ்ந்தரசரும் சொந்த
மனைவியையழைத் தருகிருத்தியே
தனதுடனமைச்சன் சொல்லிவிபரமே சொல்லி
தானதர்மஞ் செய்வோமென்றனர்
அரசர்சொல்லியபோது மனைவியும் நல்ல
தாகும்படி செய்வோமென்றனள்
பிரியமாய்ப்புருடருமனைவியும் வெகு
பிரபல்யமாய்த் தர்மஞ்செய்தனர்
அன்னதானஞ் சொர்னதானமும்
ஆடைமுதலியவஸ்துவும்
ஆதுலர் முதலியயிரவலர் தமக்
கள்ளியள்ளி மிகமீந்தனர்
எளியவர்கோத்திரம் வலியதாய் கொடுத்
திச்சையாகிய பொருள் மிச்சமாய்
பழுதில்லாவஹமது சாமன்னர் ஒரு
பாலனுக்காய் கொடுத்தாரின்னம்
அத்துமாநகர்வீதியடங்கலும் ரத்தின
ஐம்பொன்னினல் பள்ளிவாயல்கள்
இத்துபோல்மதில்களும் கலசமும்-பெற
இலங்கவேயலங் காரஞ்செய்தனர்.
பூஞ்சோலை நீர்ப்பந்தல்வைத்தனர்-இரு
புரங்கன்னிசாலை தடாகமும்
மாஞ்சோலைகளிலாடு மயில்களும்மோக
மன்னனுந்தொழு தொன்றுயிருந்தனர்

சபை விருத்தம்

தானதருமங்கள்செய்து தாங்களுமனேகம்பள்ளி
ஆனதுக்கட்டிவேத மதபுடன் ஓதச்செய்தார்

வானுலகெனவையும்போற்றும் வல்லவன் கிருபைபொங்கி
மானிலமதிக்கு ராஜமனைவியும் கர்ப்பமானாள்

ஜுலைகாசொல் விருத்தம்

சொல்லொண்ணு வருத்தமாகித் தோகையுமயங்கிவாடி
கல்கியகர்ப்பநோயா னவினமாமுகங்கள்சோர்ந்து
அல்லலில்லாதபாங்கி தவர்களை இனிதுகூவி
வல்லமைசுலை காவென்னும் மடமயில்புலம்பலுற்றாள்

ஜுலைகா கர்ப்பத் தருவு

கர்ப்பமாகிய சுலைகா மெய்ப்புடன்வந்தனளே
கிள்ளை போல்வஞ்சியே மெள்ளவேநடை நடந்து கர்ப்ப

தங்கநிற அங்கமெங்கும் பச்சைநரம்போடியே
பாலனைத்தாங்கவாலே வடிவழகி கர்ப்ப

தாங்கியடியெடுக்கயேங்கியேழச் சொடுங்கியே
வொண்டொடிமாதர்கள் வண்டினம்போலிசை பாட கர்ப்ப

தங்கநிலம்போலே தேமலங்கமெல்லாங்காணவே
தாதியர்சூழ்ந்திட வேதனை தன்னைச்சகிக்காமலே கர்ப்ப

ஜுலைகாசொல் விருத்தம்

என்னுயிர்த் தோழிமாரே யின்றையதினத்திலேதோ
பொன்னிறமானதேக புழுங்குதுதணலாகத்தான்
பின்னுதுகால்கரண்டும் பெருகுது சோபதாபம்
மின்னிழையாரேநீங்கள் மெல்லியையழைத்துவாராய்

ஜுலைகா தருவு,

சொல்லரிதான வெட்கந் தோணுதடி, பாங்கி வயிற்றை
சுருட்டிவலிக்குதுருட்டி நெஞ்சில்தோய்ந்து நோகுதிப்போ.
வல்லயன் கொண் டெறிவதுபோல் வயிற்றைநோகுதே-என்
வஞ்சியே நான் னென்னசெய்வேன் மிஞ்சுதேவலி,

அடிவயிற்றை கடினமுட னதிகநோகுதே என்
அங்கமு முறுகிவாடி செங்கண் மருளுதே.
ஓங்கியபடி தாங்கிவைக்க உள்ளநோகுதே-எனக்
குள்ளவயர் கர்ப்பநோயா லோங்கித்துடிக்குதே.

என்னசெய்வேன் ஏதுசெய்வேன் பாங்கிமார்களே-எனக்கு
இனிப்பையகற்றுது புளிப்பைவிரும்புது பாங்கிமார்களே

ஜுலைகா சொல்-கொச்சகம்

மந்தரப்புயத்தோனுன மன்னன ஹமது சாயபுக்குச்
சொந்தமாமனைவியற்கு சூலுளெந்தயர்வதாலே
சுந்தரத்தாதிமார்கள் தொடையடி வருடிநிற்க
வந்திடு மருத்துவமாது மங்கைமுன் னிருந்து கேட்பாள்

ஜுலைகா சொல்-இன்னிசை.

சீர்பெருகு மின்னகரம் சிறப்புடனே யாளுகின்ற
பேர்பெருகும் அஹமது சா பேர்விளக்கவந்த கர்ப்பம்
மார்முலைவடிக்குதடி வள்ளலைகான் சேர்ந்ததினுல்
பாரடி மருத்துவத்தை பைந்தொடியே பத்திரமாய்

ஜுலைகா—தரு

என்னசெய்வேன் ஏதுசெய்வேன் பாங்கிமார்களே—எனக்
கென்னவிதமோவருகுதென் தோழிமார்களே
ஒருகால்வலிமீளுக்குதேயென் பாங்கிமார்களாவலி
ஓங்குதேகாளென்னசெய்வேன் தோழிமார்கான

கையசைக்தேன் காலசைக்தேன் என்பாங்கிமார்களா சோபம்
காணுதே காளென்னசெய்வேன் றோழிமார்களா
அங்கமுழுதுகடுக்குதென்பாங்கிமார்களா-கண்ணை
ஆரிருட்டு தென்னசெய்வேன் தோழிமார்காள்

பொது விருத்தம்

ஆலிலைபோலே யிருந்த அடிவயறு கர்ப்பமதாய்
நீலவிழி கண்கள் ரண்டு நெருப்புத்தணலாகுதடி
கோலமுள்ளவென்வயறு குமுறுதடிகோதையரே
சீலமுள்ளமன்னவர்க்குச் சீக்கிரம்போய்ச்சொல்வீரே

தாதிசொல்—விருத்தம்

அந்தமா நகரையாளு மஹமது பாதுஷாவே
விந்தைசேர் சுலைகாமாது மேவிய கர்ப்பநோ யாற்
சுந்தரமுகங்கள்வாடி சோபங்கள் மீறிநின்றுர்
முந்தியே மருத்துவமாதை மோகமாயழைக்கசொன்னுர்

அஹு-மதுசாகிபு சொல்—விருத்தம்

என்னருகினிலிருந்துவாழு மெழில்பெருமந்திரிகேளாய்
நன்னயமுடனே யெந்த நாயகிசுலேகாமாது
மின்னிடைகர்ப்பமாகி மெலிந்தவள்வாடுகின்ருள்
உன்னிதமருத்துவமாதை யுகந்துநீயழைத்துவாராய்

பொது—விருத்தம்

இப்படி கர்ப்பநோயால் யேங்கியே கலங்கிவாடி
மைப்படுங் கரியகூந்தல் மங்கைநல் சுலேகாதானும்
செப்பொண வாழுஞ் சிம்மாசனமதி லிருக்கும்போது
ஒப்புடன் மருத்துவமாது வுவப்பொடுவருகின்ருளே,

மருத்துவக்கிழவி வருகிற-தருவு

கிழவி வந்தாளே—மருத்துவக்
கிழவி வந்தாளே,
கிழவிவந்தாளே பழையவளென்று
கிளுக்குத்தடியை வளுக்கலூன்றியே (கிழவி)

நரைத்திடுந் தலேயும் மெள்ள மெள்ள நடுக்கிடுங்கோலேயும்
பருத்திடுமூலேயும் அழுக்குப்படித்திடும் சுலேயும்
குறைந்தமேனியும்—விரைந்தபேச்சுமாய்க்
குளறிக்குளறி யூர்மருத்துவக் (கிழவி)

ஜுலேகா புலம்பல்—தரு

ஆதியேநீதியெங்கு நிறைந்திடுமண்ணலே
என்னையாளும் றஹுமானே
சோதியேசொர்ணமாரி பொழிந்திடும்-சொர்க்க
வாயல்திறந்திடுநாயனே

பாவியானிந்த பங்கப்படாமலே-பட்சம்வைத்
தென்னையாளும் றஹுமானே
நம்பிராட்டிமார்கட் கருள்செய்த-நாயனே
என்னைகாரும் றஹுமானே

பிள்ளைபிறந்த-தருவு

மைந்தன் பிறந்தானே-இராஜமோக-மைந்தன்பிறந்தானே
மைந்தன்பிறந்தானே-சந்திரவதனம்போலே
அந்துமாநகராளும் சுந்தரமகாராஜன் (மைந்தன்)

ஜெகமன்னர்திசையிருக்க யீரேழுதேசமும் பரிமளிக்க
அஹ்மதுசாமன்ன ரகமகிழ்ந்தாரே-யின்னம்
உவமையென்றவர்சொல்ல சுருகதிர்மதியம்போல் (மைந்தன்)

வாலசூரியனுமொவ்வா அழகுள்ளமன்மதனுமொவ்வா
நீலமணிக்குநிகர் நிகரென்றெவருஞ்சொல்ல
ஆலம்விளங்கிய அஹ்மதுசாகிபுக்கு (மைந்தன்)

அந்துமாககராஜு மஹ்மதுசா ஆக மிகமகிழ்ந்து
சிந்தைமகிழவேதான் ஜெகத்திலுள்ளோர்கள்-மெய்க்க
மைந்தனைக்கண்டு மனமகிழ்பெறத்தினேர் (மைந்தன்)

தாலாட்டுத் தரு-கண்ணிகள்

ஆராரோ ஆரிரோ ஆணரசே ஆராரோ
பாரிலுள்ள மன்னரெல்லாம் பட்சமுடனே துதிக்க
சேரிழைமார் தாலாட்ட சிருபனேநீ நித்திரைசெய் (ஆரா)

பிள்ளையில்லாதஹ்மதுசா பெருந்தவத்தால்வந்துதித்த
வள்ளலென்னுமப்பாசே வண்மையுடனித்திரைசெய் (ஆரா)

ஆதியருளாலஹ்மதுசா அருந்தவத்தால்வந்துதித்த
நீதிநெறிஅப்பாசு நிர்பர்கோ னித்திரைசெய் (ஆரா)

விந்தைசெரி அந்துமாககரையாளவந்த
சுந்தரசவுந்தரனே சுகுணமுடனித்திரைசெய் (ஆரா)

பொது-விருத்தம்

அந்துமாககரையாளு மஹ்மதுசாகிபீன்ற
விந்தையாய்த்தவத்திரண்டு விளங்கிடுமப்பாசென்போன்
மந்திரிமார்கள்கூட மைந்தனும்சபையைநாடி
சுந்தரமிந்துபோல துலங்கவேபாலன்வந்தான்

அப்பாஸ்-தரு-கண்ணிகள்

அரசர்புகழும் அரசரப்பாசுமன்னே-எங்கள்
அருமையாகிய சுல்தானீன்றிடும் சீலன்
எங்குமேபுகழ் அந்துமாககராஜன்-வெகு
ஏகசவுந்திர பூபதியாகிய போஜன்
தங்கத்தலைபாவு மார்பிற்பதக்கனுமிலங்க-வெகு
சற்குணமாங்கையில் ஏந்தியவாளுமே துலங்க

பசுவீரராஜன்மகள் மசலாவைவெல்ல-வெகு
பாக்கியராகிய யோக்கியரம்பாளும் வந்தார்

பொது-ஆசிரியவிருத்தம்.

தடம்சூடமுடிமன்ன ரிருபறமருங்கிலும் சங்கையைத்தோதிவரவே
சகலகவிபாடலுஞ் சிந்துமுதலானதுஞ் சங்கையுடனேதிவரவே
கடகடென்றதிரலுடன் கட்டியமுமுழங்கவேகரிபரிகடத்துவரவே
கரிவெண்சாமரைகளிருபக்கமுஞ்செறியகடல்போன்மு ழங்கிவரவே
கனினமொடுசங்கீதபதினெட்டிராகமுகாற்றிசைமுழங்கிவரவே
கலமுடன்சிவிகையும் பெருகமந்திரிமார்களுற்றிசை யடர்ந்துவரவே
அடைவுடன்கொலுவினிலஹுமதுசாகிபு வேந்தரசுபதியிருக்குகாவி
லன்பானமதிகத்தென்பான் அப்பாசு அடைவுடன் வருகின்றாரே

அப்பாஸ் விருத்தம்

மன்னவர்சபையின்மீது மருமலரேந்திக்கொண்டு
கன்னிமார்வந்துநின்று கனமுடன்கவரிவீச
வுன்னிதமானசெல்வ யவுர்புகழப்பாசென்போர்
வுன்னிதக்கொலுவைநாடி வகையுடன்வருகின்றாரே

அப்பாஸ்கொலுவிற்கு வருகிற தருகண்ணிகள்

சாரிதசங்கிதமுழங்க வெற்றிசரசவிருதுக்துலங்க
பூரணசிங்காசனத்தில் வெற்றி புகழ்துரையப்பாசுவந்தார்
சந்திரவட்டக்குடைபிடிக்கமேளதாளம்பலவிருதுபாங்க
அந்துமாககரையாளும் மப்பா சரசருங்கொலுவில்வந்தார்.
சந்தனகுங்குமகளப கொங்கைத் தையலர்க்கவரிவீச
சத்திரப்பாகூரர் வளர்சரசமுகக்கொலுவில்வந்தார்.
விருதுசிங்கக்கொடிபிடிக்கவேதவேதியர்பையித்தொலிக்க
திருகரனப்பாசுரகர் இரத்தினத்தங்கமுகக்கொலுவில்வந்தார்
வெற்றிகவுபத்தடிக்க வெகு வேந்தர்கள்திறைகுவிக்க
தத்துவம்வளரப்பாசு ராசன்சங்கீதகொலுவில்வந்தார்
என்னிரண்டுவாக்கியங்கள் பொங்கி யிரவுபகலெனவொலிக்க
மன்னர்மன்னர்புகழப்பாசு ராஜன் மகிழ்ந்து சிங்காதனத்தில்வந்தார்
மந்திரிமார் தந்திரிமார்வந்து மகிழ்ந்தடிவணங்கிநிற்க [தார்
அந்தமுள்ள அப்பாமன்னன் தந்தையஹுமதுசா பதம்பணிந்

அஹமதுசாகிபு சொல்விருத்தம்.

மந்திரிமோகிகேளாய் மகிழ்ச்சியாய் சொல்வேனும்
அந்தமாயப்பாசுக்கு யறிவுகள்கற்கவேண்டி
விந்தையாய் கல்விசாஸ்திர விதமெலாந்தெரிந்தபேரை
சிந்தையாய்ப்படிக்கவைப்போம் சீக்கிரமழைப்பிப்பாயே.

மந்திரிகட்டியனுக்குச்சொல் விருத்தம்.

அந்தமாககரையரளும் அஹமதுசாகிபண்ணல்
விந்தையாய்ப்பள்ளியோத விருப்பமாய்மகிழ்ச்சிகொண்டார்
சிந்தையாய்ப் படித்துவைக்கும் சீருள்ளஉபாத்திமாரை
அந்தமாயோடிநீதா னரைட்சணத்தழைத்துவாராய்.

அண்ணாவி சொல் விருத்தம்.

மைந்தனுப்பிறந்துவாவின் மதியெனகாட்டுகோளாய்
விந்தையாய்வளந்துயோக மேவியவயதோரைந்தில்
சுந்தரத்துடனேயெங்குந் துலங்கவேகல்விமற்றும்
அந்தமாய்புகட்டிவைக்கும் மண்ணாவியாரும்வந்தார்.

அண்ணாவி தரு.

அண்ணாவியாரும்வந்தார் சகலகல்வி
அண்ணாவியாரும் வந்தார்.
அண்ணாவியாரு முன்னமதாகவே
அஹமதுசாகிபு யனிகொலுவைகாடி. (அண்ணா)
கன்னூலுந்தொன்னூலுந் தொல்காப்பியங்களுந்
தோன்றும்மறுவுகள்பலதும் படித்துவைக்க (அண்ணா)
மந்திரதந்திரம் இந்திரமயேந்திரம்
மன்னவர்கண்டு மயங்கித்தயங்கிடும். (அண்ணா)
பாலாபரிட்சை வளதடிகவண்டிக்கல்
மாட்டிவிளையாடக்காட்டியேவைத்திடும். (அண்ணா)

பொதுவிருத்தம்.

மைந்தனும்வயதோரெட்டில்மகிமையாய்ப்பள்ளியோதி
சுந்தரத்துடனேகாட்கு காளொருசேதிபோலே
விந்தையாய்வளர்ந்துகல்வி வேணதும்படித்துக்கொண்டு
கந்தமன்வரனடபொங்கக் கனமுடனிருக்குரனில்

அப்பாஸ்சொல் விருத்தம்.

தயவுடன் செங்கோலாளும் தந்தைதாய் பாதம்போற்றி
அகமகிழ் * குருன்கிதாபு வனத்தையு மோதிப்பின்னும்
தரும் பலவித்தையெல்லாஞ் சமஸ்தமு மறிந்துகொண்டு
மகிழ்ச்சியாய்வந்தோனுதி வல்லவன் கிருபையாலே

அஹமதுசாகிபு சொல் விருத்தம்

மைந்தனிலழகுவெற்றி மதிப்பிலாகல்விமற்றும்
அந்தமாய்புகழுங்கீர்த்தி யஹமது சாகிபுகண்டு
எந்தகன் மகனைப்போலே யெண்டிசை தனிலுமில்லை
விந்தைசேர் அரசர்முற்றும் வீரனுக்கெதிரிடாதே

இதுவும் அஹமதுசா சொல்விருத்தம்.

அரசருக்கரசாய்வந்த அஹமதுபாத்துஷாவும்
பெருமையதாகநெஞ்சிற் பெருக்கமாய்நினைந்ததாலே
மருத்தனைநினைக்கு முன்னே வயிற்றினிகோவுகண்டு
கருத்தினில்வயிற்றுநோயால் கலங்கியேபுலம்புவாரே

அஹமதுசாகிபு புலம்பல் தரு.

ஆ-யெந்தன்விதிவசமோ-விதனமதையாரறிவார்நிஜமோ
ஏவலைமறந்தேனே-விலகலென்று யிடும்பினிலுகந்தேனே
ஆவலுடன் யெளியோர்கள் பொருள்தனக்கு
ஆசையாக்கின்னித்த மோசம்வரலாச்சுதே (ஆ)

வயிற்றினில்வருநோயைத்தீர்க்கவொரு வைத்தியந்தானிலையோ
கைப்பொருள் செலவெல்லாம் கடும்பிணிதீரவில்லை
காலவினையோசெய்த கோலவினை யோயிது (ஆ)

வாதுகள்செய்தேனே சமையவேத மார்க்கத்தேயிகழ்ந்தேனே
வேதநெறிகள் தப்பி வீணையாகன்மறு
வேந்தன்மனைகளைசேர்ந்து வாணிருந்தேனே (ஆ)

சொன்னசொல்மறந்தேனே யெளியோரை தூஷணித்திகழ்ந்தேனே
அன்னை பிதாசொல்லி அவமோசஞ்செய்தேனே
ஆரையாகிலும்பின்னால் தூரநில்லென்றேனே (ஆ)

பாவத்தையுகந்தேனே குருமொழி பரிகரித்திருந்தேனே
சாவத்துணிந்தபேர்க்கு சம்மதித்திருந்தேனே
தானென்றிருந்தகற்பமானங் கெடுத்தேனே (ஆ)

---

* குருன்-குருஆனெனக்கொள்க.

அஹ்மதுசா சொல் விருத்தம்.

மந்திரி சொல்லக் கேளாய் வயறுவலி தாளுதில்லை
சிந்தைதான் கலங்கி மெத்த தேகமுந்தியங் குதிப்போ
அந்தமா வயிற்று நோவு அன்புடன் தீரவேதான்
பந்தமாய் வயித்தியர் தன்னை பாங்குட னழைக்கச் செய்வாய்

மந்திரி கட்டியனுக்குச் சொல் விருத்தம்.

அந்தமாய் வாயல்காக்கு மதபுள்ள கட்டியக்காரா
சுந்திர வரசர்தானும் துன்பங் கொள் வயிற்று நோயால்
சிந்தையுங் கலங்கி மெத்த தேகமு மெலிந்து நொந்தார்
விந்தையாம் வயித்திய மாரை விரைவுட னழைத்துவாராய்

பண்டிதன் வருகிற பொது விருத்தம்.

வரிசையாய்ச் சோமன் கட்டி வாகுடன் தலைப்பா வைத்து
துரிதமாய் மருந்துபையும் தோளினிற் போட்டுக் கொண்டு
விரிசெரி யரசர்தானும் வீருட னழைத்தாரென்று
அரசர்க்கு வைத்தியஞ் செய்ய அன்புடன் வருகின்றானே

பண்டிதர் வருகிற விருத்தம்.

இப்படி வயிற்று நோயால் யிலஹ்மதுசாவென்னும்
மெய்புக ழரசர்தானு மிகநொந்து யிருக்குநாளில்
அப்பெரு மவிழ்தஞ் செய்து அதுதனைத் தீர்ப்போமென்று
விற்புதப் பண்டிதன்றான் விரசுடன் சபையில் வந்தான்

பண்டிதன் தருவு

பண்டிதன் வந்தானே பவிதமுள்ள
பண்டிதன் வந்தானே
பண்டிதன் வந்தானே யெண்டிசை போற்றிட
பாரானகண்டித நோயைத் தீர்த்திட (பண்டிதன்)
மாத்திரைப் பையொடும் சாத்திரிகை யோடும்
மகாராஜர் நோவதை மாற்றியகற்றிட (பண்டிதன்)
கோத்திரமாய் வாழுங் குட்டரோகங்களை
கொண்டே விரட்டிடும் மண்டல வைத்திய (பண்டிதன்)
மாரப் படைகளும் மாந்தங் கழிச்சலும்
மண்டவலியையும் கொண்டே யகற்றிடும் (பண்டிதன்)

பண்டிதனுக்கு அஹ்மதுசா சொல்-விருத்தம்

விதியினால் வந்த நோயை விலக்கவே வேணுங் கண்டாய்
மதியிலாப் பிணிதனக்கு மருந்துமே தரவே வேண்டும்

கதிர்பெற வந்தகோளை கருத்தினு லகற்றிவைக்க
யதியுள்ள வேதசாஸ்திர பண்டிதர் கையைப்பாரும்.

பண்டிதன் சொல் விருத்தம்.

கைதனைப் பார்க்கச் சொன்னீர் கருத்தைநான் சொல்லக்கேளும்
வையகந் தனிலேயிந்த வியாதிநான் கண்டதில்லை
ஐயனால் வந்தகோளை யாராலு மகற்ற வொண்ணு
மையலால் மதுவில்கோப்பை மகிழுடன் குடிக்கதீரும்

அஹ்மதுசா சொல் விருத்தம்

சவித்து கொத்தப் பரசென்போர் தனது வீட்டிலிருக்கும்போது
மலிபுகழ் அஹ்மதுசா மந்திரி தன்னைக்கூவி
யிலைமதிகதிர்வேல் கொங்கை யேந்தலப்பாஸ்தன்னை
தலைமகிழ் கொலுவிற் கிப்போ தானழைத்திடுவா யென்றார்.

மந்திரி கட்டிய காரனுக்கு சொல்விருத்தம்.

கட்டியக்காரா நீயுங் கருத்துடன் சொல்லக் கேளாய்
மட்டிலாப் புகழுங் கீர்த்தி மகிபதி மகனப்பாஸும்
சட்டமாய் கொலுவிற்கிப்போ சாரமாய் வாரார் கண்டாய்
திட்டமாய் தெருக்கள் தோறுஞ் சிறப்பிக்கச் சொல்லுவாயே.

சிங்காரிப்பு-தரு.

கட்டிய பலபல சட்டமாய்கரு
தலாகள் புகழுமந்துமாநகர்
அட்ட திசையரசர் புகழவே-அப்பா
சரசருங் கொலுவுக்கு வாரார்காண்

பூரணமதி முகத்தார்களே-வெற்றி
புகழ்ந்துரை யப்பாசு வாரார்காண்
சீருட னிறைகுடம் வையுங்கள்-பந்தல்
சிறக்கவே யலங்காரஞ் செய்யுங்கள்

மான்குயில் வேல்விழி மங்கையே-அந்த
மாநகர்க் கரசரும் வாரார்காண்
பூ நிறைத் தோரணங்கள் கட்டுங்கள்-பந்தல்
போடுங்கள் மகிழ்ந்து கொண்டாடுங்கள்

செங்கை வேல்விழி மங்கையே-ராஜன்
சிங்கதுரை யப்பாசு வாரார்காண்

சங்கீர்தராகங்கள்பாடுங்கள் கையால்
தாளமத்தாளங்கள் போடுங்கள்

தந்திரிமந்திரிமார்களே-தன
தந்தைபரலப்பாசு வாரார்காண்

அந்தமுடனேகோட்டைத்தெருக்கும்-அம்
மாளிகைகள்சோடினை செய்யுங்கள்

காருபாருசெய்யும் கணக்கரே நம்ம
காவலரப்பாசுவாரார்காண்

விருடனேபொக்கிஷப்பணங்களும்-தேச
விளைகள்பலதுங்கண்டெழுதுங்கள்

பொது-விருத்தம்

மன்னவர்கள்புடைசூழ மாதவத்தோ ரருகிருக்கு மாதராட, கன்னியர்களிருபுரமும் கையால் வீசகட்டியங்கள் கூறிடகா ளாஞ்சி யேந்த துன்னியதோர் பிருபுரமுங் கவரிவீச துலங்கவே மந்திரிமார் புகழ்ந்து போற்ற மன்னுமிகத் தேன்சொரியும் பகரப்பாசு பன்புடனே கொலுவதனில் வருகின்றனே.

அஹமதுசாசொல்—விருத்தம்

அருந்தவத்தானுதித்தவரசுபதி மகனப்பாசை
திருந்துமேவமிற்றுகோயால் சிந்தையுங்கலங்குதிப்போ
பரந்துமேவமித்தியன்றன்னை பாங்குடனழைக்கசொன்னேன்
வருந்தியேமதுவையுண்டால் வயர்வலிதீருமென்றான்

அப்பாஸ் சொல் விருத்தம்.

சித்திரனப்பாசென்னும் செம்மலுந்தனதுதந்தை
பெத்திருசரணம்போற்றிப் புகழ்ந்தகமகிழ்ந்துநிற்கப்
பெற்றிடும்தந்தையாரும் பிரியமாய்மதுவில்கோப்பை
வைத்துமேகுடிக்கநாடி வகையுடனிருக்கும்போது

அப்பாஸ் சொல்இன்னிசை-தரு

தந்தையார்க்குபண்டிதனும் தான்மதுவைஉண்ணவென்றே
சந்துதனியில்லாதுரைத்த காலியிலப்பாசரசன்

சிந்தைதடுமாறிமனந்திடுக்கிட யெழுந்துலகிற்
சிந்தைமெழுகாயுருகி ஆகாச்செயலிதுவே

அந்தமுடிவில்லாத ஆதிறஹுமானே எந்தன்
தந்தையவர் செய்பிழையைத் தான்பொறுப்பாயாதி

இதுவும் அப்பாஸ்சொல்-தரு

ஆதிமுதலேயழியாப்பரம்பொருளே-ஆசா
ஏதுகாரணமோயென்னை யீன்றிடுக்தக்தையர்க்கு
வாதுகாலேமதுதன்னில் மருந்துண்பமென்றுசொன்னீர்
பேதகமீதெனவெண்ணுமல் பிழையானவார்த்தைசொன்னீர்

சொன்னமொழிதனை யாருஞ் சொல்லப்பொருந்துவரோ
என்னமதிமோசத்தால்தன னுக்கிசைத்துமதுவென்றனர்
பின்னைமருந்தில்லேயோமார்க்கம்பிரிந்து நடக்கலாமோ
அன்னவன்சொல்விதமோநம்மையமைத்தான் மதிமோசமோ

மோசம்வரும்மதுவையாரும் மோகமுடன்குடித்தால்
ஆசில்லாகண்மையும்போம் தேசத்தரசர்கமையாரோ
பெரியதானகோவுகண்டால் மார்க்கம் பிரிந்து நடக்கலாமோ
வரும்விதிராத்தங்குமோ வந்தால் மனதுபொருக்கவேணும்

பெருமையும்பேருமுண்டு மார்க்கப்பிரகாரம்போல்நடந்தால்
குருமுஹம்மதுநபிசொன்ன குறிப்பையெவரறியார்

அப்பாஸ்சொல்-விருத்தம்

அறிவெலாமறிந்தநீங்கள் அவமொழிசொன்னீர்மார்க்கம்
பிறிவதுகுறையோயிந்த பிழைபொறுப்பானேவாதி
வெறிமதுவுண்டபாலன் விளம்பிடவுமறுகத்தாப்
தறுகலால்அபுஷகம்மாதான்பட்டதறியீர்வேந்தே.

அப்பாஸ்-தரு.

கொள்ளலாமதுவென்றீர் கோவையாதிமுன்மனம்
கோணுமல்காளென்னசெல்வேன் வேண்டாங்காண்
வேண்டாமென்றுசொன்னமேவு மெந்தன்மகனே இப்ப
மேவிடும்வயிற்றுவலிக்கே யென்னசெய்வேன்

வயிற்றுனோயினலரசே யெழுதினவண்ணமே இப்ப
மரித்தாலுஞ்சுவர்க்கமுண்டு செகத்திலும்புகழுண்டு
செகத்தில்புகழாய்வந்த செல்வனேந்தன்மகனே யென்
சிந்தைபொருந்த கள்ளேயுகந்தேவிதி

அப்பாஸ் சொல்-விருத்தம்

விதியினைவிலக்கலாமோ வேந்தனேமனதிலுள்ள
விதமெல்லாஞ்சொன்னேன்பாரில் விலக்கிடாயின்னம்சொன்னீர்
சதுமறையறிவீருன்முன் தடுத்துநான்சொன்னதெல்லாம்
அதபல்லதந்தையாரே யாகும்படியேசெய்வீர்

சபை விருத்தம்

கள்ளுடன்மருந்துதன்னை கலந்துமேகுடித்ததாலே
உள்ளமுருகிநெஞ்சி லுணவுகளைத்தும்போக்கி
சொல்லொணாவெறிகள்மீறி தோன்றிடுமறிவுபுத்தி
எள்ளளவேனுமில்லாமலேதையும் புலம்பலுற்றார்.

ஊரார்சபை விருத்தம்.

புலம்பியேயஹம்மதுசா பூபதியிருக்கும்போது
நலம்பெருமந்துமாநகரினோர் செய்திகேட்டு
பலபலபேர்களொன்றாய்ப் பனுவலாய்க்கூடிப்பேசி
நலமுடனூராரெல்லா நல்கியேவருகின்றாரே.

ஊரார் விருத்தம்.

ஏதையும் புலம்பிக்கொண்டு யினிதுடனிருக்குநாளில்
மேதினியுள்ளோர்கேட்டு மென்மேலுமறிவோமென்று
சாதிமன்னவர்கள்மற்றத் தலைவர்கள் தொழில்செய்வோரும்
வீதியும்நீங்கிஊரார் விரைவுடன்வருகின்றாரே.

ஊரார்வருகிற தரு.

ஊராருரா முறைகள் நேருடனேநடந்து
உகப்புடன்பாதையிற் சிறப்புடனடந்து

நடந்துநடந்தவர்கள் மனந்தனிலே மகிழ
னமுடன்கொலுவைகண் டகமுடனடந்தார்

முத்துத்தொழில்கள்செய்யும் பேர்களில்லவர்சிலர்
முழுமணிதொழில்செய்யும் பேர்களில்சிலரே

பவளத்தொழில்கள் செய்யும் பேர்களிலவர்சிலர்
பசும்பொன்வியாபாரஞ்செய்யும் பேர்களிற்சிலரே

கச்சவடங்கள் செய்யும் பேர்களிலவர்சிலரே
காசுத்தொழில்கள்செய்யும் பேர்களில்சிலரே

சவளித்தொழில்கள் செய்யும் பேர்களில்சிலரே
சங்குமணிகள்விற்கும் பேர்களில்சிலரே

மளிகைத் தொழில்கள் செய்யும் பேர்களிலவர்சிலர்
மஞ்சள் மிளகு விற்கும் பேர்களில்சிலரே

அந்துமாநகராளு மஹம்மதுசாகிபு
அரசுதனிலேஊரார் சிறப்புடன்வந்தார்

வந்தவரஹம்மதுசாகிபை பார்க்கையில்
வணக்கமில்லாமதுவுண்டு வெறிகளித்திருந்தார்

ஊரார் சொல் விருத்தம்.

ஆதியின்யேவல்தப்பி யதிகமாய்நடந்துகொண்டு
மேதினியிலக்குங்களை விரும்பியேகுடித்ததாலே
நீதமா யெங்கட்கெல்லா நெறியரசல்ல நீதான்
வேதியர்மார்க்கச்சொல்லால் விடியுமுன்னகலுவீரே.

இதுவுமூரார் சொல் விருத்தம்.

அல்லாவில்லாதுநாளு மரசருக்கரசாய்வந்த
செல்வநன்மகனப்பாசை ஜெகபதியரசாய்வைத்து
பல்விதநெறியால்நாங்கள் பலவினை தடித்துக்கொள்வோம்
சொல்லியசொற்போல்நீருஞ் சுகமுடனரசளிப்பீர்

அஹ்மதுசா சொல் விருத்தம்.

ஊரவர்சொன்னபோது உடம்பெலாம் கலங்கிவாடி
சீர்பெருஞ் சுலைகாவென்னுந்திருமுக நோக்கிச்சொல்வார்
கார்பெருங்குழலாய்நானும் கள்ளதையுண்டதாலே
நேர்பெரும்ஊராற்சொற்போல் நெறியரசிழந்து விட்டேன்

இதுவும் அஹ்மதுசா சொல் விருத்தம்

செல்வனன் மகனப்பாசை செழிப்புடன்பட்டங்கட்டி
கல்குவாரூராரிப்பால் களினமாய்க்கேளும்பெண்ணே
அல்லவில்லாது நாளு மனுதினம்வாழ்வீராதி
வல்லவனருளால்நானும் வனத்தனிலேகுவேனே.

ஜுலைகா சொல் இன்னிசை.

பெண்ணேயென்று சொன்னையென்னை பொங்கமுடனுரைகின்ற
வின்னமில்லையென்றுமிந்த வீண்மொழிகள் சொல்லியதும்
இன்னன்மொழியானுரைக்கக் காதலுடன்கேட்டருளும்
மன்னிலத்தில்வாழுகின்ற மாந்தர்கள்நகைத்திடுவார்

ஜுலைகா தரு

என்னசொன்னீரிப்போ என்னமொழிகள்சொன்னீர்
வின்னமாகியவார்த்தைமேவுவ தேதோ
மேவிடும்பதி யந்துமாநகரையிகழ்ந்து
மேன்மைமனைவிபிள்ளை தானிழந்தேக
காடுவனந்தனிலே மேவுந்தங்களைவிட்டு
கருத்துடன் துணிந்து நானிருப்பேனோ
இருப்பேனென்றெண்ணியே யிந்தமொழிகள் சொன்னீர்
எங்கும்புகழாய்வரும் சங்கையென்னரசே
அரசுபதியைவிட்டு அரண்மனையுமிழந்து
அடியாளும் வருவனென் றறியீரரசே

மன்னர்மன்னர்புகழ் மகிபதியரசேயென்
மனமகிழ்வொடுதங்கள் துணையாகவருவேன்
ஆதியேநான் செய்தகுறையோ யெத்தனரசே
அடியாள் தன்னைவிட்டுவனஞ் செல்லலாமோ
சோதியேநான் செய்தபிழையோ யென்தனைவிட்டு
துணிவுடன் வனஞ்செல்ல மனதுவந்துரைத்திர்

அஹமதுசாவுக்கும் சுலேகாவுக்குந் தர்க்கதரு.

சிதமயிலேகுயிலேமொழியே யென்றேவியேநீர்கேளும் வெகு
பாதகஞ்செய்தநி காலென்விதியால் பரதேசம்போய்வாரேன்

ஜுலேகா

பரதேசம்போய்வருவேனென்று சொன்னயென்பத்தாவே நீர்கேளும்
இந்தபக்குவ மற்றவடியாளுமே கூடப்பரிந்து வழிவருவேன்

அஹமதுசா

தொடர்ந்துவழிவருவேனென்று சொன்னயென்தோகையே நீகேளு
முன்னடர்ந்தவனந்தனிலேகி நடந்தாலுன் னங்கம்பொறுக்காதே

ஜுலேகா

அங்கம்பொறுக்க தென்றே மொழிசொன்னவரசரே நீர்கேளீர்வெகு
சிங்காரமாத்தாலி கட்டினநாளாகி யென்னைச்சேர்ந்து பிரிந்ததுண்
[டோ

அஹமதுசா

சேர்ந்துபிரியாமல்வாழ்ந்து சிலநாள் சிறப்புட னாமிருந்தோம் அடி
யேந்திழையே வுன்னைவிட்டுப்பிரிந்துநான் யேகவும் நாள்வந்ததே

ஜுலேகா

ஏகபுகழ்பெற்றமீபதியானயென் னிறைவரே நீர்கேளும்வெகு
தாகமுடனேநான்விட்டுப்பிரிந்து செகத்தினிலிருப்பேனோ

அஹமதுசா

ஜெகத்திலரசுக்கரசாகவந்தசிர் மன்னனப்பாசுடனே நீர்
உகப்புடன்சிம்மாசனத்திலிருந்தா லுகந்துநான்போய்வருவேன்

ஜுலேகா

உகந்தகணவனையிழந்தே யிவ்வுலகத்தில் நானிருந்தால் வெகு
மகிமையுடனிவ்வுலகத்திலுள்ளோர் மனதுக்கிசைந்திடுமோ

அஹமதுசா

மனதுக்கிசைந்தமொழி பலசொன்னயென். மங்கையே நீர்கேளும்
வெகுபுனிதமுடன் பரதேசம்போய்வாரேன் புகழ்ந்துவிடைதருவாய்

ஜுலேகா

புகழ்ந்துவிடை தருவாயென்றுசொன்ன யென்புண்ணியரேகேளும்
பாதைவகையுடனே யடியாளுமேகூட மருவியேவந்திடுவேன்

ஊரார் சொல் விருத்தம்.

மேதினியுள்ளோர்போற்று மேன்மையப்பாசேகேளுந்
தாதையுமுகந்துகள்ளைத் தானவர் குடித்ததாலே
நீதியீதல்லவென்று நிகழ்த்தியேயடக்கிவிட்டோம்
ஆதலால் அரசைநீரு மனுதினஞ்செய்யவேண்டும்.

அப்பாஸ் சொல் விருத்தம்.

சொல்லியவசனங்கேட்டு துரைமன்னர் கடுங்கச்சிங்க
மல்லுரும்புயமிலங்க மகுடரத்தினங்கள்மின்ன
வள்ளலும்வீதிநீங்கி வேந்தர்களிரைஞ்சதாதை
வல்லவர் பதத்தைப்போற்றி மைந்தனும் வணங்கி நின்றான்.

அப்பாஸ் சொல் தரு

எண்டிசையோர்செங்கோலப் பாசுமன்னவன் தானும்
என்ன செய்வோ மெனவே நின்றஞ்சி புலம்பி
பெண்டிருபிதாவு மறுதேயம் போகவே பெற்ற
பிள்ளைநானிருக்க யிங்கு முறையதாகுமோ
மாதாபிதா செய்தகுற்றம் மக்கள் தலைமேலே வந்து
மாட்டுமென்ற முதுரையுங் காட்டுதே பாரும்
ஏதொரு பிழையுநானும் செய்ததில்லையே தப்பே
இங்கு நானிருக்கத் தாய்தந்தை யேகவும்
ஊரைவிட்டுப் போங்களென்று ஆரார்சொன்னுரோநானும்
உடக்கையா யிருந்தரசு வுகந்து செய்வேனே
ஆராகிலு மிப்பிழைகள் செய்யதகுமோ சொல்லும்
அய்யரே நானும்முடனே மெய்யதாய் வருவேன்

அப்பாஸ் சொல் விருத்தம்

ஊரவர்சொல்லக்கேட்டு வுகந்து அப்பாஸ் சொல்வார்
பார்தந்தை தாயைவிட்டு பணியரசிருப்பேனோநான்
சீர்பெருஞ் சொல்லைபோலே திகைப்புடன் நாங்கள்போரோம்
பேர்பெற நீங்கடனே நட்புடனிருந்துவாழ்வீர்.

அப்பாஸ் சொல் தரு.

பத்தரமணிமாட அந்தமாககரானும் ஊரார்களே எந்தன்
மாதாபிதாவை நான்விட்டுப் பிறிவேனோ ஊரார்களே

எந்தனையரசு செய்யென்றுரைத்தீர்களே ஊரார்களே என்னை
யீன்றிடுந் தந்தையை விட்டுப்பிறிவேனோ ஊரார்களே

பதியிழந்து தந்தைதாயுமரு தேயத்தில்போகவோஊரார்க
பார்த்திருந்து கானிவ்வூரி லிருப்பேனோ ஊரார்களே

தப்பில்லையென வந்துமாநகர் தனிலுள்ள ஊரார்களே மனஞ்
சலித்துநின்றப் பாசுதாய்தந்தை யிடம்போறேன் ஊரார்களே

அஹமதுசா சொல் விருத்தம்

அந்துமாநகரந்தன்னை யறுதியாயிழந்தோ மென்று
மைந்தனுங்கூடச்சொந்த மனையியுந்தானுமாக
என்னசெய்வோமென்றுவாடி யிருதயமெல்லாஞ்சோர்ந்து
கத்தியேவருகும்போது கண்டனர்சகுனந்தானே.

தரு

அரசிழந்து வெளியில் வருகும்போது ஒருபெண்
ஆனையிட்டுங் குறுக்கே மறிக்கிறுளே

கொழுந்து விட்டுத்தணல் கெருப்பெரிய ஒரு
குமரிக்கொண்டு யெதிரே வருகிறுளே

பங்கமென்னவழியில் வந்திடுமோ என்
பத்தாவே யிதற்கேது செய்வேன்

காணமாடி யெண்ணை விற்குமந்த ஒருவன்
கசடுதுணிகட்டி யெதிரேவாரான்

தலைவிரித்து வெகுகோலமதாய் யெண்ணை
தலையுடனே யொருவ னெதிரேவாரான்

ஏராளமாமுன்னே செம்பருந்து யிங்கு
யிடவலமாய்க்கக்கிப் போகுதயோ

காட்டில் கள்ளர் வருகிற விருத்தம்.

மூவரும்புலம்பிக்கொண்டு முன்னவன்தன்னைப்போற்றி
ஆவிசோர்ந்தவர்கள்போலே யழுதவர்வழிகள்தேடி
மேவியேநடக்குமந்த வேளைசிற்றிருட்டுக்கள்ளர்
தாவியேகளவுசெய்யத் தானுமேவருகின்றுரே.

கள்ளர் வருகிற தரு

கால்குசல்லடமிட்டு யிடுப்பில்
கருத்த கருங்கச்சை சேர்த்துக்கட்டி
பால்குடன் கொண்டையிலே ஒளிவுடன்
பட்டுநூல் கயருடன் கட்டிக்கொண்டு

ஓங்கும் வலதுகையில் புலித்தோல்
ஒருமிக்கத்தானே விருதுகட்டி
அஞ்சாதடிக்கும் பெரிய தடியுடன்
அக்துமான் கள்ளர்களுந் தோன்றினரே

கெக்கரியிட்டுக்கொண்டு அடிக்கடி
கிலுக்கிவல்லயங்களை குலுக்கிகொண்டு
சங்கரமாட்டிக்கொண்டு கைகளில்
கருங்காலித்தடிகளைப் பிடித்துக்கொண்டு

உக்கிரங்காட்டிக்கொண்டு சடுதியில்
உறுக்கிக்கொண்டு மீசைமுறுக்கிக்கொண்டு
அக்கிர்மம்பேசிக்கொண்டு காட்டில்
அக்துமான் கள்ளர்வந்து தோன்றினரே

கண்களில்நெருப்பெரிய கர்ப்பங்
கலங்கிடகேட்போர் மனம்மயங்கிடவே
சிங்கமும்பயக்தோட அப்பாசுங்
திடுகிடச்சுலைகாவு கடுகடுங்க

அங்கமுகடுகடுங்க-பூமி
யதிர்க்திடவேர் வைக ளுதிர்க்திடவே
அக்கணபேசிக் கொண்டு-காட்டில்
அக்துமான்கள்ளர் வந்துதோன்றினரே

உயர்க்தவஸ்திரங் கிடைக்கும்-பசுக்தங்க
உடைமைகள்கிடைக்குக் திரவியங்கிடைக்கும்
இயக்தவாள் கிடைக்கும்-இன்னம்
கமக்கேற்றவில்லம்புக் தான்கிடைக்கும்

கயகவரத்தினங்கிடைக்கும் இக்தவேளை
கலமுடன்வாய்த்ததென்று மனதிலெண்ணி
அயர்வில்லாக்கோபமதாய் காட்டில்
அக்துமான்கள்ளர்வந்து தோன்றினரே.

கள்ளர் சொல் விருத்தம்.

இப்பொழுதிங்குவந்த தெவராடாகில்லுகில்லு
அப்புரம்போவீராகு லம்பினுலெய்துகொல்வோம்
செப்பமாயுயிர்பிழைத்துத் தேசந்தனிலிருக்கவென்றால்
கைப்பொருள் வஸ்திரமெல்லாங் கழட்டிவைத்தகலுவீரே,

அஹமது சாஹிபு சொல்கிற விருத்தம்.

எமதுகைப்பொருளும் வஸ்திரமிவையாவுங் கேட்டபோதே
உமதுள்ள மிரங்கியானு முத்திரன் சொல்லக்கேளும்
அமருலகாளுமந்துமா நகரா சிழந்து நாங்கள்
சுமையாபோல் வந்தோமிப்போ சித்தமுன்பாக்கியமையா.

அஹமது சாகிபு கள்ளர்கட்கு சொல்தரு

கைப்பொருள் பறிக்கின்ற கள்ளர்களே ஒருவார்த்தை சொல்கிறேன்
காதாரக்கேட்டு கருணைவைத்தாள்குவீர் கள்ளர்களே [நீங்கள்
அருள்மிகும்அந்துமா நகராண்டிருந்தேன்நான் கள்ளர்களே நான்
அனியாயக்கள்ளுண்டு அவதிப்படுகிறேன் கள்ளர்களே
கோடானகோடி தர்மங்கள் செய்தேன்யான் கள்ளர்களே இப்போ
மாபாவிப்போலே மயங்கித்தவிக்கிறேன் கள்ளர்களே
சீருடனே நீங்கள் சித்தம்வைத்தனுப்பினுல் கள்ளர்களே நாளும்
செகமெய்க்கப் புகழுடன் சிறப்பாக வாழுவீர் கள்ளர்களே

கள்ளர் அஹமது சாயபுக்கு சொல்தரு

இதுவே தொழிலாக யிருப்பவர் முன்பினில்
புதுமொழியாக நீ பேசாதே போடா
கள்ளரே யென்றெங்கள் காலில் விழுந்தாலும்
உள்ளமிரங்காது வோடி நீ போடா
பெண்டு பிள்ளைகளை ரெண்டு துண்டாக்குவோம்
கொண்டுவந்த பொருளை கொடுத்து நீ போடா
எட்டுதிசையை நீ யாண்டாலு மெனக்கென்ன
கட்டின வஸ்திரங் கழட்டிஎந்து போடா

சபை விருத்தம்.

வந்திடுங்கள்ளர்தானு மருகியே வளைத்துக் கொண்டு
விந்தையாப் பொருளும் வஸ்திர மேவிய நகைகள் மற்றுஞ்
சிந்தையின் மகிழ்ச்சி பொங்கித் திரேகமும் பூரித்தோங்கி
தந்திர மாகவேதான் சர்வகொள்ளை யாடினரே

அஹமது சாகிபு சொல் விருத்தம்

கொள்ளைக ளிட்டபின்பு குதிரையும் வாளுமீந்து
உள்ள குஞ்சலித்து கொந்து உடனஹமது சாவென்னும்
விள்ளொண்ணுப் பொருளும் வஸ்திரமனத்தையு மிழக்கோ
உள்ளமுங் கலங்கிவாடி யுருகியே புலம்பலானர் (மென்று

அஹமது சாகிபு புலம்பல் தரு

அரசுபதியிழுந்தேன் ஆனைகிதியிழந்தேன்நஹமானே நானும்
அனியாக் கள் ளுண்டு உனைமறந்திருந்தேனே இறையோனே

பெருகியகோலுத்தன்னை பேதலித்திருக்கேன்றஹமானே இன்னம்
பேர்பெற்ற மணிமகுடப் பெருமையு மிழந்தேனே இறையோனே

மந்திரிமார்களை சொந்தமா யிழந்தேனே றஹமானே எந்தன்
வகையான பதினெட்டுவிருந்தையு மிழந்தேனே இறையோனே

ணாரூற முறையே கோரக யிழந்தேனே றஹமானே இன்னம்
உற்றசிவிலகாதம் மற்றதெல்லா மிழந்தேன் இறையோனே

காடுவனந்தன்னை கடந்துகானடக்கையில்றஹமானே பொல்லா
கள்ளர் வழிமறித்துக் கொள்ளைகள் செய்தாரே இறையோனே

பெண்டுபிள்ளை நாலும் புலம்பி தவிக்கிறோம் றஹமானே நாலும்
செய்த பிழைபொறுத்து வையமதிலே சேர்ப்பாய் இறையோனே

அஹமதுசாகிபு சொல் விருத்தம்

தலையெழுத்ததனை தந்தைத் தாயுமே நினைக்குங்காலை
உலையிடு மெழுகைப்போலே உருகியப் பாசேகேளும்
நிலைதனை விட்டுநாமு நெறிதனினடப்போ மென்றால்
பலன்பெரு மகனே நாங்கள் பசியினால் நடக்கமாட்டோம்

அப்பாஸ் சொல் விருத்தம்.

தந்தைதாய் வசனங்கேட்டுத் தலையெழுத் திதுவோவென்று
விந்தைசேர் செங்கோற்றன்னை விளங்கவே செய்தீர் நீங்கள்
அந்தமாயமைத்திட்டானோ வாதியின் செயலென்றெண்ணி
பக்தமாய் பசிக்கு யேதும் பாங்குடன் பார்த்துவாரேன்

அப்பாஸ் வேட்டை விருத்தம்.

அப்பொழு தப்பாசென்று மாசறுந் தாயார்தந்தை
யெப்பெறும் பசியால்வாடி யிருப்பதைக் கண்டுதாதை
பொற்பதம் பணிந்து போற்றி புரவிமே லேறிவேலுங்
கைப்பிடித் தனையவேட்டைக் கருதிய காட்டிற் சென்றார்

அப்பாஸ் வேட்டையாடிய தரு.

கையினில் வல்லயமு மிடது
        கையினில் குதிரைக் கடிவாளமும்
பையவே நடந்திடுவார் மலைகளை
        பாய்ந்திட துரகதந் தீண்டுவார்
காண்டகா வனந்தனிலே உயர்மலை
        கல்லிலுஞ் செல்லிலுஞ் செல்லுமப்போ
சென்றிடு மப்பொழுது யெதிர்த்த
        சிங்கம் புலி கரடி யினங்களையும்

துண்டு துண்டென வேலால் குத்திடுவார்
　　துறத்தியே குதிரையை நடத்திடுவார்
நடத்திடுவார் குதிரைதனை மான்மறை
　　காடிடுந் திசைதனை தேடிடுவார்
தேடியே வரும்பொழுது யறிவில்லா
　　சிந்தைபோல் வெண்கண் சுரந்தனிலே
கூடியமான் வெருவாக் கலைகளுங்
　　குட்டியும்வட்ட வாரிதிபோல்
வாரிதிபோல்மான்கள் கால்சோர்ந்து
　　நிற்கும் நிறிதுகளை மெய்ப்புடனே
மெய்ப்புடன் அஹமதுசா அருள்துரை
　　வீரனெனுமப்பாஸ் கண்டு
தப்பில்லை நமக்கெனவே மான்களை
　　தாக்கிடவேணுமென் றுக்கிரமித்து
குதிரை நடத்திக் கொண்டு கைவேலைக்
　　குலுக்கிக்கொண்டு மீசை முறுக்கிக்கொண்டு
குத்தினார் வேலாலே அடங்தவா
　குத்திட ஒரு மான் பட்டுருக　　　　　　　　தெந்தினதின

அப்பாஸ் விருத்தம்.

பட்டிடும் வேலைக்கொண்டு பாய்ந்து மானோட ராஜன்
திட்டெனக் குதிரைதானுந் திகைக்கவே மானைநாடி
எட்டி மானோடக் காட்டி லெங்கினுங் கண்டிடாதால்
பட்டிலா வரசர்மூள வாசியுங் காண்கிலரே.

இதுவுமது

வேலுடன் மானுங்காண மீண்டிடுங் குதிரைகாணப்
பாலனப்பாசுநின்று பரதவித் தலைவாய்ப்பட்டு
கோலனும் சுரும்புபோலக் கொடுஞ்சுர தாவிசோர்ந்து
காலினல் நடக்கும்போது கடுவழி புலம்பலானார்

அப்பாஸ் புலம்பல் தரு கண்ணிகள்.

ஆதிமுதலே நப்பே ஆண்டவனே துய்யமானே இப்ப
சோதியே யெங்கள்மனதை சோதிக்கவென்றோ யென்தாதை
　வயிற்றினில் வந்தநோயால் மதுவையுண்டிடச் செய்தார்பின்பு
　பயித்தியங்கொண் டாசிழந்து பரதேசிபோல் காட்டில்வர
திருடர்வந்து யெமைவளைத்து திரவியமெல்லாம் பறித்தார் இன்னும்
உருவிலர் திருடர் மகிழ்ந்தே ஒருகுதிரை வேலுமந்தச்

கள்ளர்தர்மஞ் செய்தபோது கடும்புரவியதை வேட்டையாடி
உள்ளதெல்லாம் பறித்துக் கொண்டாருனையறியா [இப்ப
[வேறொன்றில்லை

கொஞ்சுங்குதிரையுடன் வேலும்கோலமுடன் ருணிழந்து
எங்கள் தலைவிதிபோல் யெவர்கட்கும்வரவேண்டாமே

ஜுலைகா புலம்பல் தரு கண்ணிகள்

ஆதிறஹமானே யருளொளிவே துணி
ஆலமெலாம் படைத்தாள்பவனே
நீதிபெரியோனே நிறைவினக்கே யிப்ப
நேர்மையுடன் படைத்தாள்பவனே

ஆசையுடன்நாங்க ளகமகிழ்ந்து நல்ல
அரசுசெய்துவுல காண்டிருந்தோம்
தப்பிதங்களொன்றுஞ் செய்தறியோம் உன்
தயவினாலேயுல காண்டிருந்தோம்

எப்பொழுதுமுன் யேவல்போலே நாங்கள்
ஏகபோகமாக வாழ்ந்திருந்தோம்
கள்ளையுண்ண மனமுண்ணினதால் இப்போ
கண்சலக்கப்பட்டு வாடுகிறோம்

அரசிழந்தோம் சேனைபவுசிழந்தோம் இன்னம்
ஆனசிமமாசனத் தானிழந்தோம்
பதியிழந்தோம் ரத்தினகோலுவிழந்தோம் இப்போ
பரதேசிபோற் பாதைமேவினமே

நாடிழந்தோம் சொந்தநகரிழந்தோம்
நாங்களாறுமற்றப் பாவியாகினமே
காடுவருநடக்க எங்கள்
கால்கள் இண்டும் புண்ணாய் நோகுதிப்போ

மைந்தனே நான்பாவி யென்னசெய்வேன்-அந்த
மாநகரந்தன்னை யாண்டிருந்தோம்.
இந்தவிதிநமக்கு வருமென்று-தலையில்
இருந்ததுவோ கூடப்பிறந்ததுவோ

அப்பாஸ் விருத்தம்

நடக்கவே மாட்டோமென்று நவின்றிடுஞ் செய்திகேட்டு
திடுக்கிட்டறிவு நீங்கிச் சிந்தையிற் கலக்கங்கொண்டு
அடிக்கடி தந்தைதாயாரணிமலர்ப் பாதம்போற்றி
திருக்கென வெழுந்தப்பாஸ் தானுமே வணங்கிச்சொல்வான்

அப்பாஸ் சோச்சம்.

தந்தையரே நீரொருதோள் தாயொருதோள்மீதேரும்
எவ்தவிதமுஞ்சுமந்து மிறைபோ னுதவியினல்
அந்தமுடனே நடப்பே னடிபேனெனவுரைக்க
தந்தைமகன் தோளில்ரண்டு தாய்தகப்பனேறினரே

அப்பாஸ்—தரு

தோள்மீசைரண்டு பூரணமாமதியே-பல
சூரியன்சுமந்து நடப்பதினல்.

ஆளிலழகான வப்பாஸவரும்-தனது
அன்னை தந்தை தனையுஞ் சுமந்தனரே.

சுமந்திடுந்தயிரிப் புயவல்லார்-மனம்
சொந்தமல்லோ புலம்பியவர்சொல்வார்.

தேசமெல்லா மாண்டிருந்தோமதியே-இப்போ
தியும்வேனலுந் தலையில்விதியோ.

ராஜராஜர்யெமைச்சுமந்தார்மதியே-இப்போ
நான்சுமக்கயென்றலையில்விதியே

பஞ்சணைமெத்தையில் நடந்தேன்மதியே-இப்போ
பாலனிலந்தனில் நடக்கவிதியோ

கொஞ்சும்பரியேனென் முன்மதியே-இப்போ
கொஞ்சுரத்தில்நான் சுமக்கவிதியே

ஆதியேநீயறிவாய் மனப்பொருக்தம்-இப்போ
ஆருடன் சொல்வே னெதுவருத்தம்

ஏதுசெய்வேனென்று கொடுஞ்சுரத்தில்-ஓர்
கல்லிரடிவிழுந்தா ரப்புரத்தில்

பொது—விருத்தம்

ஏகிபேவருகும்போது மியலஹமதுசாகிபும்
ஆகமுமெலிந்துசோர்ந்து வறிவுகளனைத்தும்போக்கி
லாகனும் புலம்பிக்கொண்டு வருவழிதனிலப்பாஸ்
தாகமுமபெரிதுண்டாகி சலித்துபேகிலத்தில்வீழ்ந்தார்

ஜாலிகாசொல்—விருத்தம்.

நிலந்தனில்வீழ்ந்தபோது நேர்பெருந்தாயார்தந்தை
சளித்தவரெழுந்துமெள்ள தழுவியேமகனைப்பார்க்க
நல்மகனுவிசோர்ந்துநலமுட விருக்கக்கண்டு
[illegible]

ஜுலேகா தரு

என்மகனேபொன்மகனே ஏகவனந்தனிலே
எந்தனைவிட்டுபிரிந்தாயோ என்பொனமகனே

பொன்மகனேஉன்னழகை புனிதமுடனினைந்தால்
பொருந்துமுயிர்தரிப்பேனோ என்கண்மகனே

கண்மலரையுந்திறந்து கனிவாய்முகமலர்ந்து
காதலுடன்செய்திசொல்வாயே அப்பாஸரசே

பாலகனேயெனைச்சுமந்து பாதைவழிதனிலே
பாரவுயிரிழந்தாயோ என்கண்மகனே

ஆதிபெரியவனே அழியாப்பரம்பொருளே
அரசுமகனிழந்தேன் நடுவனத்தில்

சோதிபெரியவனே துன்பமெல்லாமகற்றி
தோன்றுங்கிருபைசெய்யாயோ யெங்கள்தனக்கு

சொல்லழகும்பல்லழகுஞ் சோதிமுகத்தழகும்
தோதகமாயிழந்தேனே என்பொன்மகனே

அஹுமதுசாகிபுசொல்—விருத்தம்

உருகியேபுலம்பிக்கொண்டு வுயர்புகழ்ஜுலேகாதானும்
சருகிலாப்பட்சிபோலே சஞ்சரித்திருக்குங்காலை
உரிமையாய்த்தவங்கள்செய்துவுகந்ததன்மகனப்பாஸை
பரதவித்திழந்தோமென்று பாதுஷாபுலம்பலானர்

அஹுமதுசாகிபுசொல்—தரு

வல்லபெரியவனே-புவி-வானம்படைத்தவனே
அல்லுடன்நான்செய்தபிழை-யனைத்தும்பொருத்தருள்வாய்
ஆகாயத்தியக்கள்ளுண்டு-பதி-யாகுமிழந்தேனே
ஏகும்வனந்தனிலே-கொள்ளை-யிடவுங்கொடுத்தேனே

வேண்டுந்தவங்கள்செய்துபெற்று விருப்பமுடன்வளர்த்தே
தாண்டும்வனந்தனிலே மகன் றுவிச்சுமந்தானே,
தாவிச்சுமந்தேகி-யருந்-தலைமையுள்ளமகனே
ஆவிதனையிழந்து-வனத்தி-லலறிவிழுந்தாயே,

தவமேவியமகனே-இந்தத் தரணிதனிலிழந்து
நலமேவியயென்னுயிரை-நான்-வைத்துயிருப்பேனோ—
அருமையுள்ளமகனே-அப்பாஸே—வரசேமகிபதியே
உரிமையுடனுனை நான்—விட்டு-வுலகிலிருப்பேனோ.

உலகம்புகழ்மகனே-நானு-முனக்கேயுன்காலடியில்
[illegible]

உன்னை விட்டுப்பிரிந்து-இந்த-வுலகந்தனிலேநான்
வின்னமில்லாமகனே-நான்-மேவிருப்பேனோ,

ஜுலேகாசொல்-விருத்தம்.

இப்படிபாதுஷாவுமேங்கியேபுலம்பிக்கொண்டு
கைப்படுங்கிள்ளைபோலே கதறியேகடக்கும்போது
மைப்படுங்குழலைகாணு மனைவியாஞ்ஜுலேகாவென்னும்
அப்பிடுமெழுகைப்போலே வலறியேபுலம்பலானர்

ஜுலேகாசொல்-தரு.

ஏதோவறியேனே ஆதியெந்தலையில் இந்தவிதி
சோந்தமா யெழுதினானோ
வயிற்றில்வலிவரவே மதுவைவரிந்திகுடித்ததினல்
சிறந்திடும் பதியகல

கண்ணேகாணுமுன்னே உந்தன்காலடியில்
யென்னுயிரை கோலமுடன்விடுவேன்
பாதைவழிமேவஎந்தன் பாலன்சுமந்திடவும்
காலனுயிர் கொள்ளவும்,

மேவிவரும்போதுவழியில் சொல்லவொண்ணுச்சகுனத்
தடையுள்ளதெல்லாம் வரவே
காடுவனந்தனிலேபாதை கள்ளனுவந்ததுள்ளதே
கொள்ளைகளுஞ் செய்தார்

ஆதிபெரியோனே யென்னருமையுள்ளமகனே
பிரியவிடவோ வளர்த்தேன்
சோதிபெரியோனே யெங்கள் துன்பமெல்லாமகற்றி
இன்பந்தரவே கடனே

பொது விருத்தம்.

அந்துமாககரையாளு மஹமது சாகிபுமைந்தன்
விந்தையாய்த்தந்தைதாயை மேவியேசுமக்கும்போது
கந்துகந்தனிலேராஜன் கல்லதுதடுக்கவீழ்ந்தார்
வந்துமேயெழுப்பக்காகம் வரும்வினையெடுத்துச்சொல்வாம்

வெள்ளைக்காகம் வருகிறதரு,

காகம்வந்துதே மணிவெள்ளைக்
காகம்வந்துதே
காகம்வந்து ஏகப்பிரகாசமாக
கானகந்தனிலே யோகன்றனைத்தேடி (காகம்)

கண்களிரண்டுக் தணலாயெரித்திட
கண்டபேர்களு நினைவுமயங்கிட
பண்டுபோலவர் தனையெழுப்பிட
பாரவனந்தனி னேருடனே வெள்ளை (காகம்)

கானகந்தனிலே மாண்டுகிடக்கின்ற
கண்மணியான மகன்றனை தேடிய
கண்ணைமூடி முழிக்குமவர்முன்னே
காட்டினிலப்பாஸை தட்டியெழுப்பிட (காகம்)

பண்பாகவன மேருமயங்கிட
பருத்தசிரசை விரித்துபறந்து
அன்பாக வெள்ளைக் காகவேடங்கொண்டு
அரசனிடத்திலே பிரியமாகவே (காகம்)

பொது விருத்தம்.

இப்படிதாயார்தந்தை யேங்கியேபுலம்பும்போது
ஒப்பில்லானருளாய்வெள்ளை யுயர்சிறக்காகம்வந்து
துப்புறச்சிவந் தவாயாற் சொண்டினாற் கொற்றியேக
சொற்புகழப்பாஸென்போர் தூங்கியே விழித்தெழுந்தார்

ஜுலைகா சொல் கொச்சகம்.

முழித்தெழுந்தகண்மகனை மோகமுள்ள தாய்தகப்பன்
தழுவியணைத்துமவர் தாகந்தெளிந்த பின்பு
பழுதோன்றிலாமகனே பசிபொறுத்திருந்தாலும்
தழும்புகின்ற யெங்களுக்கு ஜலமருள வேண்டுமப்பா

அப்பாஸ் விருத்தம்

எந்தனைபெற்றதாயே யீன்றிடுந்தந்தையாரே
இந்தகல்மரத்தின்கீழே யிருந்திடுகாலு மேகி
பந்தளங்கனிகாய் தண்ணீர் பருகவேகொண்டுயானும்
வந்துமேதருவேனையா வகையுடன்சொல்லககேளும்

அப்பாஸ் தரு.

சென்றனர்காட்டினில் விரசாய்மனத்
திறத்துடன்தையிரிய துரையப்பாஸரசன்.

கண்டிலாவனமெல்லாந்தேடி-மயில்
காவெனக்கூவிடவே மனப்பிரியம்

அறிந்திடகாணாமல்வாடி நின்ற
ஆதியனாதிவல்லோனையும் நாடி.

காடியகாட்டம் நிறவேற் றப்-றப்பே
நான்செய்த துஆவை கைசேர்த்து
　தீராத்தவனத்தை தீர்க்குமறப்பே
　சீக்கிரமென்றெரு திசைதன்னை நோக்கி.

கண்டனர்தண்ணீர்த் தடாகம்—தண்ணீர்
கண்டவுடனேயவர் கொண்டவிடாய்கள்,
　கொண்டாடி இறைதன்னைப்போற்றி-அல்லாஹு
　வென்றுநீரில்குளித் துடல்தேற்றி,

குளித்தனர் குடித்தனர் தண்ணீர்-கையிலிருந்த
குல்லிவலம்புரியது தன்னில்தண்ணீர்
　எடுத்தனர் தந்தைதாயவருக்கு-வெகு
　இச்சையுடன் கொடுவேகினர் மன்னர்.

மன்னவரப்பாஸ்கடந்து-வரும்
வழி தனிற்பழித்த கற்காய்கனிதொடர்ந்து
　முன்னவன்விதியையு ணீனத்து-யீன ரோர்
　முன்பாகவைத்தனர் மோகமாய்கடந்து,

பொது விருத்தம்.

கடந்தப்பாஸரசன்றுனுகயமுள்ள தாயார் தந்தை
யிடந்தனிற்கனிகாய்தண்ணீர் யினிதுடன்குடித்தபின்னர்
அடர்ந்தவர்பாதைநீங்கி யனுகியோர்நகரைச்சேர்ந்து
மடந்தனில்மூன்றுபேரும் வந்துமேயிருந்தாரனரே,

அஹமதுஸாஹிபு சொல் விருத்தம்.

படைத்தவன்விதியோயிந்த பாரினிடந்துகொண்டு
கடந்தவர்தாயார்தந்தை கருதலாய்சொன்னேனிப்போ
மடந்தனிலிருந்துகொண்டு மகன்றனை கூவிச்சொல்வார்
கடந்தவர்பசியால்வாடி கலிவுடனிருக்குங்காலே.

அப்பாஸ் சொல் பொதுவிருத்தம்,

இருக்தபின்மகனை கூவி யெங்கடன்பசியைத்திரும்
அருந்தவமகனேஎன்ன வரசரப்பாஸ்சொல்வார்
பொருந்தினேனென்னாயிந்தப் புகழ்பெருநகரில்வீற்று
வரும்பெரும்பசியைத்தீர்க்க வகையுடனெப்பினேனே.

அப்பாஸ் சொல் விருத்தம்,

இவ்விதியெனக்குமுண்டோ யெழில்பெறுந்தாயார்தந்தை
தவ்வியபசியைத்தீர்க்கத் தருகானப்பாஸென்னும்

எவ்விதந்தணிப்போமென்று மிருதயமெல்லாம்வாடி
நவ்வியமுகத்தைப்பார்த்து நளினமாய்ச்செய்திசொல்வார்.

அப்பாஸ் தரு.

வானருகுகுறுகுமலைகட லும் வானம்புவியேழும்-அவர்
மேன்மையதாய்ப்படைத்து அதிலின்னமேவுமுயிர்களெல்லாம்
சோடுசோடாகவே படைத்திரணம்கொடுத்தே
வாடும்பயிர்க்குமழைபோ லுதவிவல்லோனைத்தான்றுதித்து
தாய்தகப்பன்மடந்தனிலே பசிகரத்தாலிருந்து—அவர்
வாயாற்புலம்பித்தவிக்கிறாறிப்போ வண்மை *கைறுகொடுங்கள்
காடுகரிழந்தோம்சொந்த சளினமாய்க்கொலுவிழந்தோம்-நாங்கள்
ஆடுந்துரும்பதுபோலிருக்கிறோம் மள்ளிகையிற்கொடுங்கள்.
அல்லாதனக்காகல்ல தெள்ளிய வாசகனு-ரப்பாஸ்
உள்ளதெருவெங்குந்தானலைந்தே யுன்னிக்கைறுகேட்டார்.
மீடிகைமாளிகையும்வீதி யெங்குமபிசகாமலேதானடந்து-றப்பே
நாடிகையேதும்தந்திடுங்கள் நயமானதீனோர்களே.
மடத்தனிற்தாய்தகப்பன் புலம்பிவரும் வழிதனைப்பார்த்திருப்பார்
வடிவுடையதீனோர்களே வண்மைகைறுகொடுங்கள்- [வெகு
சுற்றித்தெருவெங்குமேகத்திகத்தி சுழன்றுவருகையிலே-ஒரு
கொற்றவனும்புகழ்த்துயென்னுடன் றொட்டிக்கொடுத்தனரே.

சபை விருத்தம்.

வந்தனர்மடத்தில்மன்னன் வரிசையாய்த்தாயார்தந்தை
சிந்தையால்தொழுதுபோற்றி சிறந்தவரிருந்தபின்னர்
அந்தமாய்பொழுதுபோய் யடைவுடன் விடிந்தபின்பு
வந்தொஜிபனங்கள்வாங்க வப்பாஸ்புறப்பட்டாரே.

அப்பாஸ்சொல் இன்னிசை

அந்தமடமீதிருந்து வன்னைபிதாவும்பசியால்
நொந்துமனம்வாடவே நோக்கியவப்பாஸ்சொல்வார்
இந்தநகரிற்புகுந்துயாவும் ஒஜிபனங்கள் வாங்கி
தந்திடுவேனுங்கள்பசி தான்றீரவென்றெழுந்தார்

அப்பாஸ் தரு.

எழுந்தேமனம்குளிர்ந்தே மடங்கடந்தேமெள்ளநடந்தே
இந்துபோல்பதிவிலங்கிய சிந்துதேசத்தைக்கண்டார்.
கண்டார்தையிரியங்கொண்டார் தெருச்சென்றாரங்குநின்றார்
கண்டிலாமனுவொன்றையாகிலும்வென்றிசேர்மொழிவிண்டார்

* கைறு—பிச்சை.

ஐயரேபுகழ்மெய்யரே வளரண்ணலேஒருமன்னரே
அஞ்சுதேபசிமிஞ்சுதே நீங்களாருமேயேதுந்தாருமே
மங்கையேகுயிலிங்கிர்தமொழி நங்கையேயென்றங்கையே
வாடுதேபசிநீடுதேகொண்டுவாருமே ஏதுந்தாருமே.
அன்னமேமயில்வன்னமே உயர்சொர்ணமேபசிக்கென்னமும்
அப்படிபண்ணுமல்யெட்டியேவந்து அள்ளியேதாருமுள்ளதே.
இந்தப்படியந்தத்தெரு வெங்கெங்கும் வீடுவெங்கும்
எட்டியும்கதவைதட்டியுங் கெட்டேகினார்தெருவாகினார்.

போது விருத்தம்

சிந்துவின்தேயமெங்கும் திரிந்தலைந்தப்பாஸென்னும்
உந்தியபசிதனக்கு உணவுகளகப்படாமற்
சிந்தைநொந்தேங்கியங்கோர் சீருடமனையின்கண்ணே
வந்துமேநின்றாரங்கோர் மனுஷிகள்யாரென்றனே

அப்பாஸ்சொல் விருத்தம்.

ஆரெனக்கேட்டசெய்தி அரசனப்பாஸறிந்து
பாரினின்மிசுக்கின்யானும் பசிக்கெதுமீவாயென்ன
நேர்பெறகேட்டபோது நீட்டினார்பாதிரொட்டி
தாரணிமார்பன்வாங்கி தாய்தந்தைதமுன்னில்வந்தார்.

இதுவுமப்பாஸ் சொல் விருத்தம்.

வாடியபசியைதீர்த்து வாகுடனிருக்கும்போது
நீடியபுகழப்பாஸ் நேர்பெருந்தந்தைதாயார்
சாடியேபுலம்பிமெத்தச் சலிப்புடனிருக்கக்கண்டு
நாடுள்ளகூலிசெய்ய நலமுடன்புறப்பட்டாரே

அப்பாஸ்—தரு

ஆதிபெரியோன்றனையே நீதியுடனேதொழுதுபோற்றி
அப்பாஸரசன்தந்தைதாயிடத்தில் பிரியமுடனேவிடையும்வாங்கி

வாங்கிமடமீதிருந்து வோங்கிவழிப்பாதைகளுங்கடந்து-நாளும்
வஞ்சியர்கள்புகழொளிக்குஞ் சிந்துநகர்வீதிதனில்சென்றார்

சென்றுநின்றப்பாஸரசன்கண்டுமொழிவாய்திறந்துவிண்டார் எங்கள்
சிந்தைமகிழ்கூலிவேலை விந்தையுடனசெய்வேன்கேளீர்

முத்துக்குச்சுக்கட்டிடுவேன் சுற்றிகணையாரங்க செதரிப்பேன்-ஆறு
மோகிக்கும்படியேசெந்த வாடைப்பொடியுங்கலந்துரும்புவேன்

முழுவைரம்நீலம்பச்சையழகுடனே பார்வையுகானிடுவேன்மின்னம்
மோசனமாலைபணியும் ஆகமுடனேஒழுங்காய்த்தரிப்பேன்

ஆனைமேலர்பாரிவைத்து நேருடனேசுற்றியேநான்வருவேன்நீங்கள்
அருமையுடன்படித்துக்கொண்டு பெருமையுள்ளகூலிதாருவீரே
குதிரையினையேயேற்றுடனே சதிருடனே தாலியெங்கும் வருவேன்நீங்
குணமுடனேபடித்துக்கொண்டு திடமுடனேகூலிதாருவீரே [கள்
சித்திரவப்பாளரசன் சுற்றியெங்குகின்றுகேட்க அங்கு
தோதகமாய்க்கூலிவேலை யேதுங்கிடையாமல்மனஞ்சலித்து
மனஞ்சலித்தேதாய்தகப்பன் கனபசியால் மடந்தனிலேயிருந்துநான்
வரரவழிபார்த்திருப்பார் நேருடனென்செய்வேன் றஹ்மானே
என்னசெய்வேனென்றுமிக வன்னமசனப்பாண்டுடந்து மனம்
ஏக்கியதோர்தலைக்கடையில் பாங்குடனேநித்திரைசெய்தாரே

அப்பாஸ் சொல்—விருத்தம்.

நித்திரைசெய்யும்போது நேரமாய்ப்பைரியொன்று
சுற்றியேபறந்துவந்து தோன்றல்கைமீதிருக்க
பத்தியேபிடித்துக்கொண்டு பாதையிலேகித்தானுந்
தத்தியேநடந்துதந்தை தாயிடஞ்சொல்லலுற்றார்

வ-ம், ஆனால்சேனும் என் தாய்தந்தையே! நான் இந்தவூரில் கூலிவேலை செய்யப்போனவிடத்தில் யாதொரு வேலையுமகப்படாமல்மனவருத்தமாய் ஓர் தலைக்கடையில் படுத்து நித்திரைசெய்து விழித்துப்பார்க்கும்போது ஓர்பைரி பட்சியானது வந்து கையிலிருக்கக்கண்டு அதைப்பிடித்துக்கொண்டு வந்தேனானையால் இந்தப் பட்சியை கடை வீதியிற் கொண்டுபோய் விற்றுகிடைக்கும் பணத்தைக்கொண்டு உங்கள் பசிக்கேது முணவுவாங்கி வருகிறேன் தந்தைதாயே

சிந்துதேசத்திராஜனின் கட்டியன் வருகிற-விருத்தம்

சிந்துபாரககரையாளுஞ் சிங்கனூரரசர்தானுங்
கந்துகமபோலேவாழுகந்து கனமுடனிருக்கும்போது
சந்தகமில்லாநாளுஞ் சார்ந்துமேயிருக்குங்கட்டியன்
சுந்தரவிருதுகூற சொகுசுடன்கொலுவில்வந்தான்

கட்டியன்-தரு.

வாசல்கட்டியக்காரன்வந்தான்-மகாராஜன்
வாசல்கட்டியக்காரன்வந்தான்
வாசல்கட்டியக்காரன் நேசமுடனேவந்தான்
தேசதேசமபுகழும வாசமுடனேகொலு — வாசல்
சக்கரத்தலைபபாவுகதரித்துயின்னம்
சாலுமகசவஸ்திரத்தோடு
சக்கரவேமாறபிறறங்கப்பதக்கனிட்டு
விக்கினமில்லாமல் வெள்ளித்தடிபிடித்து — வாசல்

வெண்டயர்கலகலவென்றொலிக்க-வெகு
  வேந்தர்கள்பணிந்தடிபணிய
யெண்டிசையும்புகழ்பூபங்களமகாராஜன்
  கண்டகண்ட பேர்கள் நின்றுபயங்கிட வாசல்

தங்கப்பிரபைபொருளைசேர்ந்தி-மின்னும்
  சரசமுடனேசபைபசகிநீங்கி
சங்கையுடனேசபைபொங்கமுடனேவந்து
  யெங்கும்புகழுபங்களமகாராசன் வாசல்

கொரலங்கார-விருத்தம்

அரசருக்கரசேசிந்த வன்புடன்சகரையாளும்
அரசனுஞ்சித்துராஜ னன்புடன்வருவதற்கு
கனமபெருசேரமெல்லாங் சனதியாய்ச்சிங்காரிக்க
சரசமாய்க்கட்டியக்காரன் தானுமேவருகின்றானே.

கட்டியக்காரன் சொல் தரு.

சுந்தரமதிமுகத்தார்களே நம்ப
  சிங்களூர் அரசரும் வாரார்காண்
சித்தமுமுகமெங்கும்பந்தலிட்டு நீங்கள்
  சிறப்புடனலங்காரஞ்செய்யுங்கள்

மணிமாலையணிபுயத்தார்களே நமது
  மன்னர்சித்துகொலுவில் வாரார்காண்
பணியொடுமலர்கொண்டு யெதிர்சென்று-நீங்கள்
  கரங்குவித்தடி பணிவீர்களே

சாந்துசவாதணையுமார்பனே-ராஜன்
  சங்கிர்தககொலுவினில் வாரார்காண்
அந்தமுடனேகரங்குவித்துமே நீங்கள்
  அன்புடன்வந்தனஞ் செய்வீர்களே

பாகுமொழிமயில்மின்னார்களே மன்னர்
  பண்புடன்கொலுவின் வாரார்காண்
வாகாய்ப்பிரபைகூந்தல்வார்ந்துபலாமுடித்து நீங்கள்
  வாழ்த்திசோபனமெங்கும் போற்றுங்கள்

சித்துராஜாவருகிற சபை விருத்தம்.

எந்தேந்ததேசமன்ன ரிரஞ்சியேசப்பங்கட்ட
பைந்தமிழ்ப்புலவர் தாங்கள் பலபலகவிகள்சொல்ல
வித்தைசேர்மகதிரியார்கள் விருதுடனருகிருக்க
சித்துராசக்கிரயாளுஞ் சிங்களூர அரசர்வாரார்

சிந்துராஜாகொலுவிற்கு வருகிற விருத்தம்

பேரிழைமங்கைகதானும் பிறபலக்கவரிவீச
காரியரருகினினாலுகளினசங்கீதம்பாட
மாரிபோற்றியானஞ்செய்ய மகிழ்ச்சியாய்ச்சிந்துதேச
நாராசானவரசன னுன்னிதக்கொலுவில்வந்தார்.

இராஜாவருகிற தரு.

இராஜராஜர்புகழ்மருமலர்வாசமே பெருகிவருஞ்சிந்து
தேசமன்னவருங்கொலுவினில் நேசமாயிருந்தனர்

ஆனையும்ஒருபால்வர-யின்னம்-சேனையு மொருபால்முழங்
தினையும்புகழ்ந்தேவரும் சிந்துதேசமிருந்தார் [கிட

கண்ணியரிருபால்மருங்கிலுங் கவரிவீசிவரமகிழுடன்
மன்னனாரரசர்கொலுவினில் மின்னல்போலிருந்தார்

வீணைதம்பூருடன்யெக்காளங் கைத்தாளமத்தளம்
ஓசைகவிவாணர்தான் புகழ சிந்துதேசர்கோனிருந்தார்

அன்னதானமுடன்சொர்ணதானமடைவுடன் கொடுத்தேவரயின்னம்
ஆசைமையலுடன்நடனஞ்செய்தாசியுமகிழ்ந்தே.

சிந்துதேசர்களும்இன்னமதைச் சேர்ந்தமன்னர்களுநெருங்கிட
மெத்தவேபயந்துகொலுவினில் சுற்றியேவருவார்

செப்பொனாதழகுபொருந்தியே குப்பாயம் புனைந்துசிந்துநகர்
கொப்பனாரரசர்கொலுவினில் வொப்புடனிருந்தார்

சிந்துராஜாவின்காவல்காரர்வருகின்றவிருத்தம்,

சிந்துமாநகரந்தன்னில் சிங்கனார் அரசர்தானும்
விந்தையாய்க்கொலுவின்மீது மேவியேஇருக்கும்போது
அந்தமாய்க்காவல்கார னடவுடன்கூடிக்கொண்டு
கந்துகம்போலேதாவிக் கருதியேவருகின்றானே.

காவற்காரன் தரு

சிந்துதேசத்துமன்னவன்நல்ல சிறந்தகொலுவைநாடியே
விந்தையாய்ப்பாதுகாவற்காரனும் மேவியே வந்துதோன்றினான்

பாலாபரிக்ஷைவளமும் நல்ல வளதடியுடன்கவண்டிக்கல்லும்
வேலாயுதங்கள்வாளுடன் கையிலமேவியேவந்து தோன்றினான்

மீசையுங்கையால் முறுக்கியே நல்லமேவுங்கிருதாவுமொதுக்கியே
ராசினியுள்ளோர்நடுக்கிடவேவந்து காவற்காரனும் தோன்றினான்.

களவுசெய்திடும்பேர்களை கல்ல கர்பளிக்காயிறுகொண்டிருக்கிட
சிந்துமன்னவன்சமூகமதிலேவந்து சிறந்தகாவலர்தோன்றினன்

சிந்துராஜாசொல்-விருத்தம்,

அரசர்முன்காவலர்கள ணுகிப்பொன்னடியைப்போற்றி
உரைசெய்வாரரசர்கோமான லோகோகோகாவலரே
மருதியேயிருக்குபெங்கசன் பைரியைக்காணுமிப்போ
கருதியோர்கொடியில்வேண்டும் காவலர்வெளிக்கிட்டாரே

சிந்துராஜாசொல்வசனம்.

ஆனல் கேளும் காவல் வீரியர்களே! யென்னுடைய வேட்டைக்கு ஆதாரமாய் மரிக்இருக்கும் என்னுடைய பைரிப்பட்சியை காணவில்லை. அப்பட்சியை யெவனே கள்ளன் திருடிக்கொண்டு போயிருக்கிறபடியால் அக்கள்ளனை அதிசீக்கிரத்தில் தேடிபிடித்து என்சமுகம்கொண்டு வந்து சேர்சகவேண்டும் காவல்வீரியர்களே,

காவல் வீரியன்செரல் வசனம்,

அப்படியே அக்கள்ளனைப்பிடித்து தங்கள் கனம் பொருந்திய சமுகம் கொண்டுவந்து சேர்க்கிறோம் இராஜாதிபதியே!

அப்பாஸ் சொல்விருத்தம்.

எந்தச்சாதியரானலும் யெனதுதன்பைரிதன்னை
சொந்தமாய்விற்கவந்தேன் சுகமுடன்கொண்டுகாசை
தந்துமேயனுப்பிவைத்தாற் றயவுடன் உணவுவாங்கி
விந்தையாய்க்கொண்டுபோய் வெகுபசியாறுவோமே,

அப்பாஸ் பைரிவிற்குந் தரு.

வடிவுள்ளசிந்துமாககருள்ளோரே-எந்தன்
பைரியைவிலையாகக்கொள்ளுவீரே
தந்தைதாயுகொந்து பசியுடனே வாடி
தானிருக்க விலையதுகூறினேனே

இச்சையுள்ளபேர்களாய் நீங்கள்பாரும் கான்
பட்சமுடனேவிலையாக தருவேனே
ஆசையுள்ளபேர்களே நீர்கேளும் வெகு
அழகுடையபைரிதனனை தருகுவேனே

வந்துகான்வெகுநேரமாச்சே தீனனபேரே
வகையுடனே விலையாய்க் கொள்ளுவீரே
சிந்துககர்கடைவீதிகள்தோரு தீனனபேர்கள்
சித்தமுடனே வொருவரும்கேட்கவில்லை

காவல் வீரியர்விருத்தம்,

சிந்துமாநகரையாளுர் சிங்சனூர் அரசர்தானும்
விந்தையாய்க்கோலுவின்மீது மேவியேஇருக்கும்போது
அந்தமாய்க்காவல்வீரனை யுடன்கூடிக்கொண்டு
கந்துகப்போலேதாவுக்காறதியேவருகின்றனே

காவல்வீரியன் தரு,

வந்துவெளியிற் காவல்காரனின்று மனம்
வாருடனேவொன்றாய்க் கூடிசகொண்டு
சிந்துதேசத்தெரு வீதிசென்று பட்சியைத்
தேடிக்காணாமல் முகமவாடி நின்று
பலபிரிவாகவே வோடிடிடுவார் முகில்
நீலமலைகளெல்லாந் தேடிடுவார்
வண்டுவாலிபகாவி லோடிடுவார் சோலை
வனங்க ளிடங்களெல்லாந் தேடிடுவார்
தேடிடக்காணாமல் யார்பிடிப்பார் பொழுது
சென்றாலாசா னையேயடிப்பார்
இப்படித்தேடியெங்குஞ் செப்பமுடன் கடையில்
அப்புறம்போகையில் மெய்ப்புடனே
கையிற்பிடித்துக்கொண்டு பைரிதன்னை-அப்பாஸ்
கடைவீதிதன்னில் விலைக் கூறக்கண்டேன்.

காவல்வீரியன்சொல்-விருத்தம்.

கண்டனர் காவல்வீரர்கடை தனி லப்பாஸ்கையில்
மண்டலஞ்சேர்சிந்துராஜன் பைரிவைத்திருக்கும்போது
சென்றிடு முயிர்களாவந்து நிண்டேன வேகத்தோடும
ஆண்டையில் பிடித்துகள்ளன ஆரடா நிலலென்றாரே.

வசனம்.

ஆனால் கேளும்பிள்ளாய் வாலிபனாகிய கள்ளனே இன்னகரை யாளும் சிந்துமகாராஜன் வேட்டைக்குத்தகுந்த பைரிபட்சியை நீ எவ்விதமாகத் திருடினாய் சீக்கிரம் சொல்லும் கள்ளனே.

அப்பாஸ்சொல்-கொச்சகம்

எந்தன் நகரிழந்து மிதுவரைக்கும் பட்ட துன்பம்
அந்தமாயர்வர்க்கட்கும் ஆகாது ஆகாதே
வந்தவிதி யெந்தனுக்கு வகையேதும் யானறியேன்
கத்தனே யென்றனை நீகாத்தருள்வாய் றஹ்மானே

அப்பாஸ் புலம்பல்—தரு

வித்தையுள்ள பைரிதன்னை விற்கவக்தயிடத்தில்
அக்தமுள்ள கள்ளனென்று அமைத்திருக்தாய் நப்பு
சுந்தரமா எந்தனுக்குசூதுவினை வாராச்சே
துனியாவில் அமைத்திட்டாயோ சொல்லுகிறேன் யென்விதியே
கள்வனைப்போல்யெனைக் காவலர்கட்டியிழுத்திடவும்
காலம்வந்துதே யென்னசெய்வேன் காத்தருள்வாய் றஹ்மானே
காரணமாயென்னைக்கார்க்கவேணும் றஹ்மானே
கருணைசெய்துயெனையாள் கர்த்தன்பெரியோனே
வல்லவனே யென்விதிபோல்வையகத்தில்யார்க்குமினிவேண்
அல்லலில்லாயென்பிழையை ஆதியேநீபொறுப்பாய் [டா

பொது—விருத்தம்

ஆரடாகள்ளனென்று வதட்டிடவப்பாஸென்னும்
வீரன்றன்சித்தைநொக்து மிகசலித்தழுது நின்றூர்
காரெனமேனிவேண்ட காவலன்தட்டிக்கொண்டு
சிரோன்றுந்தவறிடாத சிந்துமன்னவன்முன்விட்டான்

சிந்துராஜன்-இன்னிசை

மன்னர்புகழ்ச்சிந்து மகிபதிமுன் அப்பாஸ்
தன்னிருகையில் புனைந்ததளையுடனேநிற்கக்கண்டு
உன்னுடதேசமெவ்வூர் உனதுபெயர்சொல்லுமென்றூர்
தன்னுடையகைக்குருவி தானெடுத்ததெவ்விதமோ

(வ-ம்.) ஆனல்கேளும் பிள்ளாய் சோரனே அதோ கையி லிருக்கின்ற எனதுபைரிபட்சியை நீ யெவ்விதமாய் களவெடுத்தாய் அதுவிபரத்தைச் சொல்வதுடன் உன்பெயரும் உன்னூர்பெயரும் விபரமாகச் சொல்லவேண்டும்பிள்ளாய் கள்ளனே

இராஜன்காவலாட்குச் சொல்லும்வசனம்

ஆனல்கேளும் எனது காவல்வீரியரே இதோசிற்கிற எமது பைரியைத் திருடியக்கள்ளனைப்பார்த்தால் சந்திரகுல சூரியகுலத்தில் உற்பத்தியாகிய இராசவடிவாகவே இருக்கிறுன் ஒருக்கால் இராஜகுலமக்களாயிருக்கவும் போதும்ஆகையால் அவன்கைகாலில் மாட்டியிருக்கும் விலங்குகளை அவிழ்த்துவிடும் காவல்வீரியர்களே
(காவலன் வ-ம்) அப்படியே அவிழ்த்துவிடுகிறே மிராஜாதிபதியே

அப்பாஸ்சொல்-இன்னிசை

என்னுடையதேசமூர்யெனதுபெயர்கேட்டமன்ன
என்தக்தையரும்மதுவிலக்கை தானெடுத்துகுடித்ததினல்

அந்துமாநகரார்சொற்போல் அரசையுமிழந்துநாங்கள்
விந்தையுடன்காட்டில்வந்த விதிவசத்தைசொல்வேனே

அப்பாஸ்சொல்—தரு

எவ்விதமோயென்றன்சிந்தின் யேந்தல் அப்பாஸைநகயிற்ருல்
கவ்வியேபுணைந்திருந்த கட்டவிழ்க்கவென்ருர்
கட்டவிழ்க்கவென்றுசிந்த காவலனும் சொன்னவுடன்
அட்டியேதுஞ்சொல்லாமலே கட்டவிழ்த்துவிட்டார்

அப்போதப்பாஸரசன் சிந்துவரசன்முன்னே அகமகிழ்ந்து
தப்பறவேயெந்தன் செய்திதானெடுத்துச்சொல்வேன்
சொல்லக்கேளுமரசேயெந்தன் தோன்றல்தந்தையுடனே
வல்லவன்விதியால்நாங்கள் வாழ்ந்தநகரிழந்தோம்

நகரிழந்துவனத்தில்நாங்கள் பட்டபாடனேகமுண்டு
உகமையில்லாயிப்போதுந்தன் ஊர்தனக்கேவந்தோம்மன்னே
வந்துமூன்றுநாளில்முன்னை மன்னவனேயிப்போ எந்தன்
தந்தைதாயின்பசிதீர்க்க தான்வருகும்போது

கோதடையும்நானுமொரு பீடிகைமீதுறங்க
போதுவுந்தன்குருவிவந்து பொங்கயென்கைமீதே
மீதில்வந்துயிருக்கவுமே யெழுந்துபிடித்ததனை விற்க
சோதிமணிச்கடையில்சென்று சொல்லிவிற்கும்போது

சொல்லவொண்ணாத்துயரமதாய் சோரனென்றுயெந்தனையும்
வல்லமையாய்க்காவலர்கள் வளைத்தடித்துவுந்தன் [உன்
உந்தன்முன்னேவிட்டாரிப்பா லுள்ளதையான் சொன்னேன்
யெந்தனைப்பார்களளனென்று யேதோ விநியறியேன்

அப்பாஸ் சொல் வசனம்.

ஆனல்கேளும் இராஜசிரோன்மணியே நானிப்போசொல்லி வந்தவறலாற்றையல்லாது வேருென்றும் யானறிய மாட்டேன் இராஜாதிபதியே.

சிந்துராஜா விருத்தம்.

அறியேனென் விதியென்றேதும் அழகுமிக் கானசித்தர்
முறவடி வெடுத்தகோவே மோகமாய் உன்னைப்பெற்ற
அறிவுளதகைததாயை அழைத்திகவருவாயென்ன
துரைமகன அரசனசொலல தோனறலபபாஸெழுந்தார்.

அப்பாஸ் விருத்தம்.

சொல்லிய செய்திகேட்டு துரிதமா யெழுந்துக்கொண்டு
வல்லவன் றன்னைப்போற்றி வகையுடன் போவதற்கே

O-, 892, A
N53

சல்லப மில்லாத்தக்தை தாய்தனை யழைப்பதற்கு
கல்லவில் லாமலிப்போ கடுவழி புலம்ப லுற்றார்.

அப்பாஸ் தரு.

சிந்தாதமொழியுடைய சிந்துராஜன் சொற்படியே
தக்தைதாயழைத்து வரதானும் கடந்தனரே

உள்ளதெலாம்தானிழந்து வள்ளலேஇவ்வூர் தனிலேவந்தோம்
கள்ளனென்றேயெனைத தள்ளிக கட்டியழுத்தாரே

ஐம்புலனொடிக்கிக்கொண்டு யரண்பனைவாசற்கடிந்து
கம்பியே கடக்கலுற்றார் காயனபுறமாக

திடமுடனேகடந்துகோட்டை தெருவீதியுங்கடந்து
மடந்தனிலே இருக்குந்தக்தைமலரடியைப்போற்றி

சுந்தரமிலங்குஞ்செங்கோல் சிந்துராஜன்றானழைத்தார்
விக்தையுடனெழுந்து வந்திடுவீர்தக்தையரேதாயே,

அப்பாஸ் தாய்தகப்பனுக்குச்சொல் அகவல்.

பைரியைப்பிடித்து மணிக்கடைசென்று
வீரியத்துடனே விலையதுகூறினேன்
கூறிடும்பொழுது கூட்டமாய்க்காவற்
காரனும்வந்து கட்டியேயெந்தனை

எந்தனைகண்டுயேகியேகடந்து
சிந்துவின்மன்னன் திருமுன்விடவே
வந்திடுங்கள்ளர் பைரியைபிடித்தாய்
சித்தமாய்கேட்க செப்பினேனசெய்தியை

சொல்லியசெய்தியைத் துரைமன்னன்கேட்டு
ஒல்லையானுன்னை யுக்கததாய்தக்தையை
சனுதியாயிங்கே தான்வரவென்றனர்
கல்லதென்றெழுந்து கலமுடன்வந்தேன்.

அஹமதுசாகிபு—விருத்தம்.

சொல்லியசெய்திகேட்டுத் துடித்துமேமனமயங்கி
அல்லவேயென்னசெய்வே னலறியேபுலம்பிகொந்து
மெள்ளவேயிருவர்தானு மேகியேவெளியிலேகி
வள்ளல்தன்சமுகக்தேடி வருகவேபுறப்பட்டாரே.

அஹமதுசாகிபு தரு.

எங்குகிறைக்தயிறையவா ஏனென்னசெய்வேன் இப்போ
எங்கள் தலைவிதியெழுத்திற்கு ஏனென்னசெய்வேன்

TAMIL NADU ARCHIVES LIBRARY
103644

மங்களமாக அந்துமாநகரராண்டிருந்தோமேயெந்தன்
மைந்தனை கட்டியிருக்கத தவங்களசெய்தோமே

அன்னியபிள்ளையையின்னமாயேதுஞ்செய்தோமோ இப்போ
அன்புடனுன்செய்ததரும பிழையெல்லாம்பொறுத்தாள்வாய்

அனியாயப்பொருட்களை அபகரித்திருந்தேனோயானும் நான்
அண்டினபேர்களை அவமானமேதுசெய்தேனோ

இவ்விதமாய்ப்புலம்பி மயங்கியேகடந்துநான்
இங்கிதமாய்ச்சிந்துராஜன் முன்னே வந்துநின்றேன்

பொது விருத்தம்.

எழுந்தப்பாஸரசன்சென்று யீன்றிடுந்தந்தைதாயார்
வளம்பெறுபாதம்போற்றி தந்தவரனைத்துஞ்சாற்றி
களங்கரச்சிந்துராஜன் காணவேவருவேனென்னத்
தலம்பில்லாதெழுந்துசிந்து நலைவன்முன்வந்தானன்றே.

(வ-ம்) அகோதெப்படி யென்றால் சிந்து ராஜன் சொல்லிய படிக்கு அப்பாஸ ராஜன மடத்தி லிருந்த தாய் தந்தையை அழைத்து வந்து சிந்து ராஜாவின் சமூகத்தில் விட்ட மாத்திரத்தில் சிந்து ராஜாவைப் பார்த்து அஹமதுசாகிபு தான் அந்துமா நகரை யரசாண்ட விபரமும் வனுந்திரத்திற்பட்ட பாடுகளையும் சொல்லிக் காண்பிக்கும் வித மெப்படி யென்றால்.

சிந்துராஜன் சொல் வசனம்.

ஆனால் கேளும் பெரிய மனிதர்களே தங்களுடைய வரலாறுகள் அனைத்தும் ஒன்றையும் விடாமல் விபரமாகச் சொல்ல வேணும் பெரிய மனிதர்களே.

அஹமதுசா சொல் அகவல்.

சிந்துமாநகரைச் சீருடன்யாளும்
அந்தனாரரசே அன்புடன்கேளும்
அந்துமாநகரை யாண்டுமேயிருந்தோம்
எந்தன்பெயரஹமதுசா யெனமனைவிபேர்ஜுலைகா

அந்தமாய்க்கோலுவில் அரசாண்டிருந்தோம்
விந்தையாயெமக்கு விளங்கச்செங்கோலுக்குப்
புத்திரனில்லாமற் பெருங்கவலையாகி
ஆதுலர்யெததிம அரியவுலமாக்கட்கும்

வேண தர்மம் வெகுவாய்ச்செய்து
ஆண்டவனிருபையா லப்பாஸைப்பெற்றோம்

பிள்ளையினமுகைப் பெருக்கமாய்கினைத்தேன்
வல்லவன் விதியால் வந்ததேவயிற்றுநோய்

வலிதனைத்தீர்க்க வகையுள்ளபண்டிதன்
பலிதாமதுவினால் மருந்துமேகொடுத்தான்
வலிபொறுக்காமல் வாங்கியேகுடித்தேன்
குடித்திடும்போழ்து குடிகேடான

மதிகேடான மயக்கமென்றெனக்கு
அந்தச்செய்தியை அன்னகாரர்கேட்டு
மார்க்கத்திற்காகா மதுவைநீகுடித்ததால்
இந்தஅரசில்நீ யிருக்கதகாது

அன்புடன்ஊரைவிட் டகலுவீரென்றார்
அந்தச்செய்தியை அன்புடன்கேட்டு
அந்துமாநகரின் அரசுமேயிழந்தேன்
இழந்துநான்வெளியி லேகியேசென்று

அன்புடன்பாதையில் அழுதுமேசென்றேன்
கானகம் நடக்க கண்டுபோ சகுணம்
வழிதனில்கள்ளர் வகையுடன்பறித்தார்
பொருளையுமிழந்து புலம்பியேநடந்தோம்

எங்கடன்பசியால் யேகிநடக்க
ஏலாதென்று யியம்பினேன்மசனிடம்
அம்மொழிகேட்டு அப்பாஸ்தானும்
தூக்கியேசுமந்து துரிதமாய்நடந்தார்

விந்தையாய்க்கல்வி விரடிவிழுந்தசர்
அப்போதுதானும் அவர்மவுந்தானர்
வல்லவன்கிருபையால் வந்துதேவுயிரும
அதனைவிட்டெழுந்து அப்புறம்நடந்தோம்

அவ்வனம்விட்டு ஆதியைப்போற்றி
வல்லமையாக வகையுடனடக்க
வகையுடனடக்கையில் வந்துதேபாழ்மடம்
மடந்தனில்மூவரும் வகையுடனிருந்து

பசிகளையால்காக்கள் பரதவித்திருந்தோம்
எல்லையிலிருந்து யேங்கியேபுலம்பி
உங்கடன்ஊரை யுகப்புடன்கண்டோம்
பசியினல்வாடி பாலரப்பாஸும்

விந்தையாயூரில் விரகுடன்வந்தார்
விரகுடன்வந்து வேண்ட வேபிச்சை
அந்தமாய்ப்பிச்சை யகப்படவில்லை
ஊர்த்தன்னைச்சுற்றி ஒருதலைகடையில்

சித்தமாய்சித்திரை செய்துமேயிருந்தார்
சிந்துராஜன்மைபரி சிறந்தப்பாஸ்கையில்
இருக்கவேகண்டு யேங்கியேவிழித்தார்
ஆவலாய்ப்பிடித்து அன்னையிடம்வந்தார்

பசிகளைத்தணிக்கப் பாங்குடனேயூர்ந்து
கடுகவேநடந்து சடைவீதிசென்று
விலையதுகூறிட வேந்தர்காவலர்தான்
கள்ளனிவனென்று கட்டியேயிழுத்தார்

தான்மனம்வாடி தங்கள்முன்வந்தார்
உங்கடன்செய்தியை இச்சையாய்கேட்டீர்
அந்தமாய்ச்செய்தியை யன்புடன்கேட்டு
அப்பாஸ்தானும் அறிவுள்ளகாவலர்

வையம்புகழ வந்துமேயழைத்தார்
யெங்கடன்செய்தி யிதுதானென்றே
வல்லவன்கிருபையால் வந்தோம்மூவரும்
எந்தனையழைத்த தேதுசொல்வீரே

சிந்துராஜன் சொல்-விருத்தம்.

வந்திடும் அப்பாஸென்பேர் மதிமுகந்தன்னைநோக்கி
சிந்துவின்ராசன்றானும் சீருடன்சொல்லலுற்றார்
எந்தனுக்குந்தனுக்கு வேண்டியதெல்லாமிப்போ
விந்தையாய்த்தருவேன்வாங்கி விரகுனுடனேகுவாரே.

(வ-ம்) ஆனால் கேளு மிராஜகுமாரனே உனக்குத் தகுந்த முதலும் இன்னும் நீர் கேட்கப்பட்ட வஸ்துகள்யாவும் யாதொரு தடையன்னில் தருகின்றேன் வாங்கிக் கொண்டு சீன தேசத்திற்குப் போய் அவ்வூர்வர்த்தகரோடு ஒற்றுக் கலந்து வர்த்தகஞ் செய்துக் கொண்டு வந்து சேரும் அதுவரையிற் நம்முடைய தாய் தகப்பனை யென்னுடைய தாய் தந்தையைப்போல் யாதொரு விக்கின மில்லாமல் காத்து ரட்சித்து வருகிறேன் இராஜகுமாரனே.

பொது-விருத்தம்.

அரசருக்கரசாய்வந்த யருள் துரையப்பாஸென்னும்
மிச்சமாய்த்தந்தைதாயைப் பேணியேயுடனுவைத்து

விரசுடன்குதிரைவாளும் மேவியபொருளும்வாங்கி
சரசமாய்விடையும் பெற்றுத் தானுமேநடக்கலுற்ருர்.

(வ-ம்) அப்பாஸ்ராஜன் சிந்துராஜனிடத்தில் தந்தைதாயை அடவுவைத்து வேண்டிய இரசதிலுதிசளும். பொருட்களும், ஆடைமுதலிய வஸ்துக்களும், குதிரையையும் வாளும் வாங்கிக் கொண்டு சிந்து தேசத்திலிருந்து சீனதேசத்திற்கு யாத்திரையாகும் விதமாவது.

அப்பாஸ்சொல்-விருத்தம்.

தந்தைதாய்ப்பாதம்போற்றி தயவுடனேபூந்துநின்று
விந்தையாய்விடையும்வாங்கி மேவியேநடந்துபோக
சிந்தையும்கொந்து தந்தை தாயுமேசலித்துவாட
அந்தமாயப்பாதைகாடி யடைவுடனடக்கலுற்ருர்.

அப்பாஸ்சொல்-தரு

சிந்துதேசத்திலிருந்துவப்பாஸ் செல்வமாய்தந்தைதாயின்பாதத்தை
விந்தையாய்மன்னன்ருெழுதுபோற்றியே மேவியேவிடைதானும்வா
யேங்கிநடந்தார்-பாதைவழியேதானடந்தார் [ங்கியே
தொடர்ந்துநடந்துபாதைகடந்து சோலைமாமலரேகிவிசிட

அடர்ந்தகாடுமலையடிச்சாரலு மறுவிளாறுகளதுவுங்கடந்து
அன்புடன்மகிழ்ந்தே குதிரைமேலத் தென்புடநடந்தார்.
தென்புள்ளமயில்குயிலினங்களுஞ் சிறந்திடுமன்னப்பட்சிமுதலா
யன்புடனிருபக்கநிறைந்து வதிர்ந்துவோசைகள்பாகிழ்ந்துகூவிட

அத்தலம்விடுத்தே குதிரையின்மேல் தத்தியேநடந்தார்.
தத்தியேநடந்தேகுமபோதையில் தந்தைதாயாரைச்சொந்தமனத்தில்
மெத்தவேநினைத்தேகியேமன்னன் மேவிடுமவழியதிலேயோர்மடம்
மேன்மையாய்த்தெரிந்தே மடந்தனில்தானுமேயிருந்தார்.

சிந்துராஜா சொல்-விருத்தம்.

எந்தனைப்பெற்றதாயே யீன்றிடுந்தந்தையாரே
சொந்தமானுங்கள்மைந்தன் தோன்றலென்றறிருவிரே
சுந்தரத்துடனேநீங்கள் சுகமுடன் சொலுவில்வாழ்வீர்
விந்தையப்பாஸையெண்ணி மேவிநீர்சலிக்கவேண்டாம்.

(வ-ம்) ஆனல்கேளுங்கள் அஹமது சாகிபே தங்கள் மகனர் அப்பாஸ்ராஜன் சீனதேசத்திற்குப்போய் வியாபாரஞ் செய்துக் கொண்டு சொற்பகாலையில் திரும்பி இங்குவந்துசேருவார். அது வரையில் யென்னைதாங்கள் பெற்றபிள்ளையைப்போல் அனுபவித்துக்கொள்ளுங்கள் அஹமது சாகிபே.

சிந்துராஜா-விருத்தம்.

சிந்துவின்னரசன்றானுஞ் சிறந்திடுங்கொலுவைநாடி
வந்துமேயிருந்துமந்திரி மதிவல்லானறன்னைக்கூவி
இந்தநன்னகரந்தன்னி லிருக்கின்றமழுவர்தம்மை
விந்தையாய்க்கொலுவிற்சென் றுனவிருடனழைத்துவாராய்.

(வ-ம்) ஆனைல்சேனும் எனது மதியுள்ளமந்திரியே நமது பட்டணத்திலிருக்கின்ற கொலைத்தொழில் செய்யாநின்ற மழுவர்களை அதி சீக்கிரத்தில் எனது சமூகத்திற் கழைத்துவாரும் மந்திரி.

மந்திரி வசனம்.

அப்படியே யழைத்துவருகிறேன் இராஜபூபதியே

மழுவர்கள்-விருத்தம்

மன்னமன்னவர்கள்போற்று மகிபதிசிந்துராஜன்
தன்னையேநாடிக்கையில் தாங்கியவாளுமேந்தி
உன்னிடும்பரியகோர்பல் லாயுதமபலதுந்தாங்கி
சென்னியிற்பாகையிட்டு சிறக்கவேமழுவர்வந்தார்.

சிந்துராஜன் மழுவர்க்குச்சொல் விருத்தம்.

மானிலந்தன்னில்வாழும் மழுவரேசொல்கேளீர்
நானிலம்புகழப்பாஸ் நாடியகழியைத்தேடி
கானகந்தன்னிற்கண்டா ரக்டுசினமுறவதைத்து
யீனமாயுதிரத்தோடு மீட்சணமவருகுவீரே

(வ-ம்.) ஆனைல்சேனும் மழுவர்களே இப்போது என்னிடத்தில் தன்தாய் தகப்பனை அடவுவைத்து அனேகந்திரவியங்களை வாங்கிக்கொண்டு சீனதேசத்தைநாடி வர்த்தகஞ் செய்யப்போகிற அப்பாஸ்யென்னும் இளவரசாகிய வாலிபனை நீங்கள் தொடர்ந்து போய் வெட்டிக்கொன்று போடுங்கள். அப்படி நீங்கள் வெட்டுவதற்கு ஒத்துக்கொள்ளாவிட்டால் இந்தக்கடிதத்தை சீனராஜனின் கையில்கொண்டுபோய்க் கொடுத்தால் அவனை வெட்டிப்போடுவார். ஆகையால் அதிக சீக்கிரமாகப் போய்ச்சேருங்கள் மழுவர்களே.

பொது-விருத்தம்.

கடிதத்தைவாங்கிக்கொண்டு கடுகியேகடந்தவன்றான்
விடுபரியதனிலேறி விரைவுடன் பாதைசென்று
அடல்பெருமப்பாஸென்போ றமைந்திடுமடத்திற்சேகி
திடப்பரிவிட்டிறங்கி திறமுடன்போயிருந்தான்.

இதுவுமது.

சூரியன்புகுந்தபின்னர் தோற்றிடுமிருளால்மூன்று
பேருமேயுறங்கும்போது பிடித்தவாடன்னை யோங்கி
சிருடனப்பாஸ்தன்னைச் சேவகன்வெட்டும்போது
தாரிருட்புயலும்வந்து தள்ளியேபோயிற்றன்றே

வ-ம், அகோதெப்படியென்றால் அப்பாஸ்ராஜன் தாய்தகப்பனைவீடர்கவைத்து பெருந் தொகையான திரவியத்தை வாங்கி கொண்டு போகும்போது சித்துராஜாவின் உத்திரவின்படி மூவர்கள் வந்து மடத்திலிருக்கும் அப்பாஸ் ராஜனைக்கண்டு நல்லவார்த்தை களைப்பேசி தாங்களும் வழிபோக்கர்களென்று சொல்லிக்கொண்டிருந்து அப்பாஸ் நித்திரைக்காயத்தபானபின் ஓர்மூவன் அசஞ் செய்யாமலெழுந்து கிட்ட நெருங்கி தன்கைவாளையோங்கி வெட்டுஞ் சமயத்தில் கடவுளின் கிருபையால் கடுங்காற்றும்புயலும் மழையும் வந்து சேவகர்களை அடித்துத்தள்ளிக்கொண்டுபோய் விட்டபின் நடக்கும் விதங்காண்க.

அப்பாஸ்—விருத்தம்.

விடிந்தபின் அப்பாஸ்பார்க்க மேவுஞ்சேவகனும்வாளும்
கடுகடைப்பரியுங்காணுக் காயிதத்தனைக்கண்டார்
எடுத்ததைப்பார்க்கும்போது யெழிபெருஞ்சீனராசன்
பிடித்தப்பாஸரசன்றனைப் பேதமின்வெட்டுவீரே

வ-ம், அப்பாஸ்ராஜன் மடத்தில் நித்திரைசெய்து கண்விழித்துப்பார்க்கும்போது வழிப்போக்கனும்வந்திருந்த சேவகனைக் காணுமையால் அவ்விடத்தில் ஓர்கடிதமட்டும் கிடந்தது அதை யெடுத்துப்பிரித்து வாசிக்கும்போது தன்னைக்கொன்று விடும்படியாகச் சித்துராஜன் சீனராசனுக்கு எழுதியிருக்கக்கண்டு அதிக கவலையுற்றவராக அக்கடிதத்தை பல துண்டுகளாகக் கிழித்து அவ்விடத்திலிருந்த ஓர்பாழுங்கிணற்றில் போட்டுவிட்டு கடவுளை நோக்கிப் புலம்பிக்கொண்டுபோகிற விதமாவது.

அப்பாஸ்-விருத்தம்.

காகிதம்பார்த்தபோது கலங்கியேமயங்கிக்கொண்டு
வாரிறைப்புலம்பிக்கொண்டு வல்லவன்றன்னைப்போற்றி
ஈயூகீரில்லாப்பாழுங் கிணற்றினிலெறிந்துவிட்டு
பாயுநற்குதிரையேறி பார்த்திபர்நடக்கலுற்றார்

அப்பாஸ் புலம்பல் தரு கண்ணிகள்.

ஆதியேயருள்சோதியேபெருந்துணியாலமெல்லாம் படைத்தவிர்கள்
நீதியாகமிரணங்கொடுத்திடும் நித்தனைத்தொழுதேகிடந்தனர்

கடந்துமாமலர்சோலையும்வாவியும் நாகரீசனப்பாஸ்கண்டேகி
அடர்ந்தகாடுங்கனிர் வனச்சோலையுமத்தலம்விட்டுத்தத்தியேநடந்தா
எத்தியோடிச்சப்பாஸ்வோதனும் யேகமாய்ப்பாதைமேவிடும்போதி
சுகந்தமாகிய தினசுகமொனுஞ் சொல்லிடும்பதியினிலேகினர் [னில்
ஆகவேசினகைசேனது மதிசயானசிங்காசனங்கண்டு
மோகமானஸ்தனங்கள் புடைத்திடுமோய்குழல் மாடகூட முங்கண்
கண்டுமன்னுமேவெளிசென்றுகாவலாங்குயிலோனைசகன்கண்டு [டார்
மண்டுளோர்தினம் போற்றிப்புகழ்ந்திடும்மதார் முதுச்செனுமாநக
ரும்றனர்,வீதியாய்மணிமாளிகைபீடிகை நீதரப்பாஸ்தானுங்கண்டே
கினர்கிராகத்தி னேசகன் பொங்கும் கிழவிவீட்டிலினிதுடன்
வந்தனர்

பொது-விருத்தம்.

வந்துமே அப்பாஸென்னும் வளர்ப்பிறையதனைப்போலே
தந்திருவாயலம்மை தாயேநீயென்றுகூவி
அந்தமாயளபூத்தாரென்று யறிவுள்ளகிழவியாருஞ்
சிந்தைதனிலெமகிழ்ச்சிபொங்கி திருபனேவாயால்வந்தாள்

வ-ம் அதோசெப்படியென்றால் அப்பாஸராசர் படத்திலிருந் தெருந்து வழியில் அநேகம் துன்பமடைந்து தாரமுதுக்கென்கிற ஓர் சிறந்த பட்டணத்துள் வந்துசேர்ந்து அப்பட்டணத்தில் குடியிருக்கும் முதியாளாகிய ஓர் கிழவிவீட்டின் வாயலில் வந்துநின்று அவ்வீட்டின கதவைத்தட்டி கிழவியைக் கூபபிட்டதும் கிழவி வருகிறவிதங்காண்க.

கிழவிவருகிற-விருத்தம்.

வந்துமேதப்பாஸனைபோர் மகிழ்ச்சியாயிருக்கும்போது
சிந்தைதனைமகிழ்ச்சிபொங்கிச் சீருடன்பணியுமபூண்டு
அந்தமாய்த்தடியும்கையி லடவுட னூன்றிக்கொண்டு
சுந்தரத்துடனே அம்மை தோகையும்வருகிறாளே

கிழவி வருகிற தரு.

வாசமேபெருகி நேசமாய்நடந்து
தோன்றினாள் கிழவியரும்
வீசுங்கைத்தடியும விரகுடனடந்து
மேவியேவந்தாள் கிழவியரும்
கூந்தலின்நரையும் கொஞ்சியமொழியும்
கொள்கையாள் வந்தாள்கிழவியரும்
வந்தலப்பாஸைச் சாந்தமுடனே
எழில்பெறக்கண்டாள் கிழவியரும்

வ-ம், ஆனைவாரும் எனதிருவிழிபோன்ற என்மகனே யென்னை யழைத்தகாரிய மென்னதென்று விபரமாகச் சொல்ல வேண்டுமகனே,

அப்பாஸ்சொல்கிற-யீரடி-இன்னிசை

வேத்தரப்பாஸுமந்த விருத்தைமுகமபார்த்துரைப்பார்
ஏத்திழையேயினனகரம் எங்கரஞ்சொல்லுமென்றார்

கிழவிசொல்யீரடி-இன்னிசை

சார்த்தகுணமாதுசொல்வாள் தார்மு லுக்காமின்னகரம்
ஏத்தல்பகுவீரரசன் யீன்றதொருபெண் ணுளதே

கிழவி-தரு.

பெண்ணாள்தன்னுடைய அழகினைச்சொன்னாலிந்திரனும் அப்போ
தினில் மோகமாகிடுவார் அரசரும் சோபமாகிடுவார்

செய்வரம்பையரோ யிருவிழி மைவரபையரோ-அவள்முகம்
சித்திர மாமதியோ யிதழ் பவளத்தினிற்சரியோ

முத்தின்பல்லழகோகுயிலின் மொழியொத்தசொல்லழகோ அதிவிதம்
வேரடிமங்கைகொங்கை பரிமளவாடைபொங்குமெங்கு

கல்வியின்கடலோ அவள்தனை பலவிதங்களிலும்-அறிவுள்ளார்
கணிக்கவல்லவரோ யெதிர்மொழிதொனிக்க வல்லவரோ

தென்னெழுகஞ்சொன்னேன் அவள்கலை ஞானத்தானுஞ்சொன்னால்
தேசமன்னவரும் அவள்முன்னே பேசவல்லவரோ

ஐந்துநூரரசர்மைத்தர்தமை வஞ்சுதானுஞ்சொன்னாள் அவள்சொல்
மாசிலாப் பொருளுமலங்கிர்த மசலாசொல்லரிதால் [லு

முன்னுருங்கனியோ உயர்பசும் பொன்னுருக்கியதோ
மன்னன்பகுவீரன்பெற்றமங்கை யலங்கிரதமாதுரத்னமங்கை

இராஜஇராஜர்வந்து அவள்தன்மேலாசைபோகங்கொண்டு
பேசவாய் குழகிற்பவரும் அவர்முகம வெழுநிகிற்பவரும

இராஜன் தன்மகளின் அழகினை வாசமாக்கிளவி-மனமிக
கட்புடன்மொழிந்தாளப்போ மதியப்பாஸ்மெய மறகதார்.

அப்பாஸ்சொல்-கட்டளைக்கலிப்பா

சொல்லக்கேளுமெத்தாய் கிதர்மாதை கீ சொன்னமின்னகர்
தோன்றல்மகளிந்தவல்லி, சொல்லும்மசலாவை வென்றகான் மாலை
விட்டு மணம்புரிந்தேவுந்தன் யில்லிலே கொடுவந்திருந்தபின்பு
யெழுந்து யெந்தன் நகர்தனக்கேகுவேன, யென்றன்நாயகன தன்னா
ருவாலென்று மன்னர் சிங்கமப்பாஸராசரோதினார்

பகுவீரராஜனின் கட்டியன்வருகிற விருத்தம்.

கட்டியக்காரன்வந்தான் பகுவீரனவாசல்
கட்டியக்காரனுமவந்தான்

சட்டை த் தலைப்பாயிட்டு கைதனில் பிரம்பு கொண்டு
கட்டியககாரனுடவக்து களறியில் தோன்றினனே (கட்டி)

வட்டநிலமபுரக்கும் மன்னவன் வரவுசொல்ல
கட்டியக்காரனும களறியில் தோனறினனே (கட்டி)

மீசை முறுக்கிக் கொண்டு மிகுக்த வல்லயமாட்டி
பாசையுடனே மனனன் பகுவீர ராஜன்வாயல் (கட்டி)

கட்டாரி வில்லுமம்பு கைதனிலே பிடித்து
அட்டானதேயமாளுமரசர்தன் வாசங்காக்கும் (கட்டி)

கட்டியக்காரன் வாழ்த்தல்-அகவல்.

ஆதிதன்னருளால் அவனியோர் வாழ்க
மேதினி தழைக்க மிகுவாழ்வு பெருக
மாதர்கள் கற்பு மகிதலத்தோங்க
சாதிகள் வளர சாஸ்திரகடக்க
புருஷர்கள்சொல்லில் பெண்டுகள் நடக்க
வரிசைகள் பெருக மாநகர் தழைக்க
செக்நெல்லோங்கி செழிக்கமாநகரம்
அன்னப்பறவை யதுகளுங்கூவ
வாழைக் கரும்புகள் வரிசையாய் வளர
மக்களு மன்னரு மகிழ்வு பெற்றோங்க
திக்கு திசைகளும் தீன்றழைத்தோங்க
நல்லோர் பெரியோர் நலமுடன்வாழி
தேசங்கள்வாழி செல்வர்கள்வாழி
பாட்டோர்வாழி பாரெலாம்வாழி

பகுவீர ராசன் கொலு-விருத்தம்.

சங்கீத தாளம்போட சகலமன்னியர்கள்கூட
மங்கையர்பாடியாட மருவலர் நடுங்கி யேங்க
தங்களினிலமைசூழ தருமவாசகனுர் வாழ்த்த
சிங்கமாம பகுவீரண்ணல் திருமுகக் கொலுவில் வந்தார்

தருவு.

இராஜாதிராசர்கள் ராஜசிரோமணியான
பகுவீர ராஜன்வந்தார் கொலுவினில்
தேசாதிமன்னர் புடைசூழ-வெகு
தெரியவர்ரம்பை மலர்போட மின்னும்
தாசிகடனமிட காட
தயவாய்க் கொலுவினில் வீற்றிருந்தார் . . . .

விருது வெண்சாமரை சுவிலங்க மன்னர்
வெற்றிக் கொடியும் முன்பின் துலங்க வெகு
மருமலர் கைகுவித்து பு முழங்கமக
ராஜர் கொலுவினில் வீற்றிருந்தார்.

தம்பூரு வீணை ராகிசைபாட-யின்னந்
தங்க ரதங்கள் முன்பின்கூட வெகு
கம்பவெடிக ளோசைபோட கன
ராஜன் கொலுவினில் வீற்றிருந்தார்

காட்டானை திசைதிசை முழங்க-வெகு
காலாட்பதாதியுடன் கலங்க இன்னம்
வெட்டு மல்லர்கள் நடுநடுங்க வீர
ராஜன் கொலுவினில் வீற்றிருந்தார்.

மந்திரிமார்கள் புடைசூழ-மன
மங்களத்துடன் நீணோர் வாழ்த்த புலவர்
வித்தையுடனே கவிபாட வீர
ராஜன் கொலுவினில் வீற்றிருந்தார்

பகுவீர ராஜன் சொல் கொச்சகம்.

தங்கமுடி மன்னவர்கள் தானருகிற் கூடிவர
எங்கும பிரசங்கமுடன் பேந்திழை மாராடிவர
பொங்கமுடன் மந்திரிமார் புகழ்பெறவே நாடிவர
குங்குமஞ்சேர் வீரராசன் கொலுவிற் கொழுந்தனரே

கொலுதரு.

பலதிசை யரசர்க் கெல்லாம் ஒருமுதலாய்
பகிவீரராசர் வந்தார்
மருமலர் மாலை பொங்க மன்னர்கரந் தாங்கிநிற்க
நலமுடன் தாதியர்கள் கவின சங்கீர்தஞ் செய்ய (பலதிசை)

எண்டிசை யரசர்புகழ் கொண்டவர் திறைகுவிக்க
ஏந்திழை மலர்கள் தூவ சாந்தகுண மகாராஜர் (பலதிசை)

சுந்தர மிலங்குமார்பில் சக்கிர வடமிலங்க
சுத்தமுடனே கட்டியம் வெற்றிபெறவே முழங்க (பலதிசை)

மந்திரிமார்கள் நிதமும் வித்தையாய் நெருங்கிவர
மன்னர்பகுவீரராசன் உன்னிதக்கொலுவில்வந்தார் (பலதிசை)

தேசவிசாரணை-விருத்தம்.

எத்தனைப்பிரியகாரூ பெருமேரு மந்திரிகேளாய்
வித்தைசேர் மதுதேசம் விளங்கிய நகரமற்றும்.

அந்தமாய் வாலாற்றன்னை யடைவுட னெந்தனுக்கு
சொந்தமா யெடுத்து நீயே சுகமுடன் சொல்லுவாயே
பகுவீராஜன தேசவிசாரணைத் தரு,

வந்திந்த மாநகர் யெந்தெந்த நகரிலும்
வளையுடனே மழை குறைவுண்டோ மந்திரி
வந்திந்த மாநகர்க்கு பற்றுமெந்த நகர்க்கும
மாத மூன்றுமழை தரிசிக்கு தரசே
அந்த மிகுந்திடு மருவைகளானபேரும்
ஆதியே வணங்கியே வருகுதா மந்திரி
அந்தமிகுந்திடு மரிவைகளான பேரும்
ஆதியே வணங்கியே வருகிறாரசே.
வருபகுதிக்கப்பம் அருநிதி வஸ்துக்கள்
மாலரையி லடக்கமாகுதா மந்திரி
வருபகுதிக்கப்பம் அருநிதி வஸ்துகள்
மாலறையி லடக்கமாச்சு தென்னரசே.

சிந்துபல தேசமுஞ் சீர்மைநகர்முழுதும்
சிறந்திடும் விளைகள் குறைவுண்டோ மந்திரி
சிந்துபல தேசமுஞ் சீர்மை நகர்முழுதும்
சிறந்திடும் விளைவுகள் குறைவில்லை யரசே.

போது-வசனம்,

இவ்விதமாக பகுவீரராஜன் தன்னுடைய சிம்மாசனத்தில் வீற்றிருந்து தேசவிசாரணை முதலிய பொதுநீதி செலுத்திக் கொண்டிருக்கும் போது அப்பாஸ் அரசன் தானிறங்கி யிருக்கின்ற வீட்டின் கிழவியிடத்தில் இவ்வூர திசயங்களை பகுவீராசன் மகளாகிய ஞானரத்தினவல்லி யுடைய சமபிரதாயத்தையும் கேள்விப்பட்டு அவ்வல்லியின் மசாலாக்களுக்கு பொருள் சொல்லி அவளை மணம் புரிய வேண்டு மென்கிற ஆசையால் பகுவீர ராஜனுடைய ஆசாரவாயலில் கட்டியிருக்கும் ஆராட்சி மணியடிக்க கிளவி மனையிலிருந்து வெளியிட்ட விதங்காண்க.

அப்பாஸ்-தரு

கிழவி மனையிலிருந் தப்பாஸ் தன்னமுது பெறவே பரியிலேறிய
கிட்டி நடத்தினர் பரியையும் வெட்டி நடக்கவே
கோலவெண்டயங்கலகலென்னவே கா லுகாலினால் நடனஞ்செய்யவே
குறுமணிபுயத்தார் அப்பாஸ்ராமே பரிநட த்தினரே
தார்முழுக்கெனும் வீதியும் பகுவீரன வாழ்கிற வாசல் நாடியே
தாருகனப்பாஸ் வீரகடன் பரிநடத்தினரே

பஞ்சகல்யாணிப்பரியிலப்பாஸ் கொஞ்சிகொஞ்சியரஞ்சிதம்போல்
பார்க்கோன் தார்மூ ஞக்கின் வீதியினில் நேருடகடந்தார்.

வன்னமேடையுமாட கூட மும் பொன்னின் மேகிலேபொருந்தப்வீட்டி
மன்னர்சேனபபாலைசண்ணவேன் அனைய போலயிலார் [னில்

சந்திரமா முகத்துலங்க பொன்னினுப்படிகதடி பாரமபலே போடுவார்
தந்திரமாயரைசனப்பாஸ் கத்து கூப விடுததார்

கண்டுமேமருவீதிசென்றிட வண்டுறைமலர்ச்கூக்தல்மாதர்கள்
காதலாகவேபொன்னூஞ்சலாட போதுபோதுகண்டார்

நடக்துவப்புறம்பரிநடத்திட வடர்க்தவேல்விழிமாச்தர்கூடி
களினக்கும்மியடிப்பதுவுங்காணத்தெளிவுடன்நடந்தார்

அன்னதானங்கள்செய்யும்வீதியும் சொர்ணதானங்கட்சொரியும்வீதி
அரசர்வீதியுங்கண்டப்பாஸ்சரசமாய்நடந்தார் [யும்

வாரணக்கதிர்வேசவாசிகள் தான்கொடுவந்து பார்த்தொருமித்துதே
மன்னமன்னர்கள்புகழப்பாஸுமே முனநடத்தினரே. [மே

முன்நடத்திடவுன்னியுன்னியே மன்னனுர்வரும்ரதத்தைப்பாய்ந்து
உறத்துடனடக்கும்வரும்பரிசிரத்தையுந்தவிர்க்கும் [கிட

அப்புறமொருமருங்கிற்சென்றிடசெப்பெனு மிருகொங்கைகுலுங்
செங்கையாலமபாணையாடவேதான் கண்டு மப்பாஸெம்மனுமனடக்

வாரணப்பந்திவீதியுங்கண்டுகோரணப்பதிதொகுதியுங்கண்டு [தார்
வாலசூரியனபோலப்பாஸுமே மாலுடனடநதார்

முத்தின்கடைகளொருபுறம் பவளத்தின்கடைகளொருபுறங்கண்டு
மோகனரப்பாஸ்ராஜனமனமகிழ்வாகுடனடக்தார்

இப்படிபலதெருக்கள்கடந்து அப்புறம்பகுவீரனிருக்கும்
கோட்டைவாசல்தனைநெருக்கி நாட்டமாயகடக்தார்

சேரிக்கிடப்பரியுறுக்கிகடத்தி யருக்கனைத்தவப்பாஸ்ராஜரும்
சேர்கொள்வாசலினில் கிங்கிலியர் வீரரங்குகண்டார்

கண்டப்பாஸ்தன்பரிநடத்திட நின்றகாவலனும்மயங்கிய
அனிகொள்வாசலிற் றெங்குமாராட்சி மணியடித்தனரே
அப்பாஸ்தான் மணியடித்தனரே.

பொது விருத்தம்.

அடித்திடுமணியிலேசை யரசன்தன்மகளின்வாசல்
திரத்துடன்காவலாளர் தினக்கோருமிருக்குமபொல்லா
விடத்தினை சரித்தகெஞ்சமு வீரகிங்கிலியர்காதில்
இடியிடித்தது போல்கேட்டு பேதெனவெளியில்வந்தார்.

(வ-ம்.) ஆனாலெப்படி யென்றால் அப்பாஸ்ராசன் கிழவிவீட்டி லிருந்து பனுவீரராஜன் மகள் ஞானவல்லியிருக்கிற அரண்மனை வாயில்கட்டி இருக்கும் ஆராட்சிமணியடித்தமாத்திரத்தில் அந்த மணியினோசை வாயல்காவலாகிய கிங்கிலியர் காதில்கேட்டதும் அதிககோபமாக சபையைநோக்கி வருகிறவிதங்காண்க

கிங்கிலியன் வருகிற-தரு.

கையினில்வல்லயந்தாங்கியோங்கியே-வெகு-ஆரபாரமாய்
கனத்தவாளும் தோளிலுறங்கியே தந்தானதான
மெய்யினிற்சட்டைகளிறுக்கி பூட்டியே-கை-கடையந்தரித்து
மேவிடுங்கிங்கிலியனும்தோன்றினான் தந்தானதான
தோலிடும்பல்லைக்கடித்து அதட்டியே-வெகு ஆரபாரமாய்
துட்டமாய்க்கிங்கிலியனும் தோன்றினான் தந்தானதான
காலில்சல்லடாபூட்டி மாட்டியே கண்கள் முழியும்
கறுத்தமீசை முறுக்கித் திரித்தியே. தந்தானதான
அந்தமுடனேகூடிகோடியே இராஜாவின்வாசல்
அன்புடன்காவல்காரன் தோன்றினான். தந்தானதான
சிந்தைகலங்கித்தியங்கியமயங்கியே-வெகுதிரேகந்தாங்கவே
திரமுடன்கிங்கிலியன் தோன்றினான். தந்தானதான

கிங்கிலியன்சொல் விருத்தம்

வந்தவன் அப்பாசேந்திரன் மதிமுகநோக்கிநீரும்
எந்தவூரிவ்விடம்வந்தீர் யேதெனவரசன்பாவை
தந்திருமசலாச்சொல்லித் தாலியுங்கட்டவிங்கு
வந்தேனெனென்றுரைப்பால் மறுத்துங்கிங்கிலியன்சொன்னார்.

(வ-ம்.) ஆனாலகேளு ஸ்ரீராஜகுமாரனே நீரெந்தவூர்? உமது பெயரென்ன? இவ்விடம் வந்தகாரியமென்ன? கொஞ்சமேனுமஞ்சாமல் என்காவல்தப்பி ஆராட்சிமணியை அடித்த காரணமென்ன அனைத்தையும் விபரமாகத்தெரியச்சொல்லவேணு மிராஜ குமாரனே.

அப்பாஸ்சொல் வசனம்.

ஆனால் கேளும் கிங்கிலியர்களே நானிந்த ஆராட்சிமணியை அடித்தது வேறொன்று மல்ல தங்கள் மகாராஜாவினுடைய செல் வப்புதல்வியாகிய ஞானலங்கிர்தவல்லி ஏதோ மார்க்கசங்கதிகளைப் பற்றிமசலாப் போடுகிறதாக கேள்விப் பட்டு அம்மசலாக்களுக்குப் பொருள்சொல்லி அவள் கோரிக்கைப்படி தாலிகட்ட வந்தேன் கிங்கிலியர்களே.

கிங்கிலியர்க்கும் அப்பாஸுக்கும் தர்க்கத்தரு.

சொல்லவொண்ணுவாசகம் சொல்வதென்னபோடா ஜநாரரசர்
தண்டுபெடுஞ்சிபரன் கண்டறிந்ததுமில்லையோ அடடா பாடா

நல்லதுன்னகர்தனில் செல்லவுமிது அருணஞ்செல்லாதிருந்தால்
நங்கையறிந்தாலுன்னை செங்கைவாள்கொடுபிளப்பாள் தந்தானதான

அப்பாஸ்.

செங்கைவாள்கொடுமந்த நங்கைபிளப்பறிவோம்
சீக்கிரம்நீபோய் தெரிவையையவரச் சொல்இருமுன் மசலாவுரைக்க
மங்கைதன்வாய்க்கடங்க முசமறிந்திடாமல்-அப்பாஸரசன்
வெண்கண் சிவந்துரைக்கஇங்கிலியனினைந்தே. (தந்தான)

இங்கிலியன்.

ஆரடாவாய்மதியாமலேபேசுகிருய் பருவீராசன்
அரிவையறிந்தாலுன்னை வாள்தனக்கிரையிடுவாள்
காரியமறியாமல்வீரியம்பேசாதே அடடாபோடா
காரிகைகண்டாலுன்னைக் கூறுவாட்கிரையிடுவாள். (தந்தான)

அப்பாஸ்.

சொல்லடாயவளைநான் வெல்வதுமரிதல்லடா-அவளுடைய
சூதுவாதறிகுவே னிங்கேவரச்சொல்லடா
கல்விலேகாருரிப்பேன் வெல்வதனதரசன் மகள்தனையே
கட்டுவேன்தாலிநான் தொட்டுவிட்டிட மாட்டேன். (தந்தான)

இங்கிலியன்

விட்டிடேன்தாலி நான்கட்டுவேனென்றுரைத்தாய்-வீணுதிவீணு
வெட்டுவாளவள்முன்னே கிட்டினபேரையெல்லாம்
வெட்டுவாளுருக்கிக் கைத்தொட்டுவருமரசன்-நல்லதுநீயும்
வேண்டாமறைகளின் சொல்லுமேச்செய்திசொல்ல. (தந்தான)

அப்பாஸ்

வல்லிசொல்மசலாவைவெல்லுவேன் மணம்புரிவேன் பாரடாபோடா
வஞ்சணராகிய இங்கிலியப்பயலே
பயலடாகில்லடாவுன் திறமறிவோமெனவே-இங்கிலியரோடு
பார்த்திபன்மகடன்னை போற்றிடுந்தாதிகளில். (தந்தான)

இங்கிலியன்.

புயதைரியனவன் அரிவேனும் காவலன்-புகழ்ந்துசொல்வான்
பூரணமதியவன் ஓர் குதிரையிலொருவன் ஒருவனுமிககிகர்
சொல்லவுமரிதானேன் மகள்மசலாவுள்ளது
சொல்லுவன்சொல்லெனச் சொல்லினனே. (தந்தான)

தாதிவருகிற விருத்தம்.

கொண்டைதனில் செண்டுமலர்ப்பூவுஞ்சூடி கோத்தமுத்து கட்டி ரத்தன கொப்புமாட்டி, வெற்றியுள்ளவீராசன் பெற்றமங்கை

மேவுமலங்கிரதவல்லிகங்கை, சண்டுமொழி தாதியர்கள் கலந்து கூடிக் காதலுடனே சபைநாடியோடி, நன்றியுள்ளசங்கீதம் பாடிக் கொண்டுகலமுடனே கொலுவதனை நாடினனே.

தாதி வருகிற தரு.

தாதிவாராள் கொலுவைநாடித் தாதிவாராள்
தாதிவருகிறாள் தாவடம்புனை
சரசமாகவே விரகுடன்புகழ்
கோதியேபூவின் மலர்கள்சூடியே
கெஞ்சியேசடை வஞ்சிமாரெனும். (தாதி)

தங்ககலசம்போற்கொங்கைகுலுங்கவே
தரளமாமணி சரமிலங்கவே
பொங்கமாய்க் கைவளையிலங்கவே
பொன்னின்மாமணி மின்னல்தன்னவே. (தாதி)

தோகைமாமயிற் சாயலாகவே
தோற்றிடுங்குமிழ் மலர்கள்போலவே
ஆகுமாராட சிமணிபடித்தவன்
ஆடாவென்று சோரமாகவே. (தாதி)

வாமஞான வல்லியின வாசலை
கேசவாவிட்டு ரோசமாகவே
மாசிலாமணி மண்டபஞ்சென்று
இராஜரப்பாஸை ஆசையாய்க்கண்டு. (தாதி)

தாதி சொல்-விருத்தம்

பார்க்கவேபோசவென்று பகர்ந்திட்ட கிங்கிலியன்
மூர்க்கமாய்ச்சொன்னவார்த்தை மூனறயெல்லாமறிந்துதாதி
சீக்கிரம்வெளியில்வந்து சிதசந்திரவுதையம்போலே
ஆக்கிரமத்துடனேநிற்கும் அரசனப்பாஸைக்கண்டாள்.

தாதி-தரு

கண்டேன்மன்னவனழகை காதல்பெருகக்
கண்டேன்மன்னவனழகை. (கண்டேன்)

பேசுமொழியினழகுமுகமழகும் வாசமிருந்தவொளிவும்
வீசுங்கையினழகும் கூசுங்கதிவாவொளிரும்
ஆசைபெருகிவந்த கேசமன்னைவெப்பாம்
காசினியிற்கிடையாது ராஜமன்னவனைப்போலே. (கண்டேன்)

எந்தமன்னவன்மகனோ இந்தவூரினில்வந்தவகையிதென்னமோ
சந்திரமுகமிவனோ அல்லா திருந்தால்செந்தாமரையின்முகமோ

இந்தக்ஷணத்தில்மன்னு இந்தயெல்லைகவிட்டு
உந்தனுயிரைக்கொண்டுஓடிநீஞ்சொன்னேனசொன்னேன்.(க)

எந்தபகுஜூராசன்மகளநிந்தால் கல்வாய்க்தவாளாலேபிளப்பாள்
மாய்ந்துவிடுவீரல்லாமல் ஒரு போதும்சார்ந்துவெல்லவுயாட்டீர்
ஆய்ந்துபாராமல்வந்த ஐநூறுபேரிறந்தார்
சோர்ந்துவிடாமல்நீருஞ் சொல்லாமலேஓடிப்போம். (கண்டேன்)

தாதிசொல்-ஈரடிவிருத்தம்.

கண்டவன்மயங்கித்தாதி கருத்தினில்மோசமீறி
நின்றவள்தெளிந்துதேறி நீரேவருரையுமெனருள்.

அப்பாஸ்சொல் ஈரடிவிருத்தம்.

விண்டனர் அப்பாஸென்போர் விளம்புமாருனதுராஜன்
மண்டல்சேர்மகளுக்கேற்ற மணவாளன்கானேயென்றார்

பொது-விருத்தம்.

மணவியேவுனதுராஜன் மகள் தன்னைத்தாலிகட்டி
எனதுகாடேகவந்தே னெனவப்பாஸரசன்சொல்ல
உனையறிவென்னிலென்ன உயர்பகுவீராஜன்
முனஞ்சொல்வோமென்று தாதி மோகமாய்வெளியில்வந்தாள்.

தாதிசொல்-விருத்தம்.

கொலுவினிற்பகுவீரண்ணல் கோலமந்திரிமார்சூழ
வெனிவுடனிருக்கும்போது மங்கைதன்மசலாச்சொல்ல
கலினவாம்பரியிலேறி காவலனதந்தாரின்று
நலமுடனின்றுதாதி நற்பதிமுனசொல்வாளே.

(வ-ம்.) ஆனுல்கேளுங்கள் இராஜாதிபதியே நம்முடையஆசாரவாசலில் கட்டியிருக்கும் ஆராடசிமணியை யாரோஓர் அழகிய இராஜகுமாரனவந்து அடித்தான் அதையறிந்து நாங்கள்போய் கேட்டதற்கு நமது ஞானரத்னவல்லி சொல்லுகிற மசலாக்கட்குப் பொருட் சொல்லிவெனறு அவளைத் தாலிகட்டிக் கொள்வதற்கு வந்தேனென்று சொல்லுகிறான் எங்கள் இராஜாதிபதியே.

இராஜாசொல் விருத்தம்.

தாதிசொல்வசனங்கேட்டுத் தார்முலுக்கரசன்சொல்வான்
ஏதேதுவதிசயமோ ஏகதிழைமசலாச்சொல்ல
வாதிகாலொருவரநண்டோ வந்தவரேவரோயிங்கிப்
போதழைபென்றார்வோடிப் போகினார்கிங்கியர்தானே.

இராஜா—வசனம்.

ஆனல்கேளும் கிங்கிலியர்களே ஆரோ ஓர் இராஜகுமாரன் என்மகள் சொல்லுகிறமசாலவுக்குப்பொருள் சொல்வதற்காகவந்திருக்கிறனம் அவனை என்கொலுமுன்பாக சீக்கிரமழைத்துவாருங்கள் வீரகிங்கிலியர்களே.

(வ-ம்) அப்படியே அழைத்துவருகிறேன் தேசாதிபதியே.

கிங்கிலியன்சொல்-கட்டளைக்கலிப்பா

பருவீரரசன் சொற்படியேகேட்டு பண்புள்ள கிங்கிலியர் கூடியே, வகையுடனேகடத்துமேயோடியே வண்மையாகக்கையில் வேலும்பிடித்றுமே, மிகுக்கவீரத்திடத்தின் விளங்கியமேன்மையாயவர் மெய்ப்புகழுடன், ஈகத்தைபாராட்டுமப்பாஸ் ராஜன் முன்துஷ்ட கிங்கிலியருசென்றனர்.

(வ.ம்) ஆனல்கேளும் இராஜகுமாரனே நீர்மசலாவுக்குப் பொருள்சொல்லவந்தவரென்று மெங்கள் ராஜா அவர்கள் கேள்விப்பட்டு அதிசீக்கிரத்தில் உம்மையழைத்துவரச்சொன்னர்களாகையால் அதிசீக்கிரத்தில் வாரும்இராஜகுமாரனே.

அப்பாஸ்சொல் கட்டளைக்கலிப்பா.

கடத்துமேவருவேன்பருவீரர்முன்னே காகரிகமதாகவேகாலுமே
நடத்துவாரமுன் னுங்கள்பின்னலேயே துஷ்ட கிங்கிலியருகடந்திமர்
திடமுடனொருவச்சமுமின்றியேதொல்லையைமனமில்விடக்கியே[னர்
அடவுடன்கொலுமீதிலிருக்கிடுமரசர் முன்பிலப்பாஸ மேசென்ற

இராஜாசொல்விருத்தம்.

அரசர்கோன்பருவீரண்ணலப்பாஸ் முகம்பார்த்துரைப்பார்
கருதலரறியவந்தகாரியம் பகருமென்ருர்
தருகரணப்பாஸென்போர் சாற்றுவாரரசேவுந்தன்
திருமகள்மசலாச்சொல்லத் தேடியேவந்தேனென்ருர்

இராஜா விருத்தம்.

பெண்டிருமசலாச்சொல்லி மணஞ்செய்வேனெனவப்பாஸ்
வன்றிறலமன்னன்சொன்ன வேலையினேழுதேயத்
தென்றிசையரசர்நீரோ யெழுத்ததுமுடிவோவுந்தன்
மன்றலிவ்வசனஞ்சொன்னீர் மறுத்துவுந்தனூர்செல்லென்ருர்.

(வ-ம்) ஆனல்கேளுமிராஜகுமாரனே நீ ரெந்ததேசத்தாசருடையமகனே தெரியவில்லை யென்மகளுடைய மசலாவிற்கு பொருட்சொல்லவந்ததாக சொல்லுகிறீர். உம்மை பார்த்தால் மகா அழகுசவுந்

திரியமாய் தெரிகிறது. என்மகளோ மகாகோடியவள். அவளுடைய மசலாவிற்குப் பொருட்சொல்வாயென்று நானுன்னை காபவில்லை ஆகையாலுன னுயிரைத் தப்பிக்கொண்டு நின்சுயதேசம்போய் சேரு மிராஜகுமாரனே.

அப்பாஸ் விருத்தம்.

ஊர்தனக்கேகுமென்று உரைசெய் யுமன்னவுந்தன்
தார்குழல்மகளைவென்று தாலியுங்கட்டியெந்தன்
சீர்நகர்செல்வேன்கண்டாய் திறமதையறியுமென்று
பார்புகழ்வீரரசன் பகருவான்தாதியோடும்.

இராஜாசொல் கொச்சகம்

தாதியேநீகேளெனது தங்கமகளங்கவள்முன்
சாதகமாய்ச்சொல்லியுன்றன் தன்மசலாவெல்லவென்றே
வாதுசெல்லிவந்தமகராஜனிடசெய்தியெல்லாம்
ஓதுமென்றார் தாதியந்த வொன்றேடிமுன்னின்றுசொல்வாள்.

தாதிவல்லிக்குச்சொல் தரு

செண்டுமுலைமண்டல்கமழ் மண்டல்கமழ்-என்தோழி
தெண்டிரங்கல்கண்டுமொழிதிருவனையீர்-ஒரு
மொழியதுகேள் மொழியதுகேள்

விண்டலத்தின் அவனிந்திரனே யிந்திரனே-என்தோழி
விந்தைசெறிஎந்தமுள்ள வெம்பரிமேல்-வெகு
தென்புடனே தென்புடனே.

வந்தனர்காண் அவனிந்தநகர் இந்தநகர் என்தோழி
வடிவுடையகொடியிடையே பங்கைவுந்தன் திரு
வாசல்முன்னே வாசல்முன்னே.

தந்தவனேயுன்றகப்பன் என்தோழி
அன்புவைத்து யின்பமுடன் அழைத்துவந்து-ஒரு
பழக்கமென்றான் பழக்கமென்றான்.

எங்கிருந்து எங்குவந்தீர் எங்கேவந்தீர் என்தோழி
இங்கிதமாயுன் கருமம் ஓதுமென்றார் அப்பொழுது
சொல்வார் போதுசொல்வார்.

மங்கையர்களிங்கிதமே இங்கிதமே-என்தோழி
மங்களஞ்சேர்பெண்கரும்பே மாமசலாசொல்ல
வந்தேனென்றான் வந்தேனென்றான்

அந்தமன்னன்வெகுவிந்தைமன்னன் விந்தைமன்னன் என்தோழி
வாம்பரிமேல்கம்பமுகம் வளர்பிறைபோல் அவர்
அழகுள்ளதே அழகுள்ளதே

உன்தகப்பன் இந்தமொழி இந்தமொழி என்தோழி
உண்மையுடன் யெனையுமே உனக்குரையுமென்று
அனுப்பினனே அனுப்பினனே.
இத்தலத்தில்வெகு வெற்றிமன்னன் என்தோழி
எத்தலத்தின்புத்திரனோ அவன்-ஒருயேழைமகன்
போலேவந்தான் போலேவந்தான்.

தாதிசொல்-விருத்தம்

மன்மதன்என்பாரந்த மன்னவனல்லால்வேறு
இன்னிலத்தரசுமில்லை எந்தல்போல்வடிவுமில்லை
உன்றகப்பனுமேகண்டு உகந்துமுனசொல்லவென்றார்
சந்ததியென்றுசொல்லிச் சாற்றினைப்போதாதி.

ஞானலங்கிர்தவல்லி கொச்சகம்.

கன்னியரிருமருங்கும் காதலுடனேசிவர
வின்னமில்லாவிராசன் மேன்மையுடனேயீன்ற
கன்னயவதாகவந்த ஞானதலங்கிர் தவல்லி
உன்னதமாகவேதா னுயர்ந்தசொலுவந்தனளே.

சபைக்கு வல்லி-தரு-கண்ணி.

மானார்கள்புடைசூழ ஞானவலங்கிர்தமாது
மங்கைக்கரசாகிய கங்கைவந்தாளே
சந்திரவுதையம்போல சுந்தரசுந்தரிய
சோதிப்பிரகாசமானக் கோதைவந்தாள்.
முல்லையரும்புபோலே பல்வரியொளிரமின்ன
முத்தின்றிருவாயொத்த சித்திராள்வந்தாள்.
கொங்கைதனக்கிசைந்த தங்ககச்சையிருக்கி
கோடிசூரியப்பிரகாசக் கோதைவந்தாள்.
கீதமாகியசெம்பொன் பாதச்சிலம்புகொஞ்ச
சீலவரிதகுணசாலிவந்தாள்.
தந்தையெனவேபேசி நத்துபுல்லாக்கசைய
நாகரிகமாயொத்த கோதைவந்தாள்.
வேடிக்கையாகமாதர் கூடிசாமரைவீச
வேந்தர்வேந்தர்கள் மெய்ச்சும் மாதுவந்தாள்.

கொச்சகம்.

வந்தணமாய்த்தாதியர் வாசமருந்தானனைந்து
செங்கைவளை தான்கலிக்க தேன்வடிபுமாலைகொஞ்ச

தங்கநிறம்போல்மேனி தானொளிக்கமேன்மையுடன்
இங்கிர்தமாகவேதான் மியல்பதனுள்வந்தனளே

கொலு-விருத்தம்.

சந்திரன்போல்முகமிலங்க வொளிகள்மின்ன
தரளரத்னபதக்க மார்பதனிற்றுன்ன
கந்தமலர்ச்சமகமென குழலிற்பின்ன
கரத்திற்கங்கணவளையல் கலகலென்ன
விந்தையுடன்பொற்சரிகைத் துயிலுமின்ன
விளங்குமிருபுறந்தனிலே தாதிசூழ
சுந்தரமாய்வீரரசன் றவத்தார்பெற்ற
சுகிர்தவல்லிசபையருகே வருகின்றாளே.

வல்லி-கொலுத்-தரு.

நீலமணிக்கருங்குழலை நிரையொழுங்காய்முடித்து நல்ல
சேருமங்கையதிலசையிக்க நிறையாமலர்தொடுத்து.
வாலவயதுள்ளகன்னி வலமிடமாய்வரவே
வஞ்சிஞானவல்லிசபை கொஞ்சியேதோன்றினளே.

பல்லினிலபொற்பற்காவியும் பளபளெனவிலங்க-நல்ல
பாவைவிழிக்கஞ்சனமும் பலவிதமாய்த்துலங்க.
நல்லவச்சிரமணித்து நகைபலதும்பூண்டு-நல்ல
ஞானவலங்கிர்தவல்லி நலமுடனதோன்றினளே.

அன்னநடைபோல்நடந்து கன்னியரும்வரவே
அழகுடனேதோழியரு மருகருகாயவரவே.
வின்னமில்லாவீரரசன் மேன்மையுடனீன்ற-நல்ல
மேவுமலங்கிர்தவல்லி மெல்லியுந்தோன்றினளே.

தின்னமிடைதுவளவே பூச்செண்டுமுலைதாங்கி-நல்ல
செஞ்சிலம்புபாதசரம கொஞ்சியோசைபொங்கி.
நன்னயமாய்க்கதம்பமலர் நாற்றிசையுங்கமழ-நல்ல
நளினமயிற்சாயலுள்ள குயின்மொழிதோன்றினளே.

தாதிவசனம்.

ஆனால் கேளும் எங்கள் இராசாவின் புத்திரசிகாமணியே மகாஅழகினையுடைய ஓர் இராசகுமாரன் தாங்கள் சொல்லுகின்ற மசாலாவுக்கு பொருள் சொல்லவந்திருக்கிறார். ஆனபடியால் தங்கள் தகப்பனர் தங்களை அதிசீக்கிரமாக வழைத்துவரச்சொன்னார்கள். ஆகையால் வாருமம்மா போகலாம்.

விருத்தம்.

தாதிசொல்வசனம்கேட்டு தாங்கொணுகோபமாகி
ஆதவன்ருனும்பாரி லாகுமோவென்றுசொல்லின்
வாதிகாவொருவருண்டோ வந்தமன்மசலாச்சொல்ல
ஏதவன்வந்தானென் நீ ரிப்போதினில்சொன்னீர்மாதே.

வல்லிசொல் மசலா-தரு.

பேதமைபுத்தியால்வந்து காதலுடன்யென்னைவெல்லக்
கூடுமோ அவனலாகுமோ
பேர்புகழும்வீரரசன் சீர்மகள் ஞானவல்லியென்றறியானே
அறிந்தால்வருவானே.

அஞ்ச நூராரசர்வந்து துஞ்சினதுங்கேட்டிருந்தா
னில்லையோ-சொல்வாரில்லையோ
சூரியனைக்கண்டபனி சோருடனொளித்துவிடு
மல்லவோ-அதுபோலல்லவோ,

ஆரபாரஞ்சிங்கிலியின் வீருடன்கைவாளைக்கண்டு
வந்தானே மொழிவிண்டானே
சூதுவாதுகாலேயென்னைத் தோதகமாயாரும்வெல்லக்
கூடுமோ-அவனலாகுமோ.

ஆரோவொருராசன் பதினெட்டுவயதுள்ளவனுய்த்
தோணுதே-மனத்தால்காணுதே
லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மது ற்றசூலுல்லாவென்று
சொல்லவும்-மனஞ்சுன்னவும்.

வல்லிசொல் வசனம்.

ஆனல் வாரும் தாதிமார்களே எனது தகப்பனர் யென்னை மசலாச்சொல்கிற மண்டபத்திற்கு அழைத்தபடியால் எனக்குரிய சில ஆடையாபரணதிகளை யெடுத்தணிந்துகொண்டு போகலாம் வாரும் தாதிமார்களே.

வல்லியலங்கிர்த-தரு.

அணிதுலங்குங்கருங்குழல் அகிற்புகையுஞ்சூட்டினள்
சூட்டியேமலர்பூட்டினள் தோகைதிலதம்பூட்டினள்.

பணிதுலங்கும்புருவமேல் வரணர்பலவெழுதினள்
எழுதிகாளிருவிழியின்மை யிலங்கவேமிகத்துலங்கவே.

முத்துநத்துமூக்கினில் மோகனப்புலாக்குடன்
புலாக்கிலங்கிடத்தூக்கின வன்வடிவைப்பகரவே.

பத்தியொளிப் பளிரென்ன பல்லிலங்கும் காவியும்
காவியு மிளங்கு மின்னாள் இருகாதிற் டணிகள் பூட்டினாள்

தங்க நவரத்தினத் தரித்த பற்பணிகளும்
பணிகளுமவள் கழுத்தினில் பளபளெனவே யிலங்கவே.

கொங்கையினில் ரவிக்கையும் குங்கிர்தம் பன்னீர் சந்தனம்
சந்தனம்புனுககளபமுந் தாதியர்கள் பூசினாள்.

கையிலிடும் வளையல்பொன் கலகலென்ன வதிரவே
அதிரவேகணையாழியு மழகுபெறவே விரலிலிட்டாள்.

வெய்யவன்றன் கதிரென்ன மின்னக் துயிலினிடையினில்
கொய்தணைந்து தாதியர் கோதைகாலிற் சிலமபிட்டாள்.

வல்லவன்போல பலபணி யேந்திழையாள் தொடுத்துமே
தொடுத்திடவுந் தோழிமார் சுமக்கப் பல்லக்கிலேறினாள்.

பல்லக்கினிலேறியே பாங்கியர் கொண்டேகியே
ஏகியே மசலாச்சொல்லு மிலங்குமண்டபக் தன்னில்வந்தாள்.

வல்லி இராஜாவுக்குச் சொல்லும் இன்னிசை.

வாருமம்மா யென்று சொல்லி வாகுடனேயழைத்த
சீருடனே தந்தையரே சிறப்புடைய செய்திதன்னை
தார்குழலாடானறியத் தாமத மில்லாமலிப்போ
கேருடனே சொல்லிடுவீர் கீதமுள்ள தந்தையரே.

இராஜா சொல்-விருத்தம்.

சொல்லுவான் பகுவீரன்னல் தோகையே உன்னைவெல்ல
வல்லதோ ரரசன்றானும் வந்தனர் மசாலாகியுஞ்
சொல்லவன் சொல்லவென்றால் தோகையும நலமதென்று
பல்லருந் தாதிசூழ பஞ்சணை மீதிருந்தாள்.

இராஜா கிங்கிலியற்குச் சொல்-விருத்தம்.

அரசினிற் காவலோம்பும் வன்புள்ள காவலோரே
சரசமா யோடிநீங்கள் சங்கையாய்க் காயிதத்தை
வரிசை மன்னவர் முன்சென்று வணங்கியே கொடுத்துநீரும்
விரைசுட னழைத்துவாரும் வீர கிங்கிலியமாரே.

(வ-ம்) ஆனால் கேளும் எனது கிங்கிலியர்களே இதோ யானெ ழுதிக்கொடுத்திருக்கிற கனம்பொருந்திய கடிதத்தை உங்கள் சிர சின் பேரில் எடுத்துக் கொண்டு அதிசீக்கிரமாகப் போய் தேசத்து இராஜாதிபதிகளுக் கெல்லாங் கொடுத்து அவர்களை யழைத்துவாருங் கிங்கிலியர்களே.

பொது-விருத்தம்.

மானிலத் தரசரெல்லாம் வகைபல பணியும்பூண்டு
சேனைதன் தளங்களோடுஞ் செழிப்புட னகரைவிட்டு
ஆனதோர்மதார் பூ லுக்கி னரசர்தான் கொலுவைநாடி
கானமலேதனைக்கடக்து காதலாய் வருகின்றாரே.

(வ-ம்) அகோ தெப்படி யென்றால் அப்பாஸ்ராஜன் ஞான லங்கிர்தவல்லியின் மசலாவுக்கும் பொருட் சொல்வேனென்று தான் கற்றவேதசாஸ்திர புராணகாவியங் களாகிய அனைத்தையும் விபர மாகச் சொல்லிக் காணபிவித்த மாத்திரத்தில் பகுவீரராசன் அன் பத்தாறு தேயத்து இராசாதி பதிகளுக்குத் தனித்தனி கடித மெழுதி கிங்கிலியர்வசங் கொடுத்தனுப்பியபின் அக்கடிதஞ் சேர்ந்த பலதேயத்து அரசர்களும் பகுவீர ராசனின் கொலுவை நோக்கி வருகிற விதங்காண்க.

தேசத்தரசர்கள் வருகிற விருத்தம்.

தேசாதிராசர்தாலுஞ் சிறப்புடன் பணிகள்பூண்டு
கேசமாய் நவபத்தோடு நெறிநீதக் கொலுவைவிட்டு
மாசிலாமதார்முலுக்கின் மகிபதி கொலுவைநாடி
வாசமாய்த் தேசராசர் வன்மையாய் வருகின்றாரே.

தேசத்தரசர்கள் சொல்-விருத்தம்.

உலகெலாம் புகழுவேதா னுயர்மதார் முலுக்கையாளும்
நலபதி கீர்த்திபெற்ற நாயக மானகோவே
நிலக்தனி லெங்களுக்கு நிருபமிட் டழைத்தசேதி
பிலமுற்ற சபையின முன்னே பிரித்துரை செய்குவீரே

(வ-ம்) ஆனால்கேளும் பகுவீர இராசாதிபதியே கிங்கிலியர் மூலியமாய் எங்களை வருக்கும நிருபமிட் டழைத்த காரியம் இன்னதென்று தெரிவிக்கவேணு மிராசபூபதியே.

பகுவீர ராசன் சொல்-வசனம்

ஆனால் கேளும் தேசாதிபதிகளே நான் தங்களனைவரையும் வரவழைத்த காரியமானது என்மகள் ஞான லங்கிர்தவல்லி சொல்லு கிற மசலாக்களுக்குப் பொருட் சொல்லி வெல்வேனென்று ஓர் இராஜகுமாரன் வந்திருக்கிற படியால் நீங்களனைவருஞ் சாட்சியா யிருந்து அறிந்துக் கொள்ளுங்கள் தேசாதிபதிகளே.

பகுவீரராசன் மகளுக்குச் சொல்-வசனம்

ஆனால் கேளும் என கண்மணியான மகளே இவ்விடம் வந் திருக்கிற தேசாதிபதிகள் சாட்சியாயிருக்க இந்த ராசகுமாரனுடன் மசலாப் போட்டு வென்றுக் கொள்ளும் கண்மணியான மகளே.

வல்லி-விருத்தம்.

பஞ்சணைமீதில்ராஜன் பாவையும் படுத்தாக்குள்ளே
கஞ்சையினினவிருக்குங் காலையில் பகுவீரணனல்
தனசபையரசரேநீர் சாட்சியாயிருமென்றேநி
வஞ்சியுமப்பாஸென்று மதிமுககோக்கி சொலவாள்

(வ-ம்) ஆனல் கேளு மிராஜகுமாரனே இப்போது நான் சொல்லுகிற மார்க்கமாகிய மசலாக்களை நீர் நன்றாய்ச் செவிகொடுத்துக் கேட்டுக் கொள்ளும் இராஜகுமாரனே,

வல்லி மசலாச் சொல்-தரு.

சொல்லுகிறேன் கேள்மிக வல்லவன் போல்வெகு
தூரமிருந்தென்னைத் தேடியே வந்திடும்
எல்லவனபோ லழகுள்ள லவங்கிர்த
யேந்தலரே மனத்தேர்ந்து நன்றாய்ச்சொல்லும்
எப்போ வந்தீர்காண் சொல்லாவிட்டாலிப்ப கொல்வேகாண்.

(வ-ம்) ஆனல் கேளு மிராஜகுமாரனே தாங்கள் வெகு தூரமிருந்தென்னைத தேடிவந்தபடியால் தாங்கள் எப்போ வந்தீர்கள் சொல்லாதுபோனல் என் கிங்கிலியரை விட்டும்மை இரண்டாக வெட்டிப் போடுவேன் இராஜகுமாரனே.

அப்பாஸ் ஜவாபு மசலா.

கொன்றிடுவேனென்ற குங்குமச்சந்தனக்
கொங்கையிளம பசுந்தங்கமே காணுன்னை
வென்றிடுவே தாலிகட்டிடுவேன் மாலை
யிட்டிடுவேன் சும்மா விட்டிடமாட்டேன்
தாயீன்றுமே வந்தேன் மசலாவை மீண்டும் சொல்லென்றுர்.

(வ-ம்) ஆனல் கேளும் பெண்கள் சிரோமணியாகிய ஞானரத்தினமே என்றுப் வயிற்றில நான் கர்ப்பமாகி ஒலபது மாதமுஞ் சென்று என்னைப் பெற நானிந்த பூலோகத்தில் பிறந்துவளர்ந்து வாலிபனுகி நீ சொல்லும் மசலாவிறகுப் பொருள் சொல்லி வென்றுன்னைத் தாலிகட்டிப் போகவந்தேன் பெண்ணே.

வல்லி சவால் மசலா

மீண்டுமே சொல்லென்ற வேந்தரப்பாஸ்கோன் விளம்பிட
மங்கைமனங் கலங்கிச் சொல்வாள
தாண்டும் பறியேறி மீண்டிங்கே வந்திடும்
தாஷ்டிகனே சொலலக் கேட்டிடு நீரிப்போ
தானிருப்பெங்கே சொலலாவிட்டால் நானவதைப்பேன்காண்.

வ-ம். ஆனால்கேளு மிராஜகுமாரனே மகா ஆரவாரத்துடனே குதிரையிலேறி என்னைத் தேடிவந்தபடியால் இப்போது நீரெங்கே இருக்கிறீர்? சீக்கிரஞ்சொல்லும். அப்படிச் சொல்லாதிருக்தால் யென்கைவாளையுருவி உம்மை இரண்டாக வெட்டிப்போடுவேன் இராசகுமாரனே.

அப்பாஸ்சொல் ஜவாபு மசலா

நான்வதைப்பேனென்று தானுரைக்கும்வாசக
கன்னிகையிளம்பசுந்தங்கமே நானுன்னை
யூனமில்லாமலேதாலியுங்கட்டுவே
னென்றுபட்டாலதைக் கண்டறிநானிப்போ
உடுத்துந்துயில்மேல் மசலாவை யெடுத்துரையினிமேல்.
(வ-ம்) ஆனால் கேளும் பெண்ணே நானிப்போது இருக்கிறது நானுடுத்திருக்கிற துயில்புடவையின் மேல் ஆசையால் நீ இன்னும் கேட்கவேண்டியதெல்லாம் அதிக தீவிரமாய்கேட்டுக்கொள்ளும் பெண்ணே.

வல்லி ஸவால் மசலா

இன்னமுங்கேளென்ற மன்னர்கோனப்பாஸ்
இங்கிர்தமாய்ச்சொல்ல பங்கைமயங்கியே
அன்னரசேதெளிக் துன்னையறிகுவேன்
அட்டிபண்ணாமலே கெட்டியாய்த்தேர்ந்துநீர்
ஆர்மகன்சொல்வீர் சொல்லாவிட்டால் கேருடன்கொல்வேன்
(வ-ம்) ஆகோகேளு மிராஜகுமாரனே நீயாருடையமகன் சொல்லும். அப்படிக்குச் சொல்லாதிருந்தால் இச்சபையோரறிய உடமை என்கைவாளால் வெட்டிப்போடுவேன் ராஜகுமாரனே.

அப்பாஸ் ஜவாபு மசலா.

கேருடனேயென்னைக் காரல்செய்வேனென்ற
கேரிழையேயிந்தப் பாருலகிலுன்னை
ஆரும்புகழ்பகுவீரராஜன் பெற்ற அன்னப்பெண்மயிலே
நான்தென்புடன்சொல்லுவேன்
ஆதமகன்யான் பெண்ணேகண்ணே யேதுஞ்சொல்லுங்காண்.
(வ-ம்) ஆனால் கேளும் ஞானரத்தினவல்லியே நானுகிறவன் ஆதமலைஹிஸ்ஸலாமுடைய மக்களிலுள்ளவன். ஆகையால் இன்னம் நீகேட்கவேண்டியதெல்லாம சட்டதிட்டமாய்க் கேட்டுக் கொள்ளும் பெண்மயிலே.

வல்லி ஸவால்மசலா

பெண்ணேநீ சொல்லென்ற மன்னவனே கேளும்
பேருலகில் நாராசர்வந்தனைவரு
முன்னைப்போல் ம்திகெட்டு

அன்றுபட்டாரதைகண்ட றிகீயுன்னை
ஆர்வளத்தார்காண் சொல்லாவிட்டால்கேர்பிளப்பேன்காண்

(வ—ம்) ஆனல்சேளு மிராஜகுமாரனே நீரிந்தப் பூவுலகத்தில் பிறந்தபின் உம்மை ஆதரித்து வளர்த்ததுயார் சீக்கிரஞ்சொல்லும் சொல்லாதிருந்தால் இக்ஷணமே என்கையாவால் உம்மைவெட்டி நேரே பிளந்துபோடுவேன இராஜகுமாரனே.

அப்பாஸ் ஜவாபு மசலா.

நேரேபிளப்பேனென் ருரபாரத்துட
நீசொன்னற்போலே பின்னுருஞ்சொன்னற்சொல்வேன்
ஆரறிவாய் பருவீரரசன்பெற்ற
அன்னமேசொர்ணமே இன்னமுங்கேளென்னை
அல்லாவளர்த்தான் காணவக்துனனைச் சொல்லால்வெல்லத்தான்

(வ—ம்) ஆனல்சேளும் பெண்ணே ஞானசிரோமணியே என் தாய்வயிற்றிலும இவ்வுலகத்திலும் யெனனைவளர்த்து வாலிப மாக்கியது இவ்வுலகத்தை சிருஷ்டித்த வல்லபக்கடவுளாகிய அல்லாஹுத் தாலாவாயிருக்கும். இனனம் நீகேட்கவேண்டியதெல்லாம் கேட்டுக்கொள்ளும் பெண்ணே.

வல்லி-விருத்தம்

சொல்லினல்வெல்வேனென்று சோபனம்பகிர்ந்தமன்ன
கல்லதுசொல்வேனுன்னை நாளைநாண தப்பாதிப்போ
செல்லும்நீர்விடுதிக்கென்று திரும்பினள்மனையிற்சென்ருள்
பல்லருஞ்சொல்லப்பாஸ் பரிதனிலேறினரே.

(வ-ம்) ஆனல்சேளு மிராசகுமாரனே இன்றையதினம் உம்மை நான் கொல்ல நினைக்கவேயில்லைநாளையதினம் இச்சபையோர றிய எந்தவிதமுங் கொன்றுவிடுவேன். ஆகையால் உம்முடைய விடுதிக்குப்போய் நாளையதினம் வாரும் இராஜகுமாரனே.

அப்பாஸ்-விருத்தம்.

பரிகனிலேறிவாசிப் பதத்துகள்படுத்தவென்றே
கிறிதனைத்தவிற்கவென்றே கிடுகிடென்றனுமனித்து
ஒருகொடிப்பொழுதினுள்ளாய் வோடியேகிழவி வீட்டின்
அருகினிற்குதிரைகட்டி யப்பாஸ்மேயிருந்தாரன்றே

பொதுவிருத்தம்.

இருந்திடுமப்பாஸென்போ ரிரவெல்லாமிறையைப்போற்றி
விரும்பியேதொழுதென்பாவில் வெற்றிதக்கருள்வாய்மப்பே
வரம்பெறதுஆவுங்கேட்க வன்றிறகருக்குச்சேவல்
கூரம்பெறக்கூவவெய்யோ னுதயமாகிரியில்வந்தான்.

அப்பாஸ்-தரு.

சூரியனுமப்போ வானிலேவந்து தோற்றிட வப்பாஸ்தானும்
கூரிலேவேல்விழி யாள்மூனப்போக கொள்கையுடனெழுந்தனரே
எழுந்துகிழவியை நோக்கியம்மையே யிரும்போய் வாரேனென்றே
வளம்பெறவே துஆவுங்கேட்க மனம்வைத்திடுவீரெந்தன்பாக்யம்

பாக்கியமென்றப்பாஸ்சொல்ல நரைப்பாவையுமேயப்போசொல்வாள்
சீக்கிரம்நீமிகவல்லாய் யெந்தன்சிறுவனைக் கூட்டிநீசெல்லாய்
சென்றிடுமென்றுமேகிழவி பெற்றசிறுவனையேவிடயழகின்
மன்னவன்கைக்கரவாளை மன்னனீக்திடவாங்கினன்வளமாய்

வளம்பெருமப்பாஸ் மன்னன் அப்போ வாம்பரியேறினர் மின்னே
கிழவிமகன்வரும்நேரம் பரிகிட்டி நடத்தினர் சொன்னேன்
சொன்னேன்பரிபதிகேட்டு தாளத்தோற்றிடவிண்டிடவிட்டு
மன்னன்பகுவீரனீன்ற மகள் மண்டபத்தின் முன்னுங்கிட்ட

சபை-விருத்தம்.

கிட்டியேயப்பாஸென்னும் கேசரியேகும்வாசி
விட்டுமேயிறங்கிநிற்கும வேளையிலேபூதேசப்
பட்டவர்த்தனர்கள்சூழப் பகுவிராஜனவந்து
தொட்டனரப்பாஸ்கையைத் துதிசெய்துயிருத்திச்சொல்வார்

இராஜசொல்-விருத்தம்

கண்டுமேபகுவீரன்ணால் கதிரிலைவேலப்பாஸை
தன்றிருபுயததணைத்துத் தழுவியேயிருத்திச் சொல்வார்
வென்றிகொள்ளரசேசோழும் வேட்டைபோய் வருவோமென்ன
நன்றெனநடந்தப்பாஸ் நளினவாம்பரிமேற்கொண்டார்

அப்பாஸ்வேட்டைத்-தரு.

அரசர்வேட்டையாடினரே-அப்பாஸ்ராஜன்
அரசர்வேட்டையாடினரே
அரசர்வேட்டையாடினரே அதிகதிர்சூரியன்போலே
கூரிகையினிலம்பு மேற்றித் துரைமனமெய்க்கவப்பாஸ் அரசர்

சேட்டிளம்சிங்கம்புலியைக் கூட்டமாய்வரும்யாளியை
நாட்டினர்யீட்டியாற்சூற்றி தாட்டிகத்துரையப்பாஸ் அரசர்
புள்ளிமான் கலைமரைகள் துள்ளியேவருமுசலைத்
தெள்ளியவேலாலேகுற்றித் தள்ளியேகாட்டிலப்பாஸ் அரசர்

இத்தவிதமாகவேட்டைத் தக்கிராதாகக்காட்டில்
சித்தையுடனேயப்பாஸ் சந்தகம்கிட்டேகிடலாம் அரசர்

சபை-விருத்தம்

மகள்தனக்கேற்ற நல்ல மாப்பிள்ளையெனவப்பாளை
மகிபதிமுன்னுள்வந்து மகிழ்ச்சியாய்வாழ்த்திப்போற்றி
பகையருவீராசன் பலபலதளங்கள்சூழ
ஜெகபதியரசர்போற்றத் திருநகர்வந்தாரிப்பால்.

வல்லிதரு-கண்ணிகள்

மின்னெனவேநடந்து மகாராஜன் பெல்லியும் வந்திருந்து-இந்த
பொன்னின் மாமண்டபத்தைச்சுற்றிப்போர்வையும் கட்டுமென்றாள்

கட்டுத்திரையினுள்ளே ராஜன்பேற்கட்டிகட்டினரே-அந்த
வட்டயிளமுலையாள் ராஜன்பங்கையிருந்தனளே

இருந்திடும்ராஜன்மகள் திரையின்பின் யேந்தலப்பாளிருந்தார்
அருந்தவத்தோடிருந்தார் பலவீரங்கணாலூர் வந்திருந்தார்

அன்னநடையின்மின்னாள் அப்பாளையுந்தான் மயக்க
மின்னாள்வெளிமுகத்தைத்திரை நீக்கிப்பங்கையுங்காட்டினளே

சபை-விருத்தம்

வந்திருந்தரசன்மங்கை மன்னரப்பாளைவெல்லத்
தந்திரவுபாயமாகத் தானெள்ளத்திரைநீக்கிச்
சுந்திரமுகமுங்கும்பஸ்தனத்தையும் பங்கையெல்லாம்
அந்தமாய்க்காட்டக்கண்ட அப்பாள்மெய்மயங்கினரே

வல்லி-தருவிருத்தம்

மயங்கிடும்வேளைராஜன் மங்கையப்பாளைக்கூவி
பயங்கரமாகத்தேர்ந்து பாரினில்மூலைகாணுண்டு
இயம்பிடவுரையுமென்றாள் வேந்தனுமிண்டிடாதால்
செயம்பெறுமரசரெல்லாந் தெருவையுங்கொல்வாளென்றாள்

(வ-ம்) அனால் சேனு மிராஜகுமாரனே இந்தவுலகத்தில் காலுமூலையுண்டும் அன்னுன்கின் பொருளையும் யெனக்கு இன்னதென்று விபரமாகச் சொல்லவேண்டும். அப்படிச்சொல்லாதிருந்தால் என் கைவாளினலே வுன்னை வெட்டிக்கொல்வேன் இராஜகுமாரனே.

அப்பாள்-விருத்தம்

கொல்லுவாளென்ற சொல்லை கோபதியப்பாள்கேட்டு
வல்லவர்தேர்ந்துராஜன் மனதினில் துயாமுற்று
இல்லிலோரடியாள் தன்மே லிச்சையாயிருப்பேனந்த
வல்லிபோலுனைக்கண்டு மதிமயங்கினனென்றார்.

அப்பாஸ்-தரு

அக்தமாகன்னகரில் காங்களரசாளும்காலையிலே
எத்தனுடனரண்மனையில் ஒருபேத்தினமுமெள்ளாட்டியுண்டும்
சந்திரன்முகத்தொளிவுபோல் யவள்சங்கைமுகசதநிறமுகு
கந்தங்கமழ்பூங்குழலா ளகலாக்காவின் செய்யவைததிருகதோம்
அந்தவல்லி இவளெனவே காதலாகையாகப்பார்த்திருக்தேன்
அந்தவேளையெந்தனுக்கே பெண்ணே விந்தைமசலாயுரைத்தாய்
சிந்தைமகிழ்ந்தேமசலாபெண்ணே சீக்கிரத்தில்சொல்வாயிப்போ
அந்தப்பொருள்விந்தையதாய் யானுமறைகிறேன்நீமயங்க

அப்பாஸ்-வசனம்

ஆனல்கேளும் ஞானரத்தினசுக்சையே காங்கள் அக்தமாககரை அரசாண்டிருக்கும்போது எனக்கு பணிவிடை செய்யும்படியாக என் தகப்பனாரவர்களால் ஓர் அழகிய அடிமைப்பெண்ணை வாங்கி வைத்திருந்தார்கள் அவளபேரில் யெப்போதும் நான்கிருபையா யிருப்பேன். இவ்விடத்தில் அவளையெனக்குத் தோற்றினபடியால் அவள் தான் இவ்விடத்தில் வந்திருக்கிறுளோவென்று யோசித்தேனே தவிர உனைக்கண்டு நான் யோசிக்கவு மயமசவுமில்லை. ஆகையால் நீ சொன்ன மசலாவை இன்னொருதரஞ் சொல்லும் பெண்ணே.

வல்லி ஸவால்-மசலா

அடிமையென்று என்னையுரைத்தாய் அடேவுன்னை நான்விடேன் கொல்லுவேன்மன்னா-நானசொல்வேன்-அலமதுதனில்-காலு மூலையுண்டும் கோலமுடன்சொல்லு-மாமசலத்தன்னை மன்னா

வசனம். ஆனல்கேளு ராஜகுமாரனே யென்னைவுன்னுடைய அடிமையென்று சொன்னீரல்லவா. இந்த சொல்லுக்கு வும்மை வெகுவாக விடுகிறதல்ல. ஆகையால் இந்த வுலகத்தில் காலு மூலையுண்டும் அதையின்னதென்று விபரமாகச் சொல்லவேண்டும். அப்படிக்கு சொல்லாதிருந்தால் யென்கைவாளினு லும்மை வெட்டிப்போடுவேன் இராஜகுமாரனே.

அப்பாஸ் ஜவாபு-மசலா

வடிவுடையமடமயிலே வஞ்சியர்கள் கிஞ்சுகமேகேளாய்நான்சொல் [வேன்
வாகானகாற்று நெருப்புக்கண்ணீருடன்
ஆகாசவாகும்பின் மாமசலாச் சொல்லும்பெண்ணே

வ—ம் ஆனல் கேளாய்பெண்ணே நீ சொன்ன மசலாவின் பொருளாகியதும் அநாதிர்களாகிய மண், தண்ணீர், காற்று, நெருப்பு ஆகாயமாகிய அநாதிர்களாக இருக்கும். இன்னமும் கேட்கவேண்டியதைகேட்டுக்கொள் பெண்ணே.

வல்லி ஸவால்-மசலா.

பெண்ணேயென்றுசொன்னீரிந்தப்பேருலகில் பொழுதினைக்காணாது
ஒருபோதுகண்டுற்றதை யதெனவேசொல்லு
மிப்போதுசொல்லாவிட்டால் வாளினாற்கொல்வேன்மன்னா.

வ-ம். ஆனால்கேளு மிராஜகுமாரனே பூமியில் ஓர் ஸ்தலமானது தோன்று தொட்டுள்ள நாள்வரையில் சூரியனைக் காணாதிருந்து ஒரு போதையில் அத்தலம் சூரியனைக்கண்டு கொண்டது. அது இன்னதலமென்றறி விக்கவேணு மிராஜகுமாரனே! அப்படிக்கு சொல்லாதிருந்தால் என கைவாளினால் உம்மை இரண்டாக வெட்டிப் போடுவேன் இராஜகுமாரனே.

அப்பாஸ் ஜவாபு மசலா.

மண்ணுலகில்மிசுராறு வானபொடுபொழுதினைக்காணாது நபி
மன்னரெனுமூஸா-வன்னவர்கைத்தடி
மன்னாலடித்திட-விண்ணாதுகண்டது-பெண்ணே.

வ-ம் ஆனால்கேளும் பெண்கள்சிரோமணியே மூஸாநபியவர்கள் தன் பகைவனாகிய பிரஊனுடைய கொடுமையில் நின்றும் தப்பித்துதாங்களும் தங்கட்கு வசப்பட்ட கவுமுகளையு மழைத்துக் கொண்டுமிசுறுக்குப் போகும்போது கடலைப்போலேதிரையலைகளையுடைய நீலாறென்கிற மிசுறாறுவந்து குறுக்கிட்டது. அவ்வாற்றைக் கடந்தப்புரம்போக யேதொரு வழியுங் காணாததால் மேன்மைதங்கிய தங்கள் அஸாவாகிய வூன்றுகோலால் அவ்வாற்றின் தண்ணீரின்பேரில்ஓரடியடித்தார்கள். உடனே அத்தண்ணீர் விலகிஜனங்கள் நடந்து போகக்கூடிய ஓர்வழியுண்டாயிற்று அவ்வழியில் நபிமூஸா அலைஹிஸ்ஸலாமவர்களும் கௌமுகளும அக்கரைசேர்ந்து மேன்மையடைந்தார்கள். அப்போதையில தான் அவ்வாற்றினுடைய பூமிமையை சூரியன்கண்டது. ஆகையால் இன்னமும நீ கேட்க வேண்டியதைக் கேட்டுக் கொள்ளும் பெண்ணே,

வல்லி ஸவால்-மசலா.

வின்னமில்லையென்றுரைத்த மேன்மையுள்ள ஆண்மைமிகுந்த வல்
மேதினிதன்னிற்போய் யோர்நபியாகி [லாய் இந்த
மீண்டுஞ்சுவர்க்கத்தை யாண்டவரார் சொல்லுமன்னா

வசனம். ஆனால்கேளு மிராஜகுமாரனே நபியின்மக்கள்களில் சில பேர்கள் உலகத்தில் பெரிய பொய்யைச்சொல்லி சுவர்க்கம் புகுந்தார்கள். அவர்களின்னாரென்று விபரமாகச்சொல்லவேணு மிராஜகுமாரனே.

அப்பாஸ் ஜவாபு மசலா.

கன்னியேநீசொல்மசலா கருத்துடன்கேள்யாகூபுநபிமக்கள் தனில்
காணேமென் றீசுஸப் பாழ்கிணற்றில் தள்ளிக்
காட்டில் ஓநாய்தின்று போட்டதென்றேசொன்னார் பெண்ணே

வசனம்—ஆனல் கேளும்பெண்ணே நபியாகூபுஅலைஹிஸ்ஸலா மவர்கள் மக்கள் பன்னிரண்டுபெயர்களில் கடைசிமகனுசியும் அழகு சவுந்திரியமும் நபிபட்டாபிஷேகமும் பெற்றவராகின்ற நபியூசுபுஅலை ஹிஸ்ஸலாமவர்களை மற்றப்பதினொரு பிள்ளைகளாகிய அண்ணமார் கள் கூடி தம்பி யூசுபைக்காட்டிற்கு ஆடுமேய்க்கவழைத்துப்போய் கபடமாய் பாழுங்கிணற்றில் தள்ளிப்போட்டுகாட்டில் ஓநாய்தின்று போட்டதாக தகப்பனுரவர்களுக்கு பொய்யைச்சொன்னூர்கள். பிந்தி அவர்கள் தௌபாசெய்து விட்டபடியால் அல்லாஹு தஆலா அவர்களைச் சுவர்க்கப்பதியிற்சேர்த்துவைத்தான் பெண்ணே.

வல்லி ஸவால் மசலா:

பொன்னின்மகாமேர்வுநிகர்பொற்புதத்தின் விற்பனனேகேளாய்கான்
பூவினில்மேன்மையில்லாவிட்டால் தாழ்மையாம் [சொல்வேன்
பொய்யல்லோயார்க்கு மெய்கண்டாலோடுவார்மன்னு

வசனம்-ஆனுற்கேளு மிராஜகுமாரனே இந்த வுலகத்திற்கு முக்கியமானவஸ் தொன்றுண்டு. அஃதிருந்தால் உலகம் மேன்மை யடையுமில்லாதிருந்தால் தாழ்மையடையும்; அதைக்கண்டால மனி தர்கள் விரண்டோடுவார்கள். அது இன்னவஸ்துவென்று சொல்ல வேண்டுமிராஜனே.

அப்பாஸ் ஜவாபு மசலா.

மன்னர்மன்னர் தனைமிரட்டி வாளதினல்கோரல்செய்தமாதே என்
வாகாவருத்தியு மோகாப்பொருத்தியு
மாமசலாசொல்லும் மழையதுபெண்ணே

வசனம்—ஆனல் கேளும்பெண்ணே ஞானரத்தின வல்லியே! நீ சொல்லுமசலாவின் பொருள் அல்லாஹு தஆலாவின் றஹ்மத்தா கிய மேன்மைபொருந்திய மழையாயிருக்கும் பெண்ணே.

வல்லிஸவால் மசலா

பொன்னின் நவரத்தினமணி புயத்தரசேதிறத்துடன் சொல்வீரே
புதுமையாய்த்தண்ணீரில் அருமையாய்கடப்பவர் [ஆர்க்கும்
பொய்யல்லகைகால்கள் மெய்கண்டதார் சொல்லுமன்னு

வசனம்—ஆனற்கேளும் மிராஜகுமாரனே கையுமில்லை காலு மில்லை, தண்ணீரில் ஓடிகடப்பார்கள், கரையில்வந்தால் இறந்துவிடு

வார்கள், மனிதரைக்கண்டால் ஓடி ஒளிப்பார்கள், இவர்களின்னு றென்று விபரமாகச் சொல்லவேண்டும். அப்படிசொல்லத் தவறினால் உம்மை வெட்டிக் கொல்வேன் இராஜகுமாரனே.

அப்பாஸ் ஜவாபு மசலா.

சன்னைப்பண்ணி மன்னர்களைச் சடையினால் மோகஞ்செய்தமாதே
தாண்டுமசலாவைமீண்டிடுவேன்சபை [இப்போ
தானறிவாய் பல மீன்வகை யானதுபெண்ணே

வசனம்—ஆனால் கேளும் பெண்ணே நீ சொன்ன மசலாவின் பொருள் பலவகையான மீன்களாகவிருக்கும் பெண்ணே! ஆகையால் இன்னமும் நீ கேட்க வேண்டுவதெல்லாங் கேட்டுக்கொள்ளும் ஞானவல்லியே.

பொன்னினிதழ்செங்கமல பிறவனையயிறைவனே நீ கேளாய்-இந்த
பூவினிற் ஜின்னல்ல-தேவல்ல மநுவல்ல
புகழ்பெறுக்தூதாக வருபவரார்சொல்லுமன்னு.

வ-ம். ஆனால்கேளுமிராஜகுமாரனே! ஜின்னுமல்ல, தேவுமல்ல, மனுவுமல்ல, இதுகளெல்லா மல்லாதபடிக்கி அல்லாஹு தஆலாவின் றூதாக இவ்வுலகத்தில வந்தவர்களியார் சொல்லும். அப்படிச் சொல்லத் தவறினு லும்மை இரண்டாக வெட்டிப் போடுவேன் இராஜகுமாரனே.

அப்பாஸ் ஜவாபு மசலா.

அன்னநடைசின்னவிடை ஆயிழையே நீ யுரைத்தமசலா முன்னாள்
காபிலவர்தம்பி ஹாபிலைக் கொன்றபின்
அப்போதிரண்டுகாகம் மெய்புடன் வந்தது பெண்ணே.

வ-ம். ஆனால் கேளும் இராஜசெல்வியே! நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமுடைய மக்களில் காபீலென்றும் ஹாபிலென்றும் அண்ணன் தம்பி இருவரும் ஒரு பெண்ணின்பேரில் காதல்கொண்டு அண்ணனாகிய காபில் தம்பியாகிய ஹாபிலை கொன்று போட்டார். அந்த மையத்தை நல்லடக்கஞ் செய்யத் தெரியாது மடியில்வைத்துக் கொண்டு விசாரமாயிருக்கும்போது, அல்லாஹு தஆலாவின் மலக்குகளில் மேன்மைதங்கிய ஜிபுரீலலைஹிஸ்ஸலாமு மீக்காயீலலைஹிஸ்ஸலாமும் ஆகஇரண்டு மலக்குகளும காகவேடமெடுத்து அவ்விடம் வந்து இரண்டு காகமும மல்சண்டை பிடித்து கொத்திக் கொண்டு ஒரு காகம் நிலத்தில் விழுந்திறந்து விட்டது. அதை மற்றொரு காகம் யெடுத்து கசப்பு மாறறிவைத்து விட்டு பறந்துபோய் சொண்டில் தண்ணீர் சேந்து வந்து கழுவி குளிப்பாட்டி கபன் செய்து விட்டு காகம் பறந்து போயிற்று இதை கவனமாய் நோட்டமிட்டிருந்த தமையனாகிய காபிலாகப்பட்டவர் தன் தம்பி ஹாபிலையு

மவ்விதமேகமூவி குளிப்பாட்டி புடவையைக் கொண்டும்கபன்செய்து தானும் தெற்குவடக்காக கல்லடக்கம் செய்தார். இதுவே நீசொன்ன மசலாவின் பொருளாயிருக்கும் பெண்ணே.

வல்லி ஸவால் மசலா.

மெய்ப்புடனேயிப்பயென்னை வெல்லவந்தமன்னவனே கேளாய்
மக்ருடன் ஹறாம் மோக்கவேகூடினல் [நான்சொல்வேன்
வாகாவுண்ண ஹலா லாகுமீதுவென்னமன்னா.

(வ-ம்) ஆனல்கேளு மிராஜகுமாரனே ஓர் ஹறாமானவஸ்துடனே மக்ருஹாகியமற்றொருவஸ்துசேர்ந்ததினல் அதுயெல்லாரும் புசிக்கிறதற்கு ஹலாலாகிவிட்டது. அது இன்னவஸ்துவென்று சொல்லவேணு மிராசகுமாரனே! சொல்லத் தவறினல் என்னை வாளினலுன்னை வெட்டிப்போடுவேன் இராஜகுமாரனே.

அப்பாஸ் ஜவாபு மசலா

விற்புருவகற்பின்மகா வீருடையதார்முஹக்கின்நகரில் வந்த
விஞ்சைமகளே நான் கொஞ்சுறேன் கேள்சபை
விருப்பமாய்க்குடித்திடுங் கர்ப்பகநீராகும் பெண்ணே.

வ-ம். ஆனற்கேளும் பெண்கள்நாயகமே பனை அல்லது தென்னைமரங்களில வடியும்படியான நீர் கள்ளாகி விட்டபடியால் அது மூஸ்லிம்களுக்கு ஹறாமாகியது. அம்மரத்தின் பாளையிலிருக்கும் தண்ணீரங்கு மூன்னுக்கு மக்ருகாகிய சுண்ணாம்பைக் கொண்டும் தடைசெய்து மிரங்கினபடியால் அதற்கினிப்புண்டாகி பதனியாகி விட்டபடியாலது மூஸ்லிம்களுக்கு ஹலாலாகிவிட்டது பெண்ணே.

வல்லி ஸவால் மசலா.

கருப்பனையமொழிமடவாள்கண்டு மையல் கொண்டிடுமன்மதனே
கருவல்லவுருவுமல்ல கடுமானுமஜின்னல்ல [ஒரு
கண்ணுடிகாண்பவர் கண்ணுமூனனே சொல்லுமன்னா

வ-ம். ஆனல்கேளு மிராஜகுமாரனே ஒருவத்துகருவுமல்ல, உருவுமல்ல, மனுவுமல்ல, ஜின்னுமல்ல அது யாருக்கு மேன்மையுடையது அது இன்னதென்று சொல்லவேண்டும் இராஜகுமாரனே.

அப்பாஸ் ஜவாபு மசலா.

குரும்பைஸ்தனமரும்புமூலே கோதையர்சிகாமணியே கேளாய் ஒரு
குற்றமில்லாப்படை சுத்தமெல்லாமோடி
கொல்லவெழுப்பவும் வல்லமை யுள்ளவன் நல்லவர பெண்ணே.

வ-ம். ஆனால்சேளும் பெண்ணே! ஞானசிகாமணியே! நீசொன்ன மசலாவின்பொருள் சகல உயிர்களையுஞ் சிருஷ்டித்த சர்வவல்லமைக் குரிய அல்லா சுபுஹானகுத்தஆலாவா யிருக்கும்பெண்ணே.

வல்லி-விருத்தம்

காவலரப்பாஸென்னும் சனாதிதன்னைப்போற்றி
பூவலரரசன் மங்கை புகழேனககோபமாகி
மாவலியவனேயுனை வாதினால்கொலைச்கொல்வேன்
போவுந்தன்விடுதிக்கென்று பூவையின்பனையிற்சார்ந்தாள்.

வ-ம். ஆனால்சேளுமிராசகுமாரனே இன்றையதினம் உம்மைக் கொல்லதானினைக்கவேயில்லை நாளையதினம் அகத்தியமும்மைக் கொன்றுவிடுவேன் ஆகையால் உமதுவிடுதிக்குப் போகுமிராச குமாரனே.

அப்பாஸ்-விருத்தம்.

மனைதனில்மங்கை செல்ல வான்பரிமீதப்பாசு
கனபுரியேறிராஜன் கதிர்மனை வீதிநீங்கி
தனதுடன்கிழவிசொந்தத் தனையகா டகத்திற்புக்கி [யோன்.
மனதினிலிறையைப்போற்றிவணங்க வேயுதித்தான் வெய்

இதுவுமது-விருத்தம்.

வெய்யவனுதித்தபின்பு வேந்தரப்பாஸுமந்த
தையலாளென்னும் பூவைதன்னிடம்விடையும்பெற்று
கைதனில்வாளுமேந்திக் கதிகொள்வாம்பரியிலேறி
வையகம் புகழும் ஞான வல்லிமண்டபத்தில்வந்தார்.

அப்பாஸ்-தரு.

மன்னோர்புகழுமதியப்பாஸ்
மண்டபம்நாடினரே
மன்னயமானபணியுமிலங்க நாற்றிசையுள்ள நிரேசர்களும்போற்ற
உன்னிதமான பரிமிசையேறி உச்சிதமாயம்பைவிட்டிருந்தப்பாஸ்.
அள்ளியதர்மங்கள்மிகவாய்ச்செய்ய ஆகமராஜர்களும் புகழுய்ய
உன்னிதமானபரிமிசையேறிவோங்குபுகழப்பாஸ்பாங்குடனடந்து
அரசர்புகழுமஹாமதுசாயபு அருமையுள்ளமைந்தன்அப்பாஸுநேசர்
அந்தமுடனே பகுவீரராஜன்அருமையானபைகள் தனைத்தேடி [மன்
கற்பழியாதமடந்தையைத்தேடி காதலுடன் பணிமண்டபநாடி
அற்புதமான குதிரையிலேறி அரசரப்பாஸுமபிரியநடந்தார். [மன்

சபை விருத்தம்

ஒன்பது ரத்தினத்தால் வொளிர்மணிக்கோலுவின்மீதில்
அந்தமாய்கொலுவுள்ள வரசர்கள்நடுக்குழ

செம்பொன்மாமணியிலங்கத் தெரிவையுமசலாச் சொல்ல
தனமனத்தோழியோடு ஞானலங்கிர்தம வந்தாள்.

வல்லிசொல்—கொச்சகம்.

தோழிபுடைசூழ்தரவே தோகை மயிலாசனத்தில்
சூழுமன்னர் தானறிய சூட்சியமாய்ச் சொல்லலுற்றாள்
ஆளிலழகாகவந்த வரகுபதிமன்னவனே
சாலையமில்லாமலிப்போ சாற்றுரேன் கேள்தாரணியில்

வல்லி ஸவால்-மசலா.

தொல்லுலகில்யென்னை வெல்வேனென்றுவந்தமன்னா யிப்போ[ளும்
துடினமாய்மசலாவை வடிவுடனேசொல்லக்கேளும் சொல்லககே
எல்லபேர்கள் முன் பின் தினனவே ஹலாலாகும் அதில்
யிருக்கும்ஹாறுமநடுவே பெருக்கமாகயின்ன தென்று சொல்லும்
சொல்லாவிடில் கொல்வேன்.

வ—ம். ஆனல்கேளுமிராசகுமாரனே மனிதர்கள் தின்கப்பட்ட வஸ்தின் முன்னும் பின்னும் தினன ஹலாலாகும், நடுவே யிருக்கிறது ஹாறுமாயிருக்கும். அதை யின்னதென்று சொல்லவேண்டு மிராசகுமாரனே.

அப்பாஸ் ஜவாபு-மசலா.

என்னைக்கொல்வேனென்று வல்லமை பேசிய மசலாகாணும்-உகப்புடனே பொருள் வுரைக்கிறேன்கேள் சபைமுன்னே யெந்தன் கண்ணே, அன்னம் போலேநடை மின்னல்போல யிடையாளே அது அட்டைபறவை முட்டை திட்டமாகு மென்பானேமலர்தேனே.

வ-ம் ஆனல்கேளு மிராஜகன்னிகையே நீ சொன்னமசலாவின் பொருள் பட்சிசாலங்களயிடப்பட்ட அண்டமாகில முட்டையின் வெள்ளைக்கருவும்மஞ்சட்கருவும் தின்ன ஹலாலாகுமிதின் நடுவிருககு விம்பலாலேமட்டில் இன்ன ஹாறுமாயிருக்கும் பெண்ணே

வல்லி-ஸவால்-மசலா.

தேனேயென்றுமிகு சேனை முன் கூறியமன்னா-உந்தன்
சிந்தைநலங்கவொருசிந்தைமசலாசொல்லக் கேளீர் சொல்லக்கேளீர்
கோனேபனிரண்டாண்டு முப்பதினாயிரகபிமார் அதில்-கொண்டு
பதிவானவர்விண்டெனக்குச்சொல்லுவீர்—சொல்லுவீரே

வ-ம். ஆனல்கேளுமிராசகுமாரனே ஒருமரத்தில்பன்னிரண்டு இலையுண்டு. அதில் முப்பதினாயிரம் கபிமார்களுடைய நாமங்கள் பதிவாயிருக்கிறது. அது இன்னதென்று விபரமாகச் சொல்லவேண்டு மிராஜகுமாரனே.

அப்பாஸ் ஜவாபு மசலா

சொல்லுவீரனவே உன்னியவேல்விழியாளே-யிக்த
தொல்லுலகிலுன்னை வெல்லுவதரிதல்லவானே—மொழிவேனே
வல்லமை பொருந்திய சொல்லிலதிசயமான-யாகூபுரம்
மைந்தர்பன்னிருவர்கள் தந்தாயமிர்வே—முயிலாள.

வ-ம். ஆனால் கேளுபெண்ணே நீசொன்ன மசலாவின்பொருள் நபியாகூபு அலைஹிஸ்ஸலாமவர்களின் மக்கள் பன்னிரண்டுபேர்களின வமிசவழியில் முப்பசிஞயிரம் நபிமார்கள் வெளியானர்கள் அதுவாயிருக்கும் பெண்ணே.

வல்லி-ஸவால்-மசலா

குயிலேயென்றுயென்னை கூவியமாமதிபன்ன—யிப்போ
கொள்கையுடன்மசலாவிற்கிறேகா னின்னைக்கேளீர்சொல்லக்கேளீர்
அகிலமதுதனில் மகிமையானநபித்தலமே-அதை
யட்டிபண்ணுமலே திட்டமுடனே செப்பவேண்டும்ஒப்பவேண்டும்

வ-ம் ஆனால்கேளுமிராஜகுமாரனே இவ்வுலகத்திற்கு நடுத்தலமெதுவாயிருக்கும் சொல்லவேண்டு மிராஜகுமாரனே.

அப்பாஸ் ஜவாபு மசலா

செப்பவேணுமென்று மெய்ப்புடனே சொல்லுமசலா-காணும்
தீர்க்கமுடனேயக்கிசிக்கிராமா யெடுத்து யுரைப்பேனே-உரைப்பேனே
ஒப்பில்லான்கிருபையெப்பொழுது நிறைவாகும்-நல்ல
வுயர்பதியாகிய ஜெயமக்கமாபதிதானே-விழிமானே

வ-ம். ஆனுல்கேளும் ஞானவஞ்சியே அதாகிறது எட்டு திக்குப் பதிஞறு கோணத்திற்கு நடுத்தலமாகியது அல்லாஹுத் தாலாவினது கஃபா தங்கி யிருக்கும்படியான மக்கமாநகரமாக விருக்கும் பெண்ணே.

வல்லி ஸவால்-மசலா

மக்கமாநகரைதிக்குள்ளோர்புகழு மன்னு-யிப்போ
மதிக்க ஒருமசலாகதிகவேகானசொல்லக்கேளீர் சொல்லக்கேளீர்
திக்குள்ளே நீனேர்கள்மெய்க்குமைமர்புலனை யுமொடுககி தொழுக்
கிசையின்னதவமென லுவிசையுடனேகாட்டவேண்டும்-தீட்டவேண்
[டும்

வ-ம். ஆனைல்கேளுமிராஜகுமாரனே எட்டுதிக்கு பதினாறு கோணத்திலு மிருக்கப்பட்ட முஸ்லிமானபேர்கள் அல்லாஹுத் தலாவைநாடிய வணங்கப்பட்ட தலமெதுவாயிருக்கும் அதை விபரமாகச் சொல்லவேண்டு ராஜகுமாரனே.

அப்பாஸ் ஜவாபு-மசலா

திட்டவேண்டுமென்று கேட்டிடு மாமசலாவைமசலாவைகாணும்
மூர்க்கமுடனேசபைகேட்கவே யெடுத்துரைப்பேனே-வகுப்பேனே
காட்டமேபெருகிதோட்ட முடனேயாதிரனேயே ஆதிரனேயே
தொழும்-தன்மையுடன மக்காதன்னிற்கஃபாவதைத்தான் சொல்லி
[னேனே

வ-ம். ஆனல்கேளும் பெண்ணே இவ்வுலகத்திலிருக்கப்பட்ட முஸ்லிம்கள் அனைவரும் ஏகபொருளாகிய அல்லாஹுத்தஆலாவை காடிவணங்கும்படியான ஸ்தலமானது மேனைாதங்கிய மக்கமாநகரத்தின் நடுவணையாயிருக்கப்பட்ட கஃபாவாக இருக்கும் பெண்ணே

வல்லி ஸவால்- மசலா

சொல்லினைவேவல்லியின்முன்னே கீருபன்னு இன்னம்
சுத்தரமாகயெந்தனகதங்கபமு மசலாசேளீர்-சொல்லகசேளீர்
வல்லமைமரமொன்று உள்ளகிளை ளிரெண்டும் யிலைகள்வகைமுப்ப
தில்வெள்ளை யிரம்பாதிநீலம் மலரஞ்சே சொல்லுமிஞ்சே

வ-ம். ஆனல்கேளும் இராதகுமாரனே ஒரு மரத்தில் பனிரெண்டு கிளையுண்டு கிளையொன்றிற்கு முப்பதுயிலையுண்டு அந்த முப்பது யிலையில்பாதிவெள்ளை பாதிநீலம் அதில் அஞ்சுமலர் பூவுமுண்டு இதை இன்னதென்று விபரமாகச் சொல்லவேண்டு மிராஜகுமாரனே.

அப்பாஸ் ஜவாபு மசலா.

அஞ்சுமலரெனவே கொஞ்சுங்கிளிமொழியாளே-அனத
அன்புடனே கதை செனபுடன்சொல்வேனே பாரே-சபமீதே
மிஞ்சில்லாமரமொன்றஞ்சி லானதொருவருடம்-அதில்
பேசுங்கிளைபனிரண்டாகிலாபாதம் னிரெண்டே இன்னமுண்டே
இன்னமுண்டு முப்பதிலையான முப்பதுகள் பாதியிரவு நீலவர்
ணம் பகல் வெள்ளை மலரஞ்சே ஒகுத்தஞ்சே.

வ-ம். ஆனல் கேளும் ஞானலங்கிர்தவல்லியே அதாகிறது ஒரு மரமென்று சொன்னது ஓர் வருடம், பன்னிரண்டுகிளையானது பன்னிரண்டு மாதங்கள், முப்பதுயிலையாகிறது முப்பதுநாட்கள், பாதிவெள்ளையானது பகல் பாதி நீலமானது இரவுகாலம், அஞ்சுமலர் பூவானது அல்லாஹுத் தஆலா முஸ்லிமகட்கு பறுலாக்கப்பட்ட அஞ்சொகுத் தொழுகையாக விருக்கும பெண்ணே.

வல்லிசொல் விருத்தம்.

அஞ்சொகுத் தென்றமன்னு யாகவே காலையுன்னை
வஞ்சமுடனேகொல்வேன் வாரும்போம்விடுதிக்கென்றான்

வஞ்சியு மாளிகைக்குள் வந்துமே யிருந்த பின்பு
கொஞ்சுவரம் பரியிலேறி கோனப்பாலரசர்சென்றார்

வ-ம். ஆனல் கேளு மிராஜகுமாரனே இன்றையத் தினம் உம்மை நான் கொல்ல நினைக்கவில்லை. நாளை யெந்த விதமும் உம்மை வென்று என் கை வாளுக்கிரையிடாமல் இருக்கிறதில்லை யானபடியால் நானிப்போது யென் மாளிகைக்குப் போகிறேன். தாம் தமது வீடுதிக்குச் செல்லும் மன்னா.

வல்லி ஸவால்-மசலா.

வந்திருந்துஞானவல்லி மன்னவர்கள்சூழ்சபையில்
தந்திரமதாய்நினைந்து தனதுள்ளமெல்லாங்கலங்கி
விந்தைசெறிமன்னவனே மேன்மையுடன்றான்கூவி
சுந்தரமாய்மசலா சொல்கிறேன்கேள்மன்னவனே

வல்லிஸவால்-மசலா

மன்னவனே சொல்லக்கேளும் ஒருமசலாப்பொருள்மீளும்-முன்னே
காபிராயிருந்துபின்பு மூடிகி யிஸ்லாத்தில்வந்து
வந்தகாபிர்களிரண்டுபேரையு மதிப்பேன் சபைதுதிப்பேன்-அவன்
சொந்தமாகியபெண்ணை காவின் சுகிர்தமாய்செய்துகொண்டான்.
சிந்தை ஒருவனுந்தானே காவின் செய்யாமலே கூடிக்கொண்டான்
கூட்டம்பெருகியசபையி லும்மைக்கொல்லுவேன் நான்கொல்லு
வேன்என்னை வெல்லுவனென்றுரைத்தீர் இக்ஷணத்திலும்மை
[வதைப்பேன்

வ-ம். ஆனல் கேளு மிராஜனே புத்தை வணங்கியகாபிராக யிருந்த இரண்டு பேர்கள் நமது தீனில் இஸ்லாம் மார்க்கத்தில் தன் பெண்சாதியுடனே வந்தார்கள். வந்த இரண்டு பேர்களில் ஒருவன் தன் பெண்சாதியை நிக்காஹ் செய்து கூடிக்கொண்டான். மற்றொருவன் நிக்காஹ்செய்யாமல் கூடிக்கொண்டான். இதின் விபரமின்னதென்று விளங்கச் சொல்ல வேண்டு மிராஜகுமாரனே

அப்பாஸ் ஜவாபு-மசலா

வெல்லுவேனென்றகண்ணே நானும்விளம்பக்கேள்சபைமுன்னே
கல்லிலே நாரையுரிப் பேனுன்னைக்கடுகியேமாலையிடுவேன் அவன்
சிறந்த கணவனுடனே யொருதினத்திலடைவுடனே [யும்
கறந்தபால் மொழியாளேதீனிற்கடுகியே வந்தாளே கருதியேமருபடி
கட்டவேவேண்டாக் திட்டமாய்ப்பெண்ணை
உன்னையுமாலையிடுவே னுன்னை யுகப்புடன்கட்டியணைவேன்

வ-ம். ஆனல் கேளும் ஞானலங்கிர்தவல்லியே ஒருவன்காபிராயிருந்து தானும் தன் பெண்சாதியுமாக ஒரே தினத்தில் இஸ்லா

மார்க்கத்தில் வந்துவிட்ட படியால் திரும்பத் தன் பெண்சாதியை நிக்காஹ் செய்யவேண்டியதில்லை. மற்றொருவன் தான் மூந்தியும் தன் பெண்சாதி சில காலத்திற்குப் பிந்தியுமாக இஸ்லாமான படியால் அவன் தன் பெண்சாதியைத் திரும்ப நிக்காஹ் செய்துக் கொள்ளும் படியாகி விட்டது பெண்ணே.

வல்லி ஸவால் மசலா

மோகமாகினேனென்று வந்து மொழிகிறாயென் முன்னின்று
ஆகமுடனேயறிந்து எனக்கருளுமனதாயிருந்து
சாகரிகலோகசபைமுன் உன்னை நட்டுவேன்யிரண்டாய் வெட்டுவேன்
காதல்மன்னரிருபேர்களொரு கன்னிமேல் மோகங்கொண்டார்கள்
அந்தமாதுயின்னொருவனுக்கு தாலிகட்ட ஹறாமாகுமிதுக்கு
ஆகிடும்பொருளை சொல்லாவிட்டா லடிப்பேன்வாளால்-பிளப்பேன்
என்னை வெல்லுவேனென வுரைத்தீர் இந்த
க்ஷணத்திலுன்னை வதைப்பேன்.

வ-ம்- ஆனால் கேளு மிராஜகுமாரனே இரண்டு ஆண்பிள்ளைகள் ஒரு அழகிய பெண்ணை கல்யாணம் செய்து கொள்ள நாட்டமாயிருந்தார்கள். அப்பெண் ஒரு மனிதனுக்கு நிக்காஹ் செய்ய ஹலாலாகிறாள். மற்றொருவனுக்கு ஹறாமாகிறாள். ஆகையா லிதின் விபரத்தை இன்னவிதமென்றறிந்து சொல்ல வேண்டும். அப்படிக்குச் சொல்லா விட்டால் என் கைவாளினு லுன்னை வெட்டி கொன்று போடுவேன் இராஜகுமாரனே.

அப்பாஸ் ஜவாபு-மசலா

ஆசைக்குகந்தகண்ணே யெந்தனருமையாகிய-பெண்ணே
நேசமுடனேகானே தாலி-நெறியுடன்கட்டுவேனே
முத்துவடமே கொங்கைகுடமே
வல்லியேநீசொல்லுமசலா தனைவகையுடன் சொல்லக்கேளாய்-அந்த
மங்கைமாரொருவனுக்கே தாலிகட்ட ஹலாலாகும்
மற்றவனுக்கே ஹறாமாகுமென்றதுசரியே
என்மங்கையேமாலையிடுவேன் உன்னை
மகிழ்ச்சியாய்க்கட்டியணைவேன் பெண்ணே

வ-ம். ஆனால் கேளும் பெண்ணே நீ சொன்னமசலாவின் பொருள் நீ சொன்னதேசரி. அதின் விபரமட்டில் நான் சொல்லுகிறேன் கேட்டுக்கொள் ஒரு பெண்ணின்பேரி லிரண்டு பேர்கள் மோகப்பட்டு நிக்காஹ் செய்து கொள்ள நாடி யிருந்தார்கள். நபிகளுயகமுஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமுடைய மார்க்கப்படி ஒருவன் நான்கு கலியாணம் வரையில் செய்துக் கொள்ளுகிறது ஹலாலாக ஆகுமாயிருக்கும். நான்கு பெண்சாதிக்கு அதிகமாய்க் கலியாணஞ் செய்து கொள்ளுகிறது ஆகாது ஹறாமா யிருக்கு

இதிலொருவன் நான்கு பெண்சாதி யுடையவனான படியால் அவனுக்கு அப்பெண் ஹறாமாகி விட்டாள். மற்றொருத்தன் நிக்காஹ் இல்லாதவனானபடியால் அப்பெண்ணுக்கு நிக்காஹ் செய்ய ஹலாலாகி விட்டாள். இன்னமும் நீ கேட்க வேண்டியதெல்லாங் கேட்டுக் கொள்ளும் பெண்ணே.

வல்லி விருத்தம்.

கட்டியே அணைவேனென்றுங் காதலாயுரைத்தமன்னா
வெட்டியேகாளையுன்னை விடுகிறேன் பயப்படாதே
துட்டனமாகவேதான் சூரியனுதிக்குமுன்னே
திட்டமாய்வருவாயென்று திருமின்னாளேகினாளே.

வ-ம். ஆனால் கேளும் மிராஜகுமாரனே இன்றைய தினமும்மை நான் கொல்ல நினைக்கவில்லை. அகத்தியம் நாளையும்மையென்கைவாளினால் வெட்டிப் போடுவேன். ஆகையால் உமது விடுதிக்குச் செல்லு மிராஜகுமாரனே.

உலகெலாம்புகழவந்த வுயர்பதியப்பாஸேகேளாய்
நிலவுபோல்வதனவல்லி நிகழ்த்தியமசலாக்கெல்லா
நலமதாய்ப்பொருளுரைத்தீர் நங்கையுமதிமயங்கி
பிலமெலாங்குறைந்துவென்னுள் பேதைபோல்சிக்கினாளே.

சபை-வசனம்.

அகோதெப்படி யென்றால் அப்பாஸ் மகாராஜன் கிழவி வீட்டிலிருந்து பரியிலேறி ஞானவலங்கிர்த வல்லி மசலாப் போடுகிற மண்டபத்திற்குப் போய் சேர்ந்த பின் நடக்கும் விதங்காண்க.

வல்லிசொல்-இன்னிசை

மன்னவனே ஆறுநாளாய் வந்துமசலாக்கேட்டீர்
உள்ளுரையைக்கொண்டு யிந்தவூரவர்கள் தானறிய
பின்னுமெந்தன்வாசலிலே பேதாய்மசலாகேட்க
இன்னமொருமசலா யியம்புகிறேன்மன்னவனே.

வல்லி ஸவால் மசலா.

மாமதிபோல்முகத்தோன் மலரின்புயமன்னனேகேளொரு
வன்னப்பறவையது தானது தக்குபீரானதிலாமலேசகலோருந்
தின்னலாகிலுமாகவேயது தானென்னசொல்வீர்
சொல்லாவிட்டால் நானுன்னைக்கொல்லுவேன்.

வ-ம். ஆனால் கேளு மிராஜகுமாரனே பட்சிஜாதிகளுள் ஓர்பறவையை அல்லாவுடைய திருநாமம் பொருந்திய தக்குபீரிலறுக்காமல்

யாவரும் அதைப்புசிக்கிறதற்கு ஹலாலாயிருக்கும். இது இன்னபற வையென்று விபரமாகச் சொல்லவேண்டும். அப்படிக்குச் சொல்லா திருந்தால் வெட்டிப்போடுவேன் இராஜகுமாரனே.

அப்பாஸ் ஜவாபு மசலா.

காஹுன்னை கொல்வேனென்றே மதியாமலேகாகரீகம்பேசும்
மாமயிலேமுன்னல் வேனலைக்கண்டலைமானதுபோலஞ்ஞாறு
வேந்தர்களேவென்று தானனுமசலாவும்
வெட்டுக்கிளிதான் தாலியுன்னைக் கட்டிக்கொள்வேனுன்.

வ-ம். ஆனல்கேளும் பெண்ணே ஞானசிரோன்மணியே அல் லாஹு தஆலா வுண்டுபடுத்திய பறவையினங்களில் வெட்டுக்கிளியா கியபறவையை யாவர்களும் தக்குபீரில்லாமல் புசிக்க ஹலாலாயிருக் கும் பெண்ணே.

வல்லி ஸவால் மசலா.

தாலிகட்டிக் கலியாணஞ் செய்வேனென்ற தாட்டிகனே சொல்லக்
கேட்டறிபூவினில் வாலிபரும் ஒருமங்கைதனக்காக
வலுவினல் துணைவரைக் கொலைசெய்த பெயரெவர்
வாக்கினுற் சொல்வீர் சொல்லாவிட்டால் பார்க்கவேகொல்வேன்.

வ-ம். ஆனல்கேளு மிராஜகுமாரனே ஓர் பெண்ணிற்காகத் தன்கூடப்பிறந்த சகோதரனைக் கொலைசெய்தவ ரின்னரென்று சீக் கிரத்தில் சொல்லவேண்டும். சொல்லதிருந்தால் இச்சபையோர் பார்க்கும்படிக்கு என்கையிலிருக்கும் வாளினலும்மை கொல்வே னிராசகுமாரனே.

அப்பாஸ் ஜவாபு மசலா.

பார்க்கவேகொல்வேன் ருக்கிரமாய்பேசிடும் பைங்கிளியேகேளும்
மங்கைஹவ்வாமகன் ஆக்ரமாய் வல்லவர் யோக்கியவாசகர்
காபீலவர் தம்பி ஹாபிலைக்கொன்றவ
ரல்லவோபெண்ணே இன்னுமேதும்சொல்லடிகண்ணே.

வ-ம். ஆனல்கேளுமிராஜசீமாட்டியே நீ சொன்னமசலாவின் பொருள் ஓர்பெண்ணுக்காகத் தன்கூடப்பிறந்த சகோதரனைக் கொலைசெய்தவர் ஆதமுடையமக்களில் காபிலாகிய தமையன் ஹாபி லாகிய தன் தம்பியைக் கொலைசெய்துபோட்டார் பெண்ணே.

வல்லி ஸவால் மசலா.

கண்ணேபெண்ணேயென்று கன்னயம்பேசிடும்காவலனே
தக்குபீரிலறுத்ததை தின்றிடலாம்திரும்பொருவஸ்துவைத்
திரும்பவருத்திடில்ரெத்தம் ஹறுமாகும்
செப்புவீர்மன்ன செப்பாவிடில்தப்பிதமன்ன.

வ—ம். ஆனால்கேளு மிராசகுமாரனே முஸ்லிம்களுக்குப் புசிக்கஹலாலாக அறுத்தஓர் வஸ்துவில் இருக்கப்பட்ட இரத்தம் ஹறுமாக விருக்கும். அதின்னவஸ்தென்று சொல்லவேண்டு மிராஜ குமாரனே

அப்பாஸ் ஜவாபு மசலா

செப்பிளங்கொங்கைமீறிப் போது சொன்னதுதிர்க்குமா
யார்க்குமே மார்க்கமுறையது யெப்போதோர் வஸ்துவை
உகப்பாயறுத்து பின்னிருக்கு நடுவே பிஸ்மில்லாமாங்காயில்
இருக்கின்றரெத்தம்பெண்ணே கண்ணே வுரைப்பேன்காண்முத்தம்.

வ—ம். ஆனால் கேளும்பெண்ணே இராஜசெல்வியே ஹலாலாகப்புசிக்கப்பட்ட வஸ்துக்களில் ஈரலோடு ஒன்றித்திருக்கும் படியானபிஸ்மில்லா மாங்காவென்கிற தாமரைக்காய்க் குள்ளிருக்கிற இரத்தம் ஹறுமாயிருக்கும். ஆகையாலுடனே யதையறுத்து அவ்விரத் தத்தைப் போக்கி விடுகிறது கடமையாயிருக்கும் பெண்ணே.

வல்லி ஸவால்-மசலா.

மூத்தானரெத்தினப்புயத்தரசேகேளு முக்தாதுபிந்தாது
யார்க்குமொருகொடி யெத்தலம்போனாலுமுற்றதுணைபோல
இருக்கும்பிறக்கு மப்போதான்றுய்வந்திடும்
ஏதென்ன சொல்வீர் சொல்லாவிட்டால் காலுன்னைக்கொல்வேன்

வ-ம். ஆனால் கேளுமிராஜகுமாரனே அல்லாஹுதஆலாவால் சிருஷ்டித்தசகலஜீவஜெந்துக்களுக்கும் ஓர் கொடிபிந்தாதுமுந்தாது வந்ததுவும் அதினின்னதென்றுசீக்கிரமாய் சொல்லவேண்டு மிராஜ குமாரனே.

அப்பாஸ் ஜவாபுமசலா.

சொல்லுகிறேன்றிப்போசொல்லும் பரிமள கொங்கைமின்னேமாது
ரஞ்சிதமேகேளும் எல்லவர்க்குமாதி வல்லவன்முன்னு
னெழுத்தின்படியே பொருந்துமவுத்தது
இன்னமுமுன்டோமசலாவைப் பெண்ணேசொல்லென்றான்.

வ-ம். ஆனால்கேளும் பெண்ணே ஞானலங்கிர்த வல்லியேநீ சொல்லிய மசலாவின்பொருள் அல்லாஹுதஆலாவால் நியமிக்கப் பட்டமரணமாகிய மவுத்தாக இருக்கும்பெண்ணே.

வல்லி ஸவால் மசலா.

எத்தனையுத்தாலி சொத்தமாய்க்கட்டுவேன்
உம்மையென்றேசொல்லும் செம்மலரேகேளும்
அந்தமாய்த்தன்னை தந்திரமாய்சொல்லியே
அவர்கள்கரகத்தில் புகுந்தவரெவரென
அன்புடன் சொல்வீர்சொல்லா விட்டால் தென்பாகக்கொல்வேன்

வ-ம். ஆனால்கேளு மிராஜகுமாரனே அல்லாஹு த்தஆலாவால் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கிறக்கிய திருக்கலிமாவைச் சொன்னவர்களா யிருந்தும் நரகம்புகுந்தார்கள் அவர்களின்னாரென்றுசொல்லவேண்டும் இராஜகுமாரனே.

அப்பாஸ் ஜவாபு மசலா.

சொல்லுவதென்னை நீ நல்லாகவுன்னை நான்
கொட்டுமுழக்குடன் கட்டுவேன்றுலிநான்
எல்லோருங்காண அல்லாவொருவன்றன்
னின் பக்கலிமாவை தென்பாயுரைப்பார்க்க
னைகூதிகளவர்தான் நரகத்திற்புகுதுவரவர்தான்.

வ-ம். ஆனால்கேளும்பெண்ணே அல்லாஹுத்தஆலாவால் நபி நாயகமவர்களுக் கிறக்கிய கலிமாவையும் நபிநாகமவர்களையுமுண்மைக்கொண்டும் மேற்படிகலிமாவையும் நபிநாயகமவர்களையும் விஸ்வதிக்காமையால் யெஹூதிகள் மெய்சொல்லி நரகம்புகுந்தவர்களாக இருக்கும் பெண்ணே.

வல்லி-விருத்தம்.

கட்டியே அணைவேனென்று காதலாயுரைத்தமன்னா
வெட்டியேகாளையுன்னை விடுகிறேன்பயப்படாதே
சட்டமாய்காளைநீயும் சூரியனுதயத்திற்கு
திட்டமாய்வருவாயென்றே திருமணைக்கேகினாளே.

கிழவி-விருத்தம்.

உலகெலாம்புகழவந்த வுயர்பதியரசேகேளாய்
நிலவுபோல்வதனவல்லி நிகழ்த்தியமசலாக்கெல்லாம்
நலமதாய்ப்பொருள் விடுத்தீர் நங்கையுமதிமயங்கி
பெலமெலாங்குறைந்துவுன்னுட் பேதைபோல்சிக்கினாளோ.

சபை விருத்தம்.

அரசருக்கரசாய்வந்த வருள் துரையப்பாஸென் போர்
விரிகதிர்மதியம்போலே மேவுமண்டபத்தின்மீது
தருகானிருக்கும்போது தடமுடிவேந்தாவேந்தர்
விரசுடன்வந்துயெங்கு மேவியேயிருந்தாரன்றே

வல்லி ஸவால்-மசலா.

[ஞானவல்லீ
அறிந்திலையோவென்றபோது அதிகமோகமாகிச் சொல்வாள்-வல்லி
சிறந்தொறுத்தன் ஆடறுத்து தின்னயெனமனத்தனிலேவைத்து
புறத்தெறுவைப் போய்வருமுன் புசிக்கஹறுமாச்சுதது மன்னா
மறந்தவனின் மனைவிக்குமே வதுக்கஹறுமாச்சு ததுமன்னா எந்தன்
[மன்னா

வ-ம். ஆனல்கேளு மிராஜகுமாரனே ஒருவன் தன் வீட்டினிட மாய் ஓர் ஆட்டை அறுத்துப் போட்டுவிட்டு கடைத் தெருவிற்குப் போய் திரும்ப தன் வீட்டிற்கு வந்தபோது அவனுக்கு அந்த ஆடு புசிப்பதற்கு ஹறாமாகிவிட்டது. அதனபின் அவ்லாடு அவன் பெண் சாதிக்கும் புசிக்க ஹறாமாகிவிட்டது. அதன் விபரத்தை இன்னவை யென்று சொல்லவேண்டு மிராஜகுமாரனே.

அப்பாஸ் ஜவாபு மசலா.

சொல்லக்கேளா யாடதனை மறுக்கு முன்னே காபிரவன் பெண்ணே
யெத்தன் கண்ணே யெல்லைவிட்டு யெழுந்ததற்பின்
இஸ்லாமிலாகினவன்றனே கிளிமானே
நல்லநல்ல தின்னஹறா காரியும்பின் னிஸ்லாமிற்றனே யடிமானே
புக்கினதாலவள் தனக்கும புசிக்க ஹறாமாச்சுவென்றன் பெண்ணே.

வ-ம் ஆனல் கேளும் ஞானலங்கிர்த வல்லியே ஒருவன்புத்தை வணங்கிய காபிரா யிருந்தபோது அவன் புசிக்கிறதற்காக ஆட்டை யறுத்துப் போட்டுவிட்டு கடைக்கு போனான். அவ்விடத்தில் நமக் குரிய தீனில் இஸ்லாம் மார்க்கத்திலாகி மேன்மை தங்கிய கலிமா வைச் சொல்லி இஸ்லாமாகிவிட்டு தன் வீட்டிற்கு வந்தபோது அவ் வாடு அவனுக்கு புசிக்க ஹறாமாகிவிட்டது. தான் இஸ்லாமாகி விட்ட செய்தியைத் தன் பெண்ஜாதிக்குத் தெரிவித்த மாத்திரத் தில் அவளும் இஸ்லாமாகி விட்டபடியால் அவளுக்கு மவ்வாடு ஹறாமாகி விட்டது பெண்ணே.

வல்லி ஸவால் மசலா.

பொன்னின்மலை சேர்புயனே இன்னமொரு மசலாக்கேள் மன்னா
கன்னியர்திலதமான யென்னை வெல்லவந்தமதி மன்னா
பின்னிய புவியிலொருத்தன் பிரபலமாயைந் தொழுதுமன்னா
உன்னிய தொழுவதன்றான் பின்னரகம் புகுந்தான் சொல்மன்னா

வ-ம். ஆனல் கேளு மிராஜகுமாரனே உலகத்தில் ஒருவன் பிரபல்யமாக வேதகட்டளையாகிய பறுல், சுன்னத்து, நபில், வாஜிபு, முஸ்தஹபு. முதலிய தொழுகைகளை நியமமாகத் தொழுது வந்தவரா யிருந்தும் பெருநரகம் குடிபுகுந்தார் அதன் விபரத்தை சொல்ல வேண்டும் இராஜகுமாரனே.

அப்பாஸ் ஜவாபு மசலா.

நரகம் புகுந்தானென்று சிரமசைத்து அதட்டிக் கேட்கும்பெண்ணே
அரியபெரியவனை யருமையுடன் வணங்கையிலே பெண்ணே
உருவமில்லா மிறைதனையே யிணைவைத்து
வணங்கியதாலெரி நரகம் குடிபுகுந்தானடி பெண்ணே.

வ-ம். ஆனால் கேளும்பெண்ணே அஞ்சொகுத்துத் தொழுது வணங்கிய ஒருவன் நரகம் குடிபுகுந்த விபரமாவது, அவன் அல்லா ஹுத ஆலாவை ஒன்றுபடுத்தி வணங்காமல் இணைவைத்து வணங் கிய படியால் அவன் நரகம் குடிபுகுந்தான் பெண்ணே.

வல்லி ஸவால் மசலா.

புகுதுவா னென்றுரைத்த மிகுதவத்தோர் மதிக்கின்ற மன்ன அகமகிழ்ந்தே ஓர் மசலா யறைகிறேனதன் பொருளைசொல்வாய், உலகமதிலொருவன் பொல்லாப் பகைபாவஞ் செய்தகொடும்பாவி, புகழ்பெறவே பொன்னூர்ப் புகுந்தவகை விபரமதாய்ச் சொல்வா யென்றாள்.

வ-ம். ஆனால்கேளும் இராஜ குமாரனே ஒருவன் வேதவிலக் கான பஞ்சமா பாவங்களையுஞ் செய்த கொடும்பாவியா யிருந்து மேன்மைதங்கிய சொர்க்கம்புகுந்தபடியால் அதன்விபரத்தை இன்ன தென்று விபரமாக சொல்லவேண்டு மிராஜ குமாரனே.

அப்பாஸ் ஜவாபு மசலா.

விளங்கிடவே சொல்லுமென்ற வீருடைய தார்முழுக்கின்பெண்ணே
இறைவர் மெச்சமிளவலுன்னை வெல்லுவே கீபாராயடி பெண்ணே
வளம்பெருமுலகித் பாவமளிவதும் தவுபாவாலேகண்ணே
இளவல்தௌபாசெய்ததினால்யின்ப சொர்க்கம்புகுந்தாரடி பெண்
[ணே

வ-ம்; ஆனால்கேளும் பெண்ணே பாவஞ்செய்தவர்கள் மீண்டு கொள்ளும்படிக்கு அல்லாஹுத்தஆலா தௌபாவுடைய வாயல் திறந்து வைத்திருக்கிற படியால் பாவங்களைச் செய்தவர்கள் தௌபாச் செய்து மீண்டு கொண்டதனால் சொர்க்கஞ் சேர்ந்தார்கள் பெண்ணே.

வல்லி ஸவால் மசலா.

தாரணியி லரசுசெய்யும் தார்வேந்த ரப்பாஸே கேளாய்த்தான்
தாய்வயிற்றில் பிறக்குமுன்னே தாரணியில் வந்தார் மன்ன

வ-ம். ஆனால்கேளு மிராஜகுமாரனே தன்தாய்வயிற்றில்நின்றும் பிறக்குமுன்னே இவ்வுலகத்தில ஒருதரம்வந்தவர்க ளின்னாரென்றும் விபரமாகச் சொல்லவேண்டு மிராஜகுமாரனே.

அப்பாஸ் ஜவாபு மசலா.

மன்னவனே சொல்லுமென்ற மங்கையர்களிங்கிர்தமே கேளாய்
மன்னர்புகழ் நபிமருகர் மானிலத்தில் அலியும்வந்தார் பெண்ணே.

வ-ம். ஆனால்கேளும் பெண்ணே இராஜ செல்வியே நபிமுஹம் மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களின் மருகராகிய அல்லாஹுத்தஆலா ஷறுகப்புலியாகிய அபீதாலிபின் செல்வ மகளு

லிய அலிறலியல்லாஹு அன்ஹு அவர்கள் தாய்வயிற்றிலிருந்து பிறக்குமுன் அல்லாவினுடைய ஏவலின்படி இவ்வுலகத்தில் ஒரு தடவை வந்து இபுலீசினமக்களில் ஒருவனுகிய காமாயென்பவனைப் பிடித்து அவனின் சுற்பெருவிரல் இரண்டையுஞ் சேர்த்துக் கட்டிவைத்துப்போனுர்கள் பெண்ணே.

சபை-விருத்தம்

வல்லமையாகவும்மே வல்லிசொல்மசலாவெல்லாஞ்
சொல்லினலப்பாஸென்னும் தோன்றலும்சொல்லக்கேட்டு
மல்லணிப்புயத்தின்றேச மன்னர்மந்திரிமாரெல்லாம்
கல்வியின்கடலோயிந்த காவலனென்றுஞ்சொல்வார்.

வல்லிசொல்-விருத்தம்

மயிலேநீயென்றுசொன்ன மன்னனே யின்னஞ்சொல்வேன்
தயிரியமுடனேயிந்தத் தார்வேந்தர் மெய்ப்பதாக
வியப்பில்லாமன்னுயிந்த வேந்தர்கள்முன்பதாக
நயமுடன்பொருளைச்சொல்லி ஞாயமாய்வென்றுகொள்வீர்.

வல்லி ஸவால்—மசலா

என்றபின்னுமோர்மசலாஇருவரோருவீட்டினுள்ளேமன்னுஅப்போ
சென்றுகதவடைத்திருக்க செய்குவந்து அக்கதவைதட்ட
வென்றிகொடுத்தானுமந்த வெள்ளாட்டியுடன் நடந்தகூவ இப்ப
லாக்குச்சொல்வேன் இனிக்கதவைதிறவுமென்றுர் செய்கு [வுந்த

வ-ம். ஆனல்கேளுமிராஜகுமாரனே ஒருஷெய்கு வெளியிலிருந்து வந்து தன் வீட்டுக்கதவுசாற்றியிருக்கக்கண்டு அக்கதவை தட்டினர். அப்போது அந்த ஷெய்குடைய பெண்சாதியும் அவருடைய வெள்ளாட்டியுமாக ஜவாபு கொடுத்தார்கள். அச்சத்தமிருவருடைய சத்தமாக இருந்தபடியால் நீ கதவைத்திறந்தாலும் திறக்காவிடினும் நான் உன்னைத் தலாக்குச் சொல்லிப்போடுவேனென்று சொன்னர். அத்தலாக்கு முறிச்சலாகாமல் கதவைத் திறக்கவேண்டுமென்று சொன்னர்கள். இதின் விபரத்தைச் சொல்லவேண்டு மிராஜகுமாரனே

அப்பாஸ் ஜவாபு-மசலா

திறவுமிதுமசலாவைச்செப்புமன்னுயென்றவுடன்பெண்ணேஅப்போ
அறிவுடைய மன்னன் சொல்வான் அரிவைதன்னின் அடிமையானதாலே
முறிகிழித்தபடியடிமை மொழியவுந்தன் ஒண்ணுதுபெண்ணே அந்த
செறிகதவைத்திறப்பாளா கில்தலாக்கவட்கு முறியாதுபெண்ணே

வ-ம். ஆனல் கேளும் பெண்ணே ஷெய்குடைய பெண்ஜாதியும் வெள்ளாட்டியுமாக ஜவாபு கொடுத்தபடியால் பெண்சாதி அந்த அடிமையுடைய முறிச்சீட்டை கிழித்தெறிந்துவிட்டு வந்துகதவை

திறந்தபடியால் அந்த வெள்ளாட்டியும் பெண்சாதியாகி விட்டதால் அவ்விருவருக்கும் தலாக்கு முரியாது பெண்ணே.

வல்லி ஸவால்-மசலா.

மன்னவனே நான்சொன்னமாமசலாவுக்கு உன்னிதமாய்ப்பொருள்
சொன்னீரொப்புக்கொண்டேன் வின்னமில்லாப்பிள்ளைபங்கு
விபரத்தைவேந்தனேநீர்சொல்லி வேற்றிகொள்ளவேண்டும்
வெல்வீர்தானே வெல்லாவிட்டால் கொல்லுவேனுனே

வ-ம் ஆனால்கேளு மிராஜனே புருடன் பெண்சாதி இருவருங் கூடி பிறக்கும் பிள்ளையினின்றுந் தாய்தகப்பன் முதலியவர்களுக் குண்டாயிருக்கும் பங்கு விபரத்தைச்சொல்லவேண்டு மிராஜ குமாரனே.

அப்பாஸ் ஜவாபு மசலா

கொல்லுவேனுனென்றசொக்கையினம்பசுந்தங்கமேநான்சொல்வேன்
பங்குரு, வல்லவன்க்காசொல்லால்மிகுத்திடும் தந்தைக்குநான்குபங்கு
தாய்க்கு நால்பங்கு நபிக்கு நால்பங்குமே திறத்துடன் சொல்வேன்,
பெண்ணே கண்ணே துதிக்கவேசொல்வேன்.

வ-ம் ஆனால்கேளும் பெண்ணே நீ கேட்கப்பட்டபங்கு விபரமானது அந்த பிள்ளையைத் தகப்பனுடைய நுதுபாவினின்றுந் தாயுடைய கர்ப்பக்குவளறையில் பிள்ளையாக வுண்டுபண்ணிய சர்வ வல்லமையுடைய அல்லாஹு தஆலாவிற்குபங்கு ஆறும் நபிமுஹம் மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு பங்கு நான்கும் நபி ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்களுக்கு பங்கு நான்கும் தன் தகப் பனுக்குப் பங்கு நான்கும் தன் தாய்க்கு பங்கு நான்கும் இபுலீசு லயீனுக்குப்பங்கு நான்குமாகயிருக்கும் பெண்ணே.

வல்லி-ஸவால் மசலா

கேளென்றமன்னுமுன்கேட்டிடும்பங்கிற் நீள்சபையோர்முன்னே
நீர்வகையாகவேவாளாற்பிளக்குமுன் பங்குவிபரத்தை
வன்மையுடன்சொல்லிக் தன்மையாய் வெல்லுவீர்
சொல்லுவீர்முன்னால் சொல்லாவிட்டால் கொல்வேன்மன்னா.

வ-ம். ஆனால்கேளு மிராஜகுமாரனே நீசொல்லியபங்குவிபரம் சரியேயென்கிலும் இன்னின்னருக்கு இன்னின்னதென்று அதில் விபரத்தைப் பிரித்துச் சொல்லவேண்டும் மிராஜகுமாரனே.

அப்பாஸ் மஸலா.

தப்பிதமில்லாத வொப்பிலான்பங்கு உதிப்பு நினைப்புபார்வை கேள்வி மூச்சு, இப்புவிதன்னிலேபேச்சுமுன்னருவே தாய்தந்தை பங்கும் நம்பியவர் பங்கையும் இப்பவேசொல்வேன் சொல்லியுன்னை மெய்ப்புடன்கொள்வேன்.

வ-ம். ஆனால் கேளும்பெண்ணே நான்சொல்லி வந்தபங்கினுடைய விபரமாகிறது உதிப்பு நினைப்பு பார்வை கேள்வி, மூச்சு, பேச்சு, இவ்வாறும் அல்லாவுடைய பங்காகவும் தோல், சௌவு, தசை, நரம்பு, இந்நான்கும் தகப்பனுடைய பங்காகவும் மாமிசம் இரத்தம் மூளை எலும்பு இந்நான்குந்தாயுடைய பங்காகவும் முஹம்மதாபி யவர்களுடைய பங்காகிறது ஷரி அத்து தரிக்கத்து ஹகீகத்து மகரி பத்து இந்நான்கு பங்காக யிருக்கும். றூஹூ றூஹானி நிஸ்மு நிஸ்மானி இந்நான்கும் நபி ஆதமுடைய பங்காகவும் பொய், புரம் கோள் ஹவா நபுஸ் இந்நான்கும் இபுலீசுடைய பங்காகவு மிருக் கும் பெண்ணே.

அப்பாஸ் இன்னிசை.

கொல்லுமதங்களெங்கே தடியுமெங்கேமடமயிலே
வெல்லுமதங்களெங்கே வீரெங்கேவல்லியேகேள்
வுன்மசலாயிம்மட்டோ வாய்வெட்டோமற்றுமொரு
நன்மசலாச் சொல்லுகிறேன்கேள் நங்கையரேயிங்கிர்தாய்

வ-ம். ஆனால் கேளும்பெண்ணே அதனுடைய மதங்களாக மசலாக்களெல்லாம் இம்மாட்டோ இன்னமுளதோ இராஜராஜாக் கள் சூழ்ந்தசபையில் என்னைவெல்வே னென்றமதக்களானவார்த்தை களெணக்கே நீ சொல்லிவந்த மசலாக்களுக்கெல்லாம் நான்பொருள் சொல்லி வந்தபடியால் இனி நானொரு மசலாச்சொல்லுகிறேன் அதின் பொருளை தெரிந்து சொல்லவேண்டும்பெண்ணே ஞான ரத்தினவல்லியே.

வல்லிசொல்-வசனம்

ஆனால்கேளு மிராஜகுமாரனே என் தகப்பனர் சொல்லிய சபதத்திற்கு நான் இளைத்துப்போகப்போகிறதில்லை. இனி நீர் சொல்லப்போகிற மசலாவுக்கு என்னைப்பொருட் சொல்லும்படி நீர்விரும்புகிறபடியால் அந்தப்படியே நீர்மசலாச் சொன்னால் அதற்கு நான் பொருள் சொல்லி வருகிறேன் இராஜகுமாரனே.

அப்பாஸ் சொல் தரு.

சொல்லுகிறேன் கேளென்றுசொன்னதோகையிளமயிலேபெண்ணே
சொரிகுழலின்கருமை விழிசுகிர்தவரிக் குயிலே
வல்லியர்கள் திலதமே என்னாரணமேரதியே பெண்ணே
மதிவலர்கட்டுதியே யென்றன்கிதியேமுகமதியே
எந்தனிருகண்ணியாயிலங்கிய பொற்பாவை பெண்ணே
இனியமொழிதேன்கரும்பே என்துரைகேளன்னமே.

வ-ம். ஆனால் கேளும்பெண்ணே இப்போதுநான் சொல்லி வருகிற மசலாவை நன்றாய் செவிகொடுத்துகேட்டு அதின் பொரு ளைத்தெரிந்து சொல்லும் பெண்ணே ஞானலங்கிர்த வல்லியே.

அப்பாஸ் சொல் மசலா.

தரு கண்ணிகள்.

மன்னவனுமசலாவை வகுத்துச்சொல்வாருணர்ந்து பெண்ணே
வஞ்சியேகேளோரரசன் வாழ்ந்தநகரிழந்து

அன்னையுடன்றந்தையுமா யனேகந்தொலேகடந்து பெண்ணே
அவர்களொருசுரத்தில்வர அங்கையொருமவுத்து

அந்தரசன் தடுமாறியதிர்புகுந்து வெழுந்துபெண்ணே
அதனைவிட்டு வப்புறம்போய் அன்னை தந்தையிழந்து

கந்தரத்தில் வரும்போது கண்டதொரு மவுத்துப்பெண்ணே
கைகொண்டெடுத்தேகிவித்து காட்டிலொருகிணற்றில்

போட்டரசன்வழிகடந்து பிரியமுடகடந்துபெண்ணே
பொற்புரிசைநகர்மீதில் புகுந்துமனமகிழ்ந்து

கூட்டமனுவரசர்கள்முன் கூடியதோர் மவுத்துப்பெண்ணே
கொற்றவனும் அம்மவுத்தில் குறித்த புகழ்வளர்ந்து

புகழ்வளர அகமகிழ்ந்து பிறைவளரவரசன் பெண்ணே
போரவழியில்மூன்று மவுத்தானதையுங்கடந்து

அகமகிழ்ந்துயிம்மசலாயடி யன்னமேதேர்ந்து பெண்ணே
அட்டியில்லாதட்டியே சொல்லரசன் மனமகிழ

சொல்மசலாதன்னையே நீசொல்லி யென்னைநீ வெல்லுவாய்நீபெண்ணே, சொல்லாதே யல்லாதுன்னை வெல்வேன் சபைமுன்னே

வல்லியினமெல்லியபூமானே யிளந்தேனேபெண்ணே
மட்டுமலர்தாலியுன்னை கட்டுவேனுன்றனே.

வ-ம். ஆனால் கேளும்பெண்ணே ஞானலங்கிர்த வல்லியே இப்போது நான்சொல்லிவந்த மசலாவின் பொருளைத்தெறிந்து நீபயன் சொல்லவேணும். அப்படிக்குசொல்லாதிருந்தால் இச்சபையோரறிய உன்னை தாலிகட்டிக்கொள்வேன் பெண்ணே.

வல்லி விருத்தம்.

கட்டுவேன் தாலியென்று காவலன்சொல்லக்கேட்டு
மட்டுவாழ்மாலேமார்பன் வார்குழல்வீறும்பெற்றுக்
கட்டளைகெலிக்குர்ராசன் கன்னியுமயங்கித்தேர்ந்து
அட்டியொன்றுலேமன்னு யறிந்துநான் நாளைச்சொல்வேன்.

வ-ம். ஆனால்கேளு மீராஜகுமாரனே இன்றையதினம் நீர் உம்முடைய விடுத்திக்கேகும் நானும் எனது அரண்மனைக்குப்போகி

றேன். காளையத்தினம் நீர் சொன்னமசலாவுக்குப் பொருள்சொல்லி உம்மைவென்று என்கைவாளினுல் வெட்டிக் கொல்வேனிராஜ குமாரனே.

அப்பாஸ் இன்னிசை.

காளையென்றேசொற்கேட்டு கரபதியப்பாஸ்சொல்வார்.
வேளையிலஞ்ஞூாரரசை வென்றஞானவல்லியுன்னை
காளையானுன்னை வென்றுகட்டுவேன் ருலியிப்போது
சாளையப்படாமலின்று சாற்றுவாய் பொருள்தனையே.

வல்லி விருத்தம்.

மன்னனுமசலாச்சொல்லி மாளிகைவிட்டுநீங்கி
அன்னையாளென்னுமௌவை யாந்தனிலிருக்குங்காலை
என்னநான்செய்வேனென்று ஏங்கியே புலம்பிக்கொண்டு
கன்னியுந்தாதியோடு கலங்கியேயுரைக்கலுற்ருள்.

வல்லிதரு கண்ணி.

என்னடிதாதியிதற் கென்செய்குவேன் இங்கு
இருக்கும் வேதங்களிலும் பொருள்கிடையாதே — என்னடி
மன்னனுரைத்த மசலாவின்பொருளை
மார்க்கமுறைகளெல்லாம் பார்த்தேனிலையே — என்னடி
நெஞ்சமுமஞ்சுதே யிதற்கென்னசெய்வேன் என்றன்
நேரிழையாகிய தாதியென்சகியே — என்னடி
ஞானமுதலானதும் பார்த்தேன் என்பாங்கி
போனவழிகளிலும் காணகிலேன்சகியே — என்னடி
என்கித்தாபுகளெல்லாம் பார்த்தேன் யென்தோழி
இந்தமசலாவிற்குப் பொருள்கிடையாதே — என்னடி
மண்டலத்துள்ளோர் நகைப்பாரேயென்தாதி இந்த
மானக்குறைவுக்கு நானென்ன செய்வேன் — என்னடி
ஐந்துநூாரரசரை வென்றேன்என்தோழி
அன்றுவதைத்திட்ட அதுபாவக்தாளுே — என்னடி.
கண்டபேர்கள் நகைப்பாரே என்பாங்கிமுன்னுள்
கட்டினஆராக்ஷி மணிவீண்போச்சே — என்னடி

இதுவும்வல்லி தரு.

அன்னமே என்னக்கிருச்கு மாறுமையுள்ள தாதியரே கேளாய்மத
ஆனைதனைக்கஞ்சாதநான் பூனைதனைக் கஞ்சிவிட்டேன் பெண்ணே
மன்னர்களையும்தான்வதைத்து வாய்மாபுங்கா ஆயுதமாயிருந்தேன்
வாழையிளக்தண்டுக்கேநான் வாய்மழுங்கிப்போச்சுதடிதோழி[இப்ப

தின்னைமுடனுனஞ்ஞுர்பேர்தன்னை வெட்டியானராசாயிருந்தேன்
தேசமன்னர்தானகைத்து பேசவகையாகினேனேதோழி [இப்ப,
சுத்தமுடன்கானிருந்து வெற்றிக்கொடிகட்டியேகானிருந்தேன் இப்ப
சொல்லவொண்ணு புகழ்படைத்தவல்லவன்னுள் சிக்கினேனேதோழி

இந்தவிதமாய்புலம்பி வித்தையுடனேயெழுந்துசொல்வாள் இப்ப
எந்தவிதமுமவனை சொந்தமாய்நான் வென்றிடுவேன்தோழி
மந்திரிமகளெனவே தந்திரமாய் ஆடைபணிபூண்டு நானு
மன்னனைமோகவருந்தி வின்னமில்லாமசலாவுரையறிவேன்

வல்லி விருத்தம்.

இன்னிலைரூபமாறி யேகவேவேண்டுமென்று
கன்னயமாகவாடை கைபலபணியும்பூண்டு
மன்னவன்சாகைதேடி மந்திரிமகளைப்போலே
உன்னிதமாகவல்லி உருவதுமாறினாளே.

வல்லி தரு.

நடந்தனள்கால்சிலம்புதண்டை நற்பணியுடனே வல்லி
தொடர்ந்தகற்றுய்யசுடற் போற்றுலங்கவேமின்ன

மைக்குழலின்றுடையசை மாதினம்பூபோற்றுமிலும்
மங்கையிடைதுவண்டசைய மெல்லிநடந்தாள்

பக்குவஞ்சேர்கடைவீதி பார்த்துமெள்ளவேநடந்து
தக்கவேயிருக்கும்ராஜன் தன்னைததேடியே

தேடியேபகுவீரண்ணல் செல்வமகளுமைந்து
ஆடியேபம்பரம்போலே ஆனவேஇப்ப

கடும்புலிபோலஹுமதுசா காளைதன்னையேகாண
நெடும்படைபோல்மந்திரவாளும் நீண்டகையேந்தி

படும்பொழுதுவிடியுமுன்னே பாதிச்சாமத்தில்நடந்து
பாவையருங்கிழவிவீட்டை தேடிநடந்தாள்

அன்புடனேதேடியேகா ணரும்பொருளறிவதற்கு
ஆயிழையாளென்று மௌவைவீட்டினில்வந்தாள்

சென்றிடும்பகுவீரண்ணல் செல்வமகளும் கதவை
செப்பமுடனேயடித்து தட்டும்போதிலே

இதுவும் வல்லிதரு.

கண்ணுமன்னன்என்மேல் காதல்கொண்டேன் கோரஸ்செய்ய
நன்னனேமோசஞ்செய்து மாமசலாவெல்லவந்தேன் கண்ணு

வல்லியென்று கேளுந்துரை வாக்குடனே கிழவிமனே
மெள்ளவேயெழுந்துசென்று மாமசலாவெல்லவந்தேன் கண்ணு

தந்திரஉபாயமாகத்தான் மெள்ளநான் கதவைத்தட்டி
இன்னமில்லாமசலாவறிய வேந்தனேநீயுதவிசெய்வாய் கண்ணு

கள்ளியைப்போல்யானும் மெள்ள நீவ யெழுந்துசென்று
வல்லமையுள்ளமன்னன் யெல்லேக்குட் புகுந்துயானுங் கண்ணு

மோகங்க ளாகும்படி மோசமாக வேஷங்கொண்டேன்
வெல்லவேமோகங்காட்டும் பெண்களைப்போல்யானறிந்தேன் கண்ணு

ஆடைபணிகளெல்லா மீடுவைத்த பாவனைபோல்
மூடத்தனத்தினாலே கூடுவிட்ட பட்சியானேன் கண்ணு

நாளைச் சபையின்முன்னே நான் சகிக்கமன்னவனே
கோழையாய்ப் போகமன்னன் கொந்றவனே யுதவிசெய்வாய் கண்ணு

நாடுநகரம்விட்டு நாயனே நான் போகாமல்
தேடிவரும்ராஜரெல்லாம் தேன்மொழியாள்யான்ஜெயிக்க கண்

அட்டாள தேசமெங்கு மிஷ்டமுள்ளராஜரெல்லாம்
தேட்டமாய்வந்து யென்முன்சாஷ்டாங்கஞ் செய்துகொண்டான் கண்

வட்டமதிமுகத்துடைய வாழ்மன்னனை யான்ஜெயிக்க
வெட்டவுதவிசெய்வாய் வேந்தனே யென்னுண்டவனே கண்ணு

இதுவும் வல்லிதரு.

மங்கைக்கரசி ஞானலங்கிர்த வல்லியும் வந்தாள்
இங்கிர்தமான பெண்களெல்லாம் யேந்திவரவே மங்கை

மந்திரி மகளைப்போல தான்ரூபங்கொண்டு
மன்னவனை மோசஞ்செய்ய மங்கையும்வந்தாள் மங்கை

சன்னபின்னலாகப் பணிபூண்டுவரவே
சந்தோஷமாகத்தாதி மனைக்கேகிநடந்தாள் மங்கை

சொந்தமான தாதிப்பெண்கள் சோபமாகியே
வந்தவனை மோசஞ்செய்ய மங்கையும்வந்தாள் மங்கை

கூனுண்டகிழவிவீட்டிற் குறித்தக்கதவை
ஆனகிழவிவந்துத் தானே திறந்தாள் மங்கை

வந்தவளார் யெவரோவென்று வார்த்தைக்கேட்டனள்
சந்தேகமாய்க்கிழவிவந்து சபதமாகினள் மங்கை

பொது விருத்தம்.

உருவதுமாற்றிக் கொண்டு உயர்புகழ்ஞானவல்லி
தெருவினில் வெளியேசென்று தேடியேகிழவிவீட்டை

குருகியே கதவைமெள்ள கூவியேதட்டும்போது
அறிவுள்ளகிழவியாரும் ஆரென்று கேட்கலுற்றார்.

கிழவிசொல் விருத்தம்.

ஆரடியெக்தன்வீட்டில் அர்த்தயாத்திரியில்வந்து
சீரடிகோவகின்றுச் சிறப்புடன் கூவுஞ்சத்தம்
காரிடிபோற்றெனித்துக் காதுகளடைக்குதிப்போ
கூரடியுந்தன் பேரை குறிப்புடனெனக்குத்தானே.

வல்லி விருத்தம்

ஆரென்று கேட்குமெக்தன் அம்மைப்பேர் சொல்லக்கேளாய்
சீருள்ளமந்திரியீன்ற செல்விகரனாசன்மீது
பார்பெரும் மோகங்கொண்டு பார்க்கவே வந்தேனிப்போ
கூர்விழியாளேயின்னம் கூவியே யுரைக்கின்றேனே

கிழவிகட்டளைக் கலிப்பா.

அர்த்தராத்திரி வேளையிலே மிகநித்திரை செய்யும்போதினில் சுகக், தந்நியேமோக முற்றியேவந்திடும் பத்தினிப்பெண்ணே பேயோவறிகிலேன், கற்றவத்தினன் மந்திரிமகளென்றாய் நந்துதே பயஞ்சித்தமுறுகுதே, கர்த்தன்மேற் பாரஞ்சாட்டிக் கிழவியும் கதவைவிட்டிடக் கண்டனள் கோதையே.

வ-ம். ஆனால்கேளும் பெண்ணே மந்திரிமகளே இந்த அர்த்த ராத்திரி சாமத்தில்வந்து என்வீட்டின் கதவைத்தட்டி என்வீட்டி லிருக்கிற இராஜகுமாரன் மீது ஆசை மோகங்கொண்டு வந்ததாய் சொல்லுகிறாய் ஆகிலும் நான் சொல்லிக்கொண்டு வருகிறேன் கேள் மந்திரிமகளே.

கிழவிக்கும் வல்லிக்கும் தர்க்கம் தரு.

ஆசைகொண்டேனென்று சொன்ன அன்னமே நீ கேளாய்
தேசபுகழ் ராஜனிடம் சென்றுரைப்பேனுனே
வல்லி ... நீ இங்கே ... மன்னவனிடஞ்சென்று-வுந்தன்
வாய்மொழி ... வாக்கறிந்துவாறேனை.

வல்லி.

வாக்கறிந்துவாறேனென்ற வம்மையம்மைக் கேளாய் அடி
வாடிமையலாகுதடி மன்னவன்றன்மேலே
தாக்கரியாக் காமந்தலை போக்குதடிதாயே-மன்னனை
தானணைய வேணுமென்று தாகமீறிவந்தேன்.

கிழவி.

தாகமென்ற சொல்லறிந்த தாய்க்கிழவி சொல்வாள்-நல்ல
தம்முடைய வாய்மொழியைத் தானவர்க்குச் சொல்லி

மோகமதாய்மந்திரியீன்ற மொய்குழலேகேளாய்-அந்த
மோகனப்பாஸிடத்தின் மொழிந்துவருவேனென்.

வல்லி.

வருவனென்றசொல்லறிந்த மந்திரிப்பெண்சொல்வாள்-அந்த
தருகானப்பாஸவரைத் தானணையவேண்டுமம்மே
கருவிழியாளானதொரு கன்னியிளமங்கை நல்ல
சுருதியாய்க்கிழவியிடஞ் சொல்லியுரைத்தாளே.

வ-ம். ஆனால்கேளும் அம்மையே நான்வந்து அதிகமோகமாகிறது எந்தவிதமுமந்த இராஜகுமாரனிடம் நான்போய்ச்சேரும்படியான முயற்சியை நீ செய்யவேண்டுமம்மையே.

கிழவிவசனம்.

ஆனால்கேளு மந்திரியீன்றமகளே நான் அந்த இராஜனிடத்திற்போய் யென்னாற்கூடியவரையிற்சொல்லி அவருடைய மனதையறிந்து வருகிறேன். அதுவரையில் நீ இவ்விடத்தில் தானே யிரும் பெண்ணே மந்திரிமகளே.

கிழவி அப்பாஸுக்குச் சொல் வசனம்.

ஆனால்கேளு மிராஜகுமாரனே நானும்மிடத்தில் ஒருகாரியம் சொல்லவந்தேன். தம்முடைய உத்திரவானால் சொல்கிறேன இராஜகுமாரனே.

அப்பாஸ் வசனம்.

ஆனால்கேளும் யென்தாய்க்குநிகரான அம்மையே நீயோடிவந்த காரியமின்னதென்று விபரமாகச் சொல்லவேண்டும் அம்மையே

கிழவிசொல் தரு.

அருள்வளரும் பொருள்வளரும் நல்லஅரசர்நிரைமிகவளரும்
திருவளரும் அஹமதுசாபெற்ற செல்வதுரையப்பாஸே.
ஞானமவளர்மானம்வளர் இன்ப நாதம்வளர்கீதம்வளர்
தினவளர்செங்கோல்செய்யு நல்ல திவ்வியபுகழப்பாஸே.
உள்ளமிறைமையைமறவா அஞ்சொகுத்தும்வணக்கமறவா
அன்விலேவேலஹமதுசா பெற்ற வருமைத்துரையப்பாஸே.
வந்தேனிப்போவும்மிடத்தில ஒரு வளமைசொலப்பயந்திருந்தேன்
எந்தன்முகம்பாருமிப்ப நாமென் றியம்புகிறேன்கேளுமிப்போ.
இந்நகர்மந்திரிமகள் யிந்தமீனையாளக்கநிகம்
கொந்துலவும்பூங்குழலாள் யவன் கொங்கைமின்னாள் தங்கமேனும்.
பூரணமாமதிமுகத்தாள் மதனபோகமுள்ளசயபுகத்தாள்
தாரணியில்மதிமுகத்தாள் தங்கள்சமுகமதேர்சனை நினைத்தாள்.
நினைவைமறக்காதெழுந்து யிந்த நேரிரவிற்றானடந்து [வாள்,
மனமகிழ்ந்து யிங்குவந்தாள் உள்ளே வரச்சொன்னாலிப் போவரு

அரசேகேளிதுசொலபயக்கேன் சொல்லியறிவேர மென்றுபின்பகர்ந்தே
உரைசெயுமிக்கேவரவே தடியூன்றியகிழவிசொல்வாள்.

அப்பாஸ்தரு.

சொல்லியவாய்மூன்னே கிழவி தொனித்திட அப்பாஸரைப்பார்
கல்லதல்லவனைக்கிதெல்லாம நீகாடிவந்துசொல்வதெல்லாம்.
காடிவந்தேன்மன்னிரசு பருவீரன்மகளதலைக்கண்டு
பாடிவந்தாசலாவெனறு அவனென்பரியென்றுதாலிகட்டி.
தாலிகட்டிவந்தபின்போர் தையல்புகபாரமதல்லால் [தேன்
வேலைவெட்டிவான்காண்பங்கை தெய்வமின்னென்றுஆய்பொருக்
நாயுமே கீர்த்தைதயுமநீ என்று தானினைத்தேனவிளுரைத்தாய்
அகல்லியென்றப்பாஸ் சொல்லகிழவியடுத்தடுத்து பின்னுஞ்சொல்
அஞ்சியஞ்சிகிழவிநின்று யடிபணிந்துசொலவதற்காய் [வாள்
செஞ்சுடர்வேல்காத்தப்பாஸ் மிக்தசெய்தியறிவோமெனவே
நல்லதின்கேயழைமெனவே சொல்லநகைரச்சிழவிமனமகிழ்ந்ததே.
வல்லிவனர்வீரசன்பெற்ற கன்னிமுன்னே செப்பினனே.

கிழவி வல்லிக்குசொல் வசனம்.

ஆனால்கேளும் மந்திரிமகனே உனக்காக அந்த இராஜகுமாரனிடத்தில் அநேகமாகமன்றாடி கேட்டதின்பேரில் உன்னையழைத்து வரும்படிக்கு உத்தரவுசெய்தார். ஆகையால் உன்னேவாருமம்மா,

வல்லி விருத்தம்.

செப்பியமாற்றங்கேட்டு நிரோசமுப்பூரித்தோங்கி
வொப்புடன்மசலாத்தன்னை உபாயமாய்வெல்வேரமென்று
மைப்படுங்குழலிதானுமன்னவனருகிற்செல்ல
மெய்ப்புடன்வருகும்போது மேன்மையப்பாஸுங்கண்டார்.

அப்பாஸ் விருத்தம்.

ஆரடிபெண்ணேநீதான் யழகுளமாதேகேளாய்
சீருடனடக்துயிவளே சிறப்புடன்வந்தரேது
கேருடன்கினைத்துவந்த நினைமனையயென்றனக்கு
கூருடன்பயப்படாமற் குறிப்புட னுரை செய்வாயே.

வல்லி விருத்தம்.

வந்தவளுயாரோவென்று வண்மையாய்க்கேட்குமன்னா
இந்தவூர்மந்திரீன்ற வியல்பெறுமகள்யான்கண்டீர்
எந்தகலமோகமீறி யிருட்டிரவதனில்வந்தேன்
அந்தமாயென்னைக்கூடி யணைகுமபின்னனுப்புவீரே.

அப்பாஸ் விருத்தம்.

அணைந்தபின்னனுப்பு மென்ற வன்னமேசொல்லக்கேளாய்
வனைந்தங்குமரசர்கோமான் கனதவத்தின் றமக்கை

அணைத்தபின்மற்ருேர்மாதை பருகியேயணைவதல்லால்
இணங்கியேயுனையச்சேரேன் யேகுவீர்மந்திரிமாரே.

வல்லி விருத்தம்.

எந்தனல்லழகைக்காண விளிதுடன்ஞானவல்லி
சுந்தரமுடையபெண்ணே தோனறலேயெனையிப்ப
விந்தையாயெனைக்கூடி மேவியேயனுப்பரவிட்டால்
சந்தநல்லரண்மனைக்கே யேகியே போகமாட்டேன்.

அப்பாஸ் விருத்தம்.

வஞ்சிரஞ்சிதமேமானே மந்திரிமகளேதேனே
கொஞ்சியமொழியுமுந்தன குருபவையினஸ்தனமுங்கண்டு
மிஞ்சியேகாமவெள்ள மீறதேயிதற்கெனசெயவேன்
செஞ்சமுமுகிழக்கெஞ்சி நேசமாயணைவோமபெண்ணே.

வல்லி விருத்தம்.

நேசமாயணைவோமென்ற நிருபர்கோன்சொல்லக்கேளும்
வாசமாய்வல்லியாட்கு வகுத்திட்டமசலாத்தன்னை
பாசமாயதின்பொருளை பகர்க்துநீரெனக்குச் சொன்னுல்
மாநிலாமனமகிழ்ந்து மருகவேவருவேன்மன்னே

அப்பாஸ் தரு.

மாட்டேனென்றுசொல்லுமெந்தன் மங்கைமந்திரிபெண்ணே
கேளாய் சொல்லக்கேளாய் நீயும்
தேட்டமுடன்வந்து யென்னைச் சேர்ந்தணைந்துபின்மசலாப்
பொருளை மசலாப்பொருளைதானும்
தீட்டியவுரைப்பேனென்று சென்றுமப்பாஸராசனுரைத்
தாரேவுரைத்தாரே

வல்லி தரு.

சென்றுமப்போதுரைப்பேனென்ற செங்கோல்புரிமன்னவனே
கேளீர் சொல்லக்கேளீர் உந்தன
செய்கதைக்கிப்பொருளறிந்து சேர்ந்து வுமமையணைத்திடுவேன்
மன்னு யெந்தன மன்னு.

அப்பாஸ் தரு:

அணைக்திடுவேனென்றுரைத்த யறிவுடையமந்திரியின்ற
மாதே-யீன்றமாதே-மானே
யணைத்தபினகதைக்குப்பொருள் அன்புடனேயாதுரைப்பேன்
பெண்ணே யெந்தன்கண்ணே

வல்லி தரு.

தேவர்களுக்தானறியா தென்மனத்தைநீரறிந்துக்
சொன்னும் அறிந்துசொன்னாலும்

செப்புமொழிதான்மறந்தால் தப்பிதம்வருமல்லவோ
மனாளுமெய்த்தனமனாளு

அப்பாஸ் இன்னிசை.

தப்பிதம்வருதுவென்றந் தையலரேகேளுமிப்போ
இப்புவியிலெங்கெங்குசொல்லால யேமாந்தரசரெல்லாம்
தப்பிமோசம்போனதுண்டு தார்குழலேயானறிவேன்
வெப்பியேநீசொல்வதெல்லா மொருபோதுமயங்கிலேனே

அப்பாஸ் விருத்தம்

கூறியமாலாவுக்குக் குறிப்புடன் பொருளறிந்து
சீருடனணைவேனென்ற சேயிழையாளேகேளாய்
மீறியகாமவெள்ள மிஞ்சுதேதாளேன்கேளேன்
காரிருள்கூந்தலாளே கட்டியணைவாய்பெண்ணே.

தரு.

மலரேபுலரேமதியுற்றதுவுமது
விதமேசதமேவிழிபெற்றமுசுக்க
மயிலேகுயிலேமருவத்தருணமிது
வியலாவியிலாயெனமுத்தமிடமான
வினோவாய்மனவாய் நீயுமணையமோகத்தரவே
வருவாய்சரசக்கிளியின்மொழி
அன்னமேசொர்ணமே யமுர்தக்கருணைவிழி
மதியோநிதியோ வடிவுரமகிபதி
பெண்ணேமணவாய் யெத்தனிதமூர்பெண்ணே
மெல்லியேவல்லியே பேசுங்கிளிமொழியே
இனியோவினியே யின்பத்தேன்கனியாதே
தையலேமையலே தாளவசமல்லவே.

வல்லி-தரு.

சந்திரசுந்திர சுகிர்தமதனலீலா
விந்தையாய்சிந்தையாய் விளங்கும்பொருளுரைப்பீர்
தந்திரமிந்திர தானுரையும்பொருளை
முந்தவேசிந்தையாள மோடிசேராமல்சொன்னால்
உந்தனைவிந்தையா யுனக்குநேசியணைவேன்
சொந்தமாயந்தமாய் சொல்லும்பொருளையிப்ப
வந்துமேமிகந்தகல் வேளையுனையணைவேன்
சிந்தையாய்விந்தையாய் சொல்லும்பொருளதனை

வ-ம். ஆனாலிசெனு மீராஜகுமாரனே நான்தங்கள்பேரில்
காதல்மீழ்வைத்தேனே அன்று கண்கும்மாலாவில்லீல். ஆகையால்யேன்

சொல்லை நம்பி மனதில் சந்தேகம் வைக்காமல் தம்முடைய மசலாவின் பொருளை விபரமாகச் சொல்லிவிட்டு யென்னைச் சேர்த்தணையு மிராஜகுமாரனே.

அப்பாஸ் வசனம்

ஆனாலுமென் பெண்ணே ஞானலங்கிர்தவல்லியே என்னுடைய மசலாவின் பொருளைக் கேட்டுத் தெரிந்துக்கொண்டபின் யென்னை மணமாட்டேனென்று சொன்னால் நான் உன்னை யென்ன செய்யக்கூடும். பெண்மதி கேட்டு அநேகம்பேர் மோசம்போனதுண்டு. பெண்மதி கேட்கவேண்டாமென்று ஹதீதும் வந்திருக்கிறது. ஆகையால் உன்னை நம்பி என்மசலாவின் பொருளைச்சொன்னால் என்னை மோசஞ்செய்யக்கூடும் நீ சத்தியமாய் யென்னைச் சேர்வேனென்று நீ கை போட்டுத்தந்தால் நான் யென்மசலாவின் பொருளைச் சொல்லிவருகிறேன் பெண்ணே.

வல்லி வசனம்

ஆனாலுமிராஜகுமாரனே யேதோவும்மிடத்தில் மசலாவின் பொருளைக்கேட்டுக்கொண்டு உம்மைச்சேர்ந்து அணையாது மோசஞ் செய்துவிடுவேனென்றும் பெண்மதிகேட்டு அநேகர் மோசம்போனதாகவும் பெண்மதிகேட்கக்கூடாதென்றும் ஹதீது வந்திருக்கிறதாகவும் சத்தியமாய்க்கைபோட்டுத் தரவேண்டுமென்று நீர் கேட்டபடியால் அதுபோல் இதோநான்கை போட்டுத் தந்தேன நீர்சந்தேகம் நினைக்காமல் மசலாவின் பொருளைச்சொல்லி வாரு மிராஜகுமாரனே.

அப்பாஸ் மசலாவிற்குப்

பொருள் சொல்கிற தரு கண்ணிகள்.

சொல்லுகிறேன்கேள் வல்லிளக்கோகைமயிலினமே பெண்ணே
அல்லில்லாவன்னபுகழ் அத்துமாககரை
    அன்னசரில்பொன்முடிசூழ் அதுறமதுலாவரசர் பெண்ணே
    சொன்னமுகில் துன்னை நிகர் ஜலைகாவென்றுமனைவி
மனைவியாசதுமேவோன்றுய்மகிழ்வாகவாழ்கையிலேபெண்ணே
மனமகிழ்வாயதனதரசன் மைந்தனொன்றிலாதால்
    ஆனதினால்வேணதர்மம் அதுறமதுலாசெய்தார் பெண்ணே
    நானபிறந்தேனதாதுக்கு நடராஜுமகனை
நாட்டிலுள்ளோர்கேட்டிடவே நடப்பாரென்றசப்பன் பெண்ணே
சூட்டும்பிணிசூட்டியதால் சூமதுவருந்தி
    மதுவருந்துமசெயலதனை மார்க்கவல்லோர்தானறிந்து பெண்
    மட்டிலாபுகழ்படைத்த மாசனைகளித்து [illegible]

விடுத்துப்பரிநிடத்துடனே நானும்வழிகடந்து பெண்ணே
கடந்துவெகுதூரங்கடக்க காடிதப்புகிருப்ப

அந்தபூன்னசீனகர் வந்துயெதிர்த்ததுவே பெண்ணே
அந்தநகர்வழிதனிலே யிருபுறபூஞ்சோலை

சோலைமரிந்தரில்கூட சுந்தரமாய்ப்பரிகடத்தி பெண்ணே
மஞ்சலவுஞ்சீனகர் மதிலுங்கோட்டைவாயல்

வாசல்வழிதனில்கடக்க வந்தத்தொருகிணைவு பெண்ணே
மூத்தியென்னை நூரரசன் முடிகளையெழுதி

வந்தனுப்புகோமென்று வாடிமனந்தெளிந்து பெண்ணே
கூடிவழிவேறிலதாற் குறித்தபடி கடக்கும்

கோமானைநான்புகழ்ந்து கோன்பதியிற்சென்றேன் பெண்ணே
சென்றுவழிவீதினிற் சிங்கம்போலேகடந்து

மண்டலம்புகழ்சீனகர் மாளிகையுங்கண்டு பெண்ணே
கடந்தேன்வெகுநிடத்துடனே கர்த்தனையும்போற்றி

சுற்றுமகிழ்கோட்டைகளுஞ் சுந்தரமாய்கடந்து பெண்ணே
கடத்திப்பரிதான்தட்டி கனவிரசாய்கடந்து

கடந்தேன்பெண்ணே அரசன் காடியதோரோலை பெண்ணே
சித்தரசன்யென்னைவெட்ட யெடுத்தோலை முன்கிழித்து

கிழிக்குங்குயில்மொழிக்கனிமே கேளடியோர்மவுத்து பெண்
மருந்துவஞ்சேர்தகுத்துடனே வான்பரிமீதேறி

அலங்கரியுமென்குழுவரியதுபோல் பரிகடத்தி பெண்ணே
பரிகடத்திபாதைசெல்ல பலவிதமாய்ச்சோலை

பார்த்துமனந்தான்மகிழ்ந்து பார்த்திபனும்பரிமேல் பெண்ணே
காற்றுவிசையாய்கடத்தி கண்டேம்தார்மூலுக்கு

தோற்றியதுகோட்டைமீதில் தோகையரே கேளும் பெண்ணே
பேரானதிறந்தப்பங்களும் புகழ்கொடியினமரங்கள்

பூத்தமலர்சொரியுங்கோட்டைகாத்திருந்தா ரனேகர் பெண்
பார்த்துவினனகர்ற்சென்றே பலவீதியுங்கண்டு

ஆதிதனையான்புகழ்ந்து யமைந்திருக்கும்ஜாகை பெண்ணே
தீதிலாவம்சமமனி நிட்சயமாய்க்கண்டேன்

கன்னமுலைகவிண்டமாது கன்னிபுத்தன்செய்கைபெண்ணே
மன்றல்புகழ்மன்னவனு மனமகிழ்ந்துதெளிய

தெளிந்தேனந்தமன்னன்பேரு மபக்கமுன்னேவந்தேன் பெண்ணே
[illegible] முன்னே

தானுரைத்தாள் நாமுரைத்தோம் சபைகாணவேபொருளும்
மானுரைத்தா னரசர்பெறும் வானபோல்வடிவுடையாள்
சரிசரியென்றுரைத்தவளே தானரசர்போற்றிடவே
வெரிமிகுத்த தோகைவெட்ட வந்ததொருபவுத்து

கோலமனைக்குயிலே குமிழ்நாசிகையே தடர்ந்து பெண்ணே
கொன்றிடும்வாள் ரெண்டாய்வின சண்ட திருமூனறு
தொட்டமவத் துற்றதுகான் சொல்மசலாயிதுவே பெண்ணே
தோகையென்னைச் சேர்க்கவணைந்து சுகமுடன் சொல்லெனறூர்

வல்லிசொல் கட்டளைக்கலிப்பா.

மன்னமன்னவர் போற்றிடு மன்னனே வழுத்திடும் நீ மசலாவுக்குப் பொருள், கன்னியாம ஞானவல்லியெனுமாது கருதியே பொருள்தானதை சொல்வாளோ, இன்னிலத்திலெவர்களும் சொல்வரோ யேந்தலேநீர் கற்றவுபாயமபோற், பிவனைவாளுமக் கொன்றிருக்திலோமபேசியே சரியோடுநீர் சேருவீர்.

பொதுவிருத்தம்.

இப்படியவளுஞ்சொல்ல யேந்தனு மிதுநினைத்தான்
செப்பமாயிவளுஞ் சென்று சேயிழைதனக்குச் சொன்னல்
ஒப்பிடபொருள்விடுத்து வுடனம்மைக் கொல்வாரெனறு
சர்ப்பம்போ லொடுங்கிநிற்கத் தையலாள் நினைத்தாள்.

இதுவும் கொச்சகம்.

மன்னன்சலித்து மயங்கியிருக்கையிலே
கன்னிஞானவல்லிகண்டு காவலனைப் பார்த்துரைப்பான்
மின்னனுன்வாதைக்கு நானசீக்கிரத்தில் போய்வருவேன்
அன்னது கேட்டபபாஸ் அரிவைமுகம பார்த்துரைப்பான்.

அப்பாஸ் சொல்-விருத்தம்.

பொற்பணி கொணுகுதண்டைப் புடவையோர் தலைப்புத்தன்னை
இப்பயென் கையிறறந்து யேகிநீ வருவாயெனறூர்
ஒப்புத்தன் றுணியிற்பாதி யுடனையே கிழித்துயீந்து
தப்பவே தருணமென்றுத் தையலாள் யேகினளே.

இதுவும கலித்துறை.

வெளியினிற் போய்விட மெல்கிநம்றுநிவிதமறிந்து
கழுவியாசிமுன் வநதிடக் கூட்டிகனயனைபுகுந்தார்
வழிபார்த்திருக்குமன் மன்னனப்பாஸ் வாக்காளுமென்று
பழிகாரிதப்பியும் போயினென்னைப் பதறுவேன்.

அப்பாஸ் புலம்பல்தரு.

மங்கையானென்னை மதிமோசஞ்செய்து
அங்கம் பறக்கவிட்டு ஆவளேகினாளே

தந்திரமாயெந்தன் விந்தமசலாவைச்
சொந்தமாகக்கேட்டு யென்னை மூர்க்கேகினாளே

அர்த்தராத்திரிவந்து சித்தமறிந்து கொண்டு
ஒத்துமனஸதைப்பார்த்துக் கற்பூரகொண்டேகினாளே

ஆதிரிறைவனே யன்னை தந்தை யில்லானே
கோதை மனதிலெண்ணிப் பாதைபோனாளே

நாடுநகரம்விட்டுக் காடு வனங்கடந்து
ஆடம்பரம்போலக் கூடநகர்ந்தேனே

கன்னி மசலாவெல்லா முன்னிதமாய் நான்வென்றும்
என்னை ஜெயிக்கவள் யென்னமோசஞ் செய்தாளே

எப்போது மில்லாமோகம் தப்பிதமாய் வந்தென்னை
இப்போது யென்மனதை துப்புக்கேடாக்கினானே

மன்னர்சூழ் சபையினில் யென்னமாய் வெல்லுவாளோ
கண்ணுமென்மனது யென்னமாகக் குன்றுமோ

வல்லவனே யென்கைக்கீழ் போகாமற் காத்தருள்
இல்லல்லாவென்றென்னு விருத்தக்கிருபை செய்வாய்

பொது விருத்தம்.

புலம்பியப்பாஸ்ராஜன் புத்தியுஞ்சிதறிச்சொல்வான்
தலமதிலெவருமிந்த தையல்போற சதிசெய்வாரோ
கொலையது செய்வாளிந்தக் கோதையினழகுபேச்சும்
நிலைமையு மனதிலெண்ணி நேசமாயுருநூவானே.

தரு.

சொருகு கொண்டைக்காரிப் போனதால்
உருகுதென் மனமினங்கி.
சருவிமலரணைமேல் சரசவார்த்தைகள் பேசி
மருகவருவேனென்ற மாதுமுடித்தமலர்ச்

சரிகை சேலையுடையும் சாறலன்ன நடையும்
உருவினரம்பைத்தொடையுங் கையில் ஒருபிடிக்குளிடையும்
மருகுவேனென்றென்னை மயக்கிப்பொருளைக்கேட்டு
வஞ்சிபோனதென்னு வஞ்சமோசொல்லடி சொருகு

நேர்த்தியானபெண்ணே நீசொன்னவார்த்தைதப்பினய்கண்ணே
பார்த்துவந்துகண்ணேஎனக்குபரிந்து நீகிருலைபெண்ணே
பூத்தமாமலர்மேற்சேர்ந்து கையாலணைத்து
பார்த்துபார்த்துநிதம் கோர்த்துமுடித்தமலர் சொருகு

மந்திரிமகளென்று எனக்குநீவஞ்சகம்செய்தின்று
விந்தைபகுவீரனென்றுபெற்ற வல்லிமகள்நானென்று
எந்தனுடன்சொல்லாமற் சிந்தைசோரயேமாத்தி
தந்திரமாய்ப்போன தையலேயுனையறிவேன் சொருகு

பொது கட்டளைகலிப்பா.

அந்தமஹமது சாகிபுவருளிய வப்பாஸென்னுமரச னியம்புவான், இந்தமாதுகனைக் கொலைசெய்குவானென்று யேங்கியே யெண்ணியிருக்கையில், தந்திரமாய்ப் போன வல்லியுந்தன்மனை தன்னைச் சேரக்ஷணத்தினிலேகியே, எந்தன்கையிற் வசமாகி நானென் னிருக்கையிலெழுந்தனன்வெய்யவன்.

இதுவும் விருத்தம்.

விடிந்தபின்பகுவீரண்ணல் வெகுசனமந்திரியோடும்
அடர்ந்ததோர்கொலுவிற்சேர்ந்து அவர்களுமிருக்கும்போது
சடிதியிற்புரவியேறி சபையிலப்பாஸ்சொல்ல
மடமயில்வராதாலே மன்னவர்தானுஞ்சொல்வார்.

இதுவும்-விருத்தம்.

கேற்றுதான்மன்னன்சொன்ன கேர்மசலாவைமங்கை
சாற்றிடத்தெரியாதாலே தயங்கியேபோனமாது
தோற்றிடுவானென்றெண்ணித் தோகைக்குச்சொல்லியனுப்ப
நாற்றிசையோரும்போற்ற களினமாய்வல்லிவந்தாள்.

இதுவும் கொச்சகம்.

மன்னவன்பகுவீரரசன் மந்திரிதன்னோடிருக்க
தன்னயவப்பாஸெதிரில் நாட்டுத்திரையினுள்ளே
கன்னிவல்லிவந்திருக்க காவலனப்பாஸ்சொல்வான்
என்மசலாவின்பொருளை எந்திழையேசொல்வாயே.

தரு.

அ. மன்னர்மன்னவரையெல்லாம் வதைத்தமயிலாளே
முன்னேநான்சொன்னமவுத்து மூன்றுக்கும்பொருளுரைப்பாய்

வ. உரைத்திடுவேனிக்தவேளை யுறுதியாய்க்கேளரசே
வரிசையுடன்சொல்லுவேனீர் வந்ததைச்சொல்வீரே

அ. வந்ததைகேளொருகுருவீ மையிருட்டிலென் முன்
வந்ததென்மீதிலாசைவைத்து வகையுடனேபிடித்தேன்

வ. பிடித்தனெனப்பேசுகின்ற பேரரசேயிப்போ
அடித்தவாயைதுடைத்ததுபோ லுருள்வதென்னசொல்வீர்

அ. சொல்வதென்னயதனுடைய தோன்றுகாலும்வாலும்
கல்லாயெக்தன்காத்திருக்க நழுவிதப்பிப்போச்சுதே

வ. போச்சுதென்றுசொல்லுகிறீர் புதுமையப்பாஸரசே
காட்சியதாய்மவுத்தின்பொருள் கழறுகிறேன் கேளீர்

அ. கழறுகிறேனென்றுசொன்ன காரிகையையிப்போ
வளமைபணியாவற்றையும் வைத்திடுவேன்சபையில்

வ. வைத்திடுவேன்யென்றுசொன்ன மன்னவரேநீரும்
சித்தமதிலெண்ணுமற் சீறிசொல்லலாமோ

பொது கொச்சகம்.

பொன்னகையுக்துகில்தனையும் போர்வேக்தனிடங்கொடுக்க
திண்ணமதாய்வார்த்தை செப்புகிறான் தப்பிதமாய்
கண்ணுசபைமீதிற்சொன்னால் நகைப்பாரெல்லோருமென
வண்ணமயிலணையாள் வாயிழக்துமதிமறக்தாள்.

வல்லிசொல் விருத்தம்.

தணித்திடுமுல்லையாண்ட தாரபதியனேகம்பேரைத்
தணித்துநான்மசலாச்சொல்லித் துலங்கியேயிருக்தேனீரும்
கனத்தம சலாவால்வென்றீர் காதலியாளுக்தோற்றே
மனத்தினினிணைத்தவண்ணம் மன்னனேமுடித்துக்கொள்வீர்.

அப்பாஸ்சொல் விருத்தம்.

நல்லதுபெண்ணேகாணுன் ஞட்டம்போனடப்பேனீதான்
சொல்விடும்வார்த்தையைப்போல் தோகையைமணஞ்செய்வேன்
வல்லவகாணுமென்றன் வளரரண்மனைக்குப்போறேன்
மென்னவுன்றக்தையோடு மேன்மையாய்ப்பேசுவீரே.

பொது கட்டளைகலிப்பா

அறிவுசேர்ந்திடு மப்பாஸ்மன்னனும் அந்தகற்பகுவீரரிடஞ் சென்று, பிரியமாகத்தழி விப்பின்போற்றியே பெட்புறுசபையோர் களும் வாழ்த்தியே, வரிசையாகமணக்கோலஞ்செய்திட மன்னன் சொற்படி முரசேசாற்றிட, செறிமதார் மூதுக்கிற்பறையிட்ட சேர்ந் தரண்மனைமேவினள் வல்லியே.

மணமுரசடிக்கிற தரு.

மணமுரசடியென்ன குணபறைசாற்றுவோன் வந்தனர்சிலர்மூந்தவே
வந்துஇணைரத்ன தூணெடுபணைரத்ந கால்கொம்புயிருத்தினு ரணி
[பொருத்தினர்
வச்சிரத்தூணெடும் பச்சைமரகதத்தை மருவினர்சிலரறிவினர்கல்ல
அச்சிலேவார்த்தாப்போ லிச்சையாகியவேலை யமர்த்தினர்பந்தலு
[பர்த்தினர்
மன்னவர்கள்வந்துவுன்னதத்தைக்கண்டு மகிழ்ந்தனரவாபுகழ்ந்தனர்
இந்த அன்னவர்களிருக்க கான்மாடகூடங்கள் அமைத்தனர்மேடை
[சமைததனர்
வானமட்டோங்கிடா ஆனைமேல்மணமுரா சேற்றினுரணிசாற்றினு
ரிப்பமானமுடனேவந்தினி லுயர்ந்தவரேவருகுவீர்மொழிதருகுவீர்
மங்களமங்களமுடிக்கிறூர் வாருங்கள்வந்துபாருங்கள் [டினர்
வகைவகைவிபரமாய்ஜெகமெங்குமறியவே மாட்டினர் மொழிகோட்
செய்தாதியெனவெகுவகைவேகமாய்மலர் தாவினர்வந்துமேவினர்
மாடத்திலும்புதுக்கூடங்க ளெங்கனும் தந்தனர்பந்தலெங்கெங்கு
அப்போது- கோடம்புமாககர்காடம்பு கொற்றவர்க்கோதுவார் பலசா
[துவார்

பொது விருத்தம்.

பறைசாற்றமதார் மூதுக்கிலுள்ளோர்கேட்டுப்
பரிந்துமகிழ்ந்தேதெருக்கண்மாடகூடஞ்
சரியெனவேபந்தற்றோ ரணங்கள்கட்டித்
தனிமலரைத்தூக்கிச் சித்ரந்தானமைத்து
அரண்மனையில் மணவறையு மழகாய்ச்செய்து
அதற்குரியகுனோப்பும்வால் சேட்டுக்தூக்கி
நிரைநிரையாய்ச் செய்திருக்கவேண்டுமென
நேரரசனமைச்சருக்கு நிகழ்த்துவானே.

விருத்தம்.

வகையுள்ள மந்திரிகேளாய் மகள்மணஞ்செய்வதாலிந்
நகருள்ளோர்லப்பையாலிம் நாடியேவருகச்செய்வாய்
அகம்புகழ் அரசேயானு மப்படிசெய்வேனென்று
நகுவீரர்பறைசாற்றென்ன தகுதியாய்ச்சாற்றினுரே

தரு.

அந்தநகர்பறை யடிப்பவன் நன்று
யறிந்திடவேயார்க்குஞ் சொலிப்படிப்பவன்
மந்திரிசொல்லிணைப்போற்றி நல்ல
மணிமுரசானதையானைமேலேற்றி
தந்திரமாய்ப்பறைசாற்றி யந்த
மாநகர்தெருவெல்லா மாமலர்தூற்றி
அந்தநகருள்ளோ ரறிந்திட்டார் அந்த
அரசரெல்லோருந் தெரிந்திட்டார்
நன்னயகுணமுள்ளோர் புகழ்ந்திட்டார்
சுற்றுநாட்டினுள்ளோருமகிழ்ந்திட்டார்
சாற்றிடவேவந்து கூடினர் வணந்
தன்னையேநாடி னுகர்ந்தனர்
மாற்றுவினேதங்கண்டு மகிழ்ந்தனர்-அந்த
மணப்பந்தல் தனில்வந்து நிறைந்தனர்.

பொது-விருத்தம்.

நகரமெங்கும் பறைகள்சாற்று நன்மொழி கேட்டெல்லோரும்
மகிமைசேர் ஞானரத்தின வல்லிக்கி மணமுடிக்க
அகம்புகழ் பகுவீரண்ண லவரோடு மந்திரிஞும
தருமணப் பந்தல்தன்னில் பகும்ஹாலிகத்திபும் வந்தார்.

கொச்சகம்.

அந்தமுள்ள பந்தல்தனி லெல்லவருஞ் சேர்ந்திடவே
இந்தபகுவீரரசன் யெல்லவர்க்குமன்புசெய்து
பந்துவரசரிக்கும் பாவனைபோல் பாலிருத்தி
சிந்தைமகிழ்ந்திருக்க ஜெயவப்பாஸ் இருந்தனரே

கலியாணத்-தரு.

மன்னவனும் பகுவீரராசன் மனதுதான்மகிழ
நன்னயமதாக வெல்லோரு காடிமனமகிழ்வாய்

எண்டிசையோர் போற்றுமப்பா ஸென்னுமரசருக்கும்
வண்டுரைமலர்சூடும் வல்லிமாது மின்னாள் தனக்கும்

வந்தஹாலிசத்திப்பு ஆலீம்மனமகிழ்லப்பைகளும்
சிந்தைமகிழ்வாக மார்க்கப்படி சிறப்பாக நிக்காஹ்செய்தார்

நிக்காஹ் முடிந்தபின்பு நல்ல நெறியாய்ப் பாத்திஹாவோதி
ஹக்கனிடந்தனிலே யெல்லோருங் கனமாய்த் துஆசெய்தார்

மன்னரப்பாஸரசர் பகுவீரன்மக ளிருக்கும் அறையில்
அந்நேரமே யழைத்து வல்லியவளருகிலிருத்தி

கையதனைப்பிடித்து மிருவரும் கனமுடன் வாழ்வீரென
தையலர்கள் வாழ்த்தமற்றுந் தாதியரும்போற்ற

ஒண்டோடி தாதியர்கள் ஆலாத்தி யுகப்புடனேந்திநிற்க
அன்று அப்பாஸ்மன்னன்வல்லி யகமகிழ்ந்தேயிருக்க

வந்தவரசருக்கும் தார் மூஅக்கு மாககருள்ளார்க்கும்
சிந்தைகளிகூர்ந்துவந்த ஜெயவாலிம் லப்பைகட்கும்

செங்கன்பகுவீரண்ணனிதயஞ் சிறப்பாகவே கொடுத்து
துங்கத்தாம்பூலமுடன் ஒஜிபனம் துரிதமாய்த் தான்கொடுத்து

வந்தவரெல்லோரும் அவரவர் வாழ்மனைபோய்ச்சேர்ந்தார்
அந்தப்பகுவீரரும் மனைவியும் அகமகிழ்ந்தேயிருந்தார்

பொது-கட்டளைகலிப்பா.

மன்னனப்பாஸ்மது வல்லியுமே மனமகிழ்ந்து மருவிகவிக் கையில், அன்னை தந்தை யிருவரையுஞ்சிந்து அரசன்றன்னிடமாறு மாதங்களாய், இன்னங்கண்ணினிற் காணுதிருப்பது யேற்குமோ விறையோனுக்கென் றெண்ணியே, தன்னுடன்வரலாறு முழுமையுந் தையலர்க்குரைத்தே பின்னும் சொல்வான்.

அப்பாஸ்-விருத்தம்.

என்னிடமனதுக்கேற்ற யேந்திழைவல்லியே கேள்
அன்னைதந்தையைவிட்டு ஆறுமாதங்களாச்சு
உன்னிடதந்தைதாய்க்கு வுகப்புடன் சொல்லிக் கொண்டு
பொன்மையாய் விடைகொடுக்க போகுவோம் வாராய்பெண்ணே

பொது-விருத்தம்.

இவ்விதமாயப்பாஸ் சொல்லும்போது
யெழில்ஞான வல்லியுமே மனமகிழ்ந்து
தந்தைபகுவீரரசன் றனக்குச்சொல்ல
தாய்கேட்டு மயங்கியின னிருவருந்தேர்ந்து
அந்தமாய்ப் பணிபொருள்கள் வரிசையாக
அநேகதாம்பரிசரிக வியாவுமீய்ந்து
விந்தையொடு விடைகொடுக்கப் பெற்றுக்கொண்டு
மேவினார்சகரைவிட்டேகினாரே.

(வசனம்.) இவ்விதமாய் பகுவீர இராஜனிடம் அப்பாஸ்விடை பெற்றுக்கொண்டு தன்மனைவியாகிய ஞானலங்கிர்த வல்லியுஞ்சேனைகளையும் அழைத்துக் கொண்டு மலை வனம் வனுத்திரங்களனைத்துங் கடந்து நடந்து சிந்துதேசம்வந்து சேர்ந்த விதங்காண்க.

பொது-விருத்தம்.

அப்பாஸுஞ்சேனையோடு அன்னகர்க் கேகும்போது
செப்பிய சிந்துராஜன் சேர்ந்திடுந் தளத்தைக்கண்டு
ஒப்பிலொன்னலரோ வென்று ஒருவனை யனுப்பிகேட்க
தப்பிலாவப்பாசென்று தனையனென்றறிவித்தானே.

இதுவுமது

தூதனுமுரைக்கக்கேட்டு தோன்றலாம்சிந்துராஜன்
பேதகமிலாமகிழ்ந்து பெருக்கமாயெதிரேசென்று
நீதமாயழைத்துத்தந்தை தாயிடம்தன்னிற்சேர்க்க
வீதமாய்ச்சென்றுவந்த விபரங்களனைத்துஞ்சொன்னார்.

அப்பாஸ்சொல் விருத்தம்.

நடம்புயவரசேயென்றன் தாய்தந்தையுமதிடத்தில்
அடமானம்வைத்தபொன்னை யளிப்பேனுன்வாங்கிக்கொள்வீர்
கடம்பரிகடத்துமன்று கவில்வதுவழகோதாமு
மிடம்பொருள்யே வலெல்லா மும்மிடசொந்தந்தானே.

பொதுவிருத்தம்.

அன்று சிந்துநகராசன்வந்தபேர்க்கு வன்னகரினுன்ன மனுவனுபேர்க்குந், தின்றுகளிகூர்ந்திடவேவிருந்தளித்து ஜயவப்பாஸ

வர்க்கு மவர் தாய் தந்தைக்கும், நன்றுவிடை கொடுத்தனுப்ப வதனைப்பெற்று நான்குவகைச் சேனையோடு நகருக்கேக, வென்றிய தாய் செல்கையில் முன் விழுந்திறந்த வீதிதனிலேயிறங்கி விடுதி செய்தார்.

இதுவுமது.

விடுதிசெய்துவுணவருந்திவிடிந்தபின்பு வெய்யசுரமதனிலோர் பள்ளிகட்டி, படியிலுள்ள நகரமெலாம் பழிக்கச்செய்யும் படியாக வோர் நகரமதிலுண்டாக்கி, அடைவுபெறபணிதர்களைகுடியுமேற்றி யன்னவர்க்கு ஒருவர்தலைமையரசராக்கி, விடியுமுன்னே நகரை விட்டுப்பதாதி சூழ விரைந்து மாநகரைமேவினரே.

வ-ம். அகோதெப்படி யென்றால் சிந்து தேசத்தையாளும் சிந்துராசன் அப்பாஸுக்கும் அவருடன்வந்த சேனை தளங்களுக் கும் அறுசுவைப் பதார்த்தங்களோடு விருந்தளித்து அப்பாஸ்கூட அவர் தாய் தந்தையும் அனுப்பிவிடைகொடுக்க அவர்களனைவரும் பிரயாணப்பட்டு நடக்கையில் முன்வரும்போது அப்பாஸ் கல்லிரடி விழுந்திறந்த யிடத்தைக்கண்டு அவ்விடத்தில் விடுதிசெய்து விஸ் திரணமாக ஓர் பள்ளிவாசலும் கட்டிவைத்து அங்கு ஓர் பெரிய பட்டணமுண்டாக்கி அந்நகருக்கு ஓர் அரசனும் நியமித்துவிட்டு அவ்விடம் விட்டுப்பிரயாணமாகிசேனைத் தளங்கள் சூழ்ந்துவர நடந்து தன் சுய தேசமாகிய அந்தமாநகர்க் கருகாமையில் சென்று ஓர்மைதானத்தில் கூடாரமியற்றியிருக்கையில் இனி நடக்கப்போகிற விதங்காண்க.

பொது விருத்தம்.

மேவியநகரடுத்து வெளிதனிலிருக்கும்போது
தாவியேயரசேயாளுந் தன்மந்திரி நகருள்ளோர்க்கு
மேவுதூதனையனுப்பி விரைவுடனவர்க்குச்சொல்ல
தாவுமந்திரியூராருஞ் சடுதியில்வந்துகண்டார்.

இதுவுமது

கண்டுமேமந்திரியூரார் கனதுதிசெய்துபோற்றி
பண்டஹுமதுசாமைந்தன் பார்த்திபன் அப்பாஸோடு
கன்றதாயழைத்துக்கொண்டு நகர்வலஞ்செய்துவந்து
அன்றரண்மனையிற்சேர்ந்து அகமகிழ்ந்திருக்கும்போது.

O-, 892, A
N53

இதுவுமது

அத்துமாநகரைச்சேர்ந்த வரசனுக்குத் தூதனுப்ப
பந்தமாயரசர்கேட்டு பாதாதிகள் சூழவந்து
இந்துகோரசரெல்லா மேந்தஹமதுசாய்புக்கு
சொந்தமாய்ப்பட்டங்கட்டுஞ் சுபமதைச்சொல்லுவோமே.

இதுவுமது

உகப்புடனுடை தரித்து வுற்றதோரங்கிபூட்டி
முகப்பினிலிலங்கச்செய்யு முத்தாரப்பணிகள் பூண்டு
மகப்பெரும் அஹமதுசா மதிநிகர்மகுடந்தன்னை
செகப்பிரகாசமாகச் சிரசினிலணிந்திட்டாரே

இதுவுமது

சுயம்வரவே மகுடமுடிபுனைந்த தற்பின் கற்கொடையார் பாவலர்க்கு நன்கைசெய்து, வியனுளதேசத்திராசர் வியக்கச்செய்து மேதினியில் நிரைசெங்கோல் மேன்மையாகி, செயமுடனுந் தேய ராஜரெல்லாஞ் செழிப்புடனே செங்கோலும் புகட்சியாக, நயவுடனே அஹமதுசா அப்பாஸோடு தையவருந்தாரணியில் வாழ்ந்திருந்தார்.

வாழி விருத்தம்

ஆதியிறஸூல்நபி யார்களும் வாழி
அஸ்ஹாபிமார்களும் ஹஸன் ஹுஸைனும்வாழி
முத்திவழிகாட்டுங்குரு மூஹியித்தீனும் வாழி
சுத்தமணியானஷா ஹமீதொலியும்வாழி
சுகமுடன் முஸ்லிம்கள் ஜகமதிலேவாழி
சுகமாகக்கேட்போர் படிப்போரும்வாழி
வேந்தஹமதுசாய்பை சேர்ந்தவரும்வாழி
வித்தான அப்பாஸ் பத்தியாய்வாழி
நேர்மையாஞ்ஞானலங்கிர்த வல்லியும்வாழி

103644

அப்பாஸ் நாடகம் முற்றிற்று.

Printed at Shahul Hameedia Press, Madras.